
# யுத்தபூமி



செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த பூமி

ஆசிரியர்:

**Dr. Kandiah Kunarasa** செங்கை ஆழியான்

B.A. Hons (Cey), M.A., Ph.D., S.L.A.S.

GREENTECH CONSULTANTS (PVT) LTD
Specialists in Natural Resource Management

Team Leader
Continuous Social Impact Assessment - NEHRP

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்
41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 600 098.
☎: 26258410, 26251968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த பூமி

ஆசிரியர்:

**Dr. Kandiah Kunarasa** (*செங்கை ஆழியான்*)

B.A. Hons (Cey), M.A., Ph.D., S.L.A.S.

**GREENTECH CONSULTANTS (PVT) LTD.**

Specialists in Natural Resource Management

Team Leader

Continuous Social Impact Assessment - NEHRP

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்**

**41–B,** சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்

அம்பத்தூர், சென்னை – **600 098.**

☎: **26258410, 26251968**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title : YUTHTHA BOOMI

Author : **Dr. Kandiah Kunarasa**
**(Sengai Aazhiyan)** B.A. Hons (Cey), M.A., Ph.D., S.L.A.S.

GREENTECH CONSULTANTS (PVT) LTD.
Specialists in Natural Resource Management
Team Leader
Continuous Social Impact Assessment - NEHRP

Edition : First - April 2006

Copyright : Author

Code No : A 1399

ISBN : 81 - 234 - 0972 - 9

No. of pages : iv + 130

**Price : Rs. ~~50.00~~**
450/=

Printed at Sri Mahendhra Graphics
Chennai - 14. Ph : 28524338

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இலங்கையில் இனமோதல்கள் வெடித்த நிலைமையில் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்கவும் அங்கு அமைதியை நிலைநாட்டவும் சென்ற இந்தியப்படை அங்குத் தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட்டது என்பது இந்த நாவலின் பின்னணி.

கிட்டத்தட்ட செத்து வாழும் நிலைமையிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் எப்படியெல்லாம் தங்கள் மண் மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நாவல் சித்திரிக்கிறது.

இந்த நாவலின் முக்கிய கதாப்பாத்திரமான மணிவண்ணன் எட்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது அவனது கண்ணெதிரில், அவனுடைய உளவுப் போலீஸ் தந்தை, இயக்கத்தவரால் கடத்தப்படுகிறார். மறுநாள் அவரது தலை மட்டும் பொதுமக்கள் பார்வைக்குக் கிடக்கிறது.

இதனால் அஞ்சி ஒடுங்கிப்போன சிறுவனுக்கு எதிர்காலமே இருளடைந்து தெரிந்ததால் தன்னுடைய சகோதரன்களுடன் கனடா சென்றுவிடுகிறான். பதினொரு ஆண்டுகளுக்குப் பிறகு பத்தொன்பதாவது வயதில் தனது அக்காவின் திருமணத்திற்காக நாடு திரும்புகிறான். திருமணத்திற்குப் பலநாட்களுக்கு முன்பே கொழும்பில் இறங்கிவிட்ட போதிலும் யுத்தத்தால் சிதிலமடைந்துபோன நாட்டில் போக்குவரத்து அற்றுப்போனதன் காரணமாகத் திருமணத்திற்குப் போக முடியவில்லை. திருமணத்திற்குப் பிறகு யாழ்ப்பாணம் சென்ற மணிவண்ணன், தனது தந்தையைக் கடத்தியவர்களில் ஒருவனையே அவனை இன்னாரென்று அறியாமலே அவனது அக்கா திருமணம் செய்திருப்பதைத் தெரிந்து பெரும் அதிர்ச்சிக்குள்ளாகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலைமையில் அவன் தன்னுடைய தாய், அக்காள், தான் திருமணம் செய்ய விரும்பும் பெண் ஆகியோரைக் கனடாவிற்கு அழைத்துச் சென்றுவிட விரும்புகிறான். ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நிலைமைக்கு ஏற்ப சொந்த மண்ணில் வாழ்ந்து மடிவதில் உறுதியாக இருக்கின்றனர். இதில் அவனுடைய காதலி தற்கொலைப்படையைச் சேர்ந்தவள் என்பதைக் கடைசி நேரத்தில் அவளது கடிதத்தின் மூலம் அறிந்து அவளைத் தடுப்பதற்காக அமைச்சர் வரவேற்பு விழாவுக்கு விரைந்து சென்று அவளது கையைப் பிடிக்கும்போது அவள் தனது உடம்பில் இருந்த மனித வெடிகுண்டை அழுத்துகிறாள். குண்டு வெடிக்கிறது.

இதுதான் யுத்தபூமி. இலங்கையில் பிரபலமான தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான செங்கை ஆழியான் இந்த நாவலை யாழ்ப்பாண மண் வாசனையுடன் எழுதியுள்ளார். ஏற்கெனவே பல நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதியுள்ள செங்கை ஆழியான், இந்த நாவலையும் தெளிந்த நீரோடை நடையில் எழுதியுள்ளார்.

-பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்நிகழ்வு

இராணுவத்தின் கனத்த பாதங்கள் யாழ்ப்பாண மண்ணினை அழுத்திக் கொண்டிருந்த ஒரு காலவேளையில், அந்தத் துயரச் சம்பவம் நடந்தேறியது. இருள் கவியாத தெளிவான ஒரு மாலைப்பொழுது. அவனுக்கு அப்பொழுது வயது எட்டாயினும் அந்த நாளினை அவனால் மறக்கவியலாது. வவுனியாவிலிருந்து அப்பா ஊருக்கு வந்திருந்தார். அவனுக்குத் தெரியத்தக்கதாக அப்பா அடிக்கடி வருவதும் போவதுமாகத் திரிகிறார். அவருடைய வலதுகையின் சுட்டுவிரலைப் பற்றியபடி ஒழுங்கையில் இறங்கிய போது அவன் கேட்டான்: ''அப்பா, நீங்க போயிடுவீங்களா?''

அவர் அவன் தலையை அன்போடு தடவி விட்டார்.

''இல்லையடா, ராசா. இனிமேல் போகமாட்டேன். பென்சன் எடுத்திட்டன்''

''பென்சன் என்டால் என்ன?''

அவர் அவனுக்கு விளங்கப்படுத்த முயன்றார். அவனுக்குப் புரியவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் புரிந்தது. அப்பா இனி அவனைவிட்டு எங்கும் போகமாட்டார், தங்களோடு எப்பொழுதும் இருப்பார்.

அவர்கள் நடந்து வந்த ஒழுங்கை வீதியில் ஏறியது. ஒழுங்கைக்கு நேர் எதிரே வீதிக்கு அப்பால் கந்தையா அம்மானின் பனங்காணி. உயர்ந்து வளர்ந்திருந்த பனைகளுக் கிடையே கந்தையா கங்கு மட்டைகளைப் பொறுக்கிக் குவிந்தபடி நின்றிருப்பது தெரிகின்றது. அவரைக் கண்டதும் அப்பா சற்றுத் தயங்கி நின்றார். பின்னர் வீதியைக் கடந்து அப்பக்கம் சென்று, ''கந்தையாண்ணை..'' என்று அழைத்தார்.

''ஆர்?.. எட நம்மட பொலிஸ் சண்முகமே? எப்ப வந்தன்? பென்சன் எடுத்திட்டாய் என்டு முந்தநாள் உன்ர மனிசி கிளி சொன்னவள். மெய்யே? ஏன் ஆறுபது வயசாச்சுதே?..''

அப்பா சிரித்தார்.

''இல்லே.. இனிப்பிரச்சினை அண்ணை. அதனால ஐம்பத்தைந்தில எழுதிக் கொடுத்திட்டன்.

''அதுவும் சரிதான்..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றின் தழுவலில் பனைமரங்கள் சரசரத்தன. அவன் நிமிர்ந்து பார்த்த போது வலக்கமிருந்து மூவர் வேகமாகச் சயிக்கில்களில் வருவது தெரிந்தது. அவர்கள் சாரம் அணிருந்திருந்தனர். சேர்ட்டுகளை மீறி இடுப்புக்கள் பருத்திருந் திருந்தன. அப்படிப்பட்ட அண்ணன்மார்களை அவன் அடிக்கடி கண்டிருக்கிறான்.

அவர்கள் சயிக்கில்களைவிட்டு இறங்கி அப்பாவைச் சூழ்ந்து கொண்டனர். அப்பாவின் விழிகளில் படர்ந்த பயத்தினையும் உடலில் பரவிய பதற்றத்தையும் அவன் கண்டான். அவர் உடல் மெதுவாக நடுங்கியது. கந்தையாவும் அவர்களைப் பயத்துடன் பார்த்தார்.

''அண்ணை. உங்களை விசாரிக்க வேணும். ஒருக்கா வாருங்கோ...'' என்றான் கரகரப்பான குரலில் ஒருவன்.

''சயிக்கிலில ஏறுங்கோ...'' என்றான் மற்றவன். அவன் குரலில் கொஞ்சமும் பணிவில்லை. ''சயிக்கிலில ஏறும்..'' அவனை அவன் நிமிர்ந்து பார்த்தான். கருமைபூத்த அவன் முகத்தில் இனந்தெரியாத வெறி கவ்விக்கிடந்தது.

அப்பா அவனை ஏக்கத்துடன் பற்றிக் கொண்டார். ''ராசா..'' அவனைப்பற்றிப்பிடித்திருந்த கரம் நடுங்குவதை அவன் உணர்ந்தான். அப்பா ஏன் இப்படிப் பயப்படுகிறார்? அவர் விழிகள் அவனை கவலையோடு பார்த்தன. அப்படி ஒரு பார்வையை அவன் ஒரு பொழுதும் சந்தித்ததில்லன். அந்தப் பார்வையில் தொக்கி நின்ற உணர்ச்சிக்கு உருவம் கொடுக்க அவனால் முடியவில்லை. மெல்லிய நீர்ந்திரள் படர்ந்து அவர் விழிகள் மின்னின. அழுகிறாரா?

''அப்பா..'' என்றான் அவன் பயத்துடன்.

''ஏறடா சயிக்கிலில..'' ''மூன்றாவது இளைஞனின் குரல் கடூரமாக வெளி வந்தது. அத்துடன் அவரது தோளினைப்பற்றிச் சயிக்கிலில் இழுத்து ஏற்ற முயன்றான்.

''தம்மிமார், பிள்ளையை வீட்டில விட்டுட்டு வாறன்..''

''அதெல்லாம் அவனுக்குப் போகத்தெரியும். நீர் வாரும்..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அவரைப் பலோத்காரமாகச் சயிக்கில் பாரில் தள்ளி இருத்தினர். ''அப்பா..'' என்று அவன் கத்தினான்.

''கந்தையாண்ணை, பிள்ளையை வீட்டில் விட்டிடுங்கோ..'' அவர் சயிக்கில் பாரில் இருந்தபடி அவனைப் பார்த்தார். அந்தப்பார்வையில் மரணத்தின் இருள் குறுக்கிட்டு மறைத்தது. அவன் விக்கிற்று நிற்க அவர்கள் சயிக்கில்களில் ஏறி விரைந்து மறைந்தனர்.

''வீட்டை ஓடு தம்பி..'' என்று கந்தையா படபடத்தார்.

அவன் ஒழுங்கையில் இறங்கி, ''அம்மா'' என்றலறியபடி வீட்டை நோக்கி ஓடிச்சென்றான். இனந்தெரியாத பயம் பற்றிக் கொண்டது. அப்பாவை எங்கு அழைத்துச் செல்கிறார்கள்?

விடை மறுநாள் தெரிந்தது.

குளத்தடியில் தலை துண்டிக்கப்பட்ட அவரின் முண்டம் கிடந்துது. நூறு யார்கள் தள்ளியிருந்த சந்திச் சுமைதாங்கியில் அவர் தலை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

''எனக்கு அவர்களைத் தெரியும்..'' என்று அவன் அலறினான்.

அந்த வீட்டை இருள் சூழ்ந்துகொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தபூமி!

**கொ**ட்டியாரக்குடாவின் மேற்கு வானில் சரிந்து கொண்டிருக்கும் சூரியனின் கதிர்கள் மெதுவாக அணைந்து வருவதைக் கரையோர வீதியில் ஏமாற்றத்துடன் வந்து கொண்டிருக்கும் மணிவண்ணன் துயரத்துடன் பார்த்தான். குடாக்கடல் அவன் மன நிலைக்கு மாறாக அமைதியாகக் காணப்பட்டது. பிரீமாத் துறையில் ஒரு கப்பல் இழுத்து விடப்பட்டிருப்பது மங்கலாகத் தெரிந்தது. கடற்கரையில் சில மீன்பிடி வள்ளங்கள் ஆடியசைந்தபடி நின்றிருந்தன. அவை மீன்பிடிக்காகக் கடலில் பயணப்படுகின்ற கால வேளைகள் குறுகிவிட்டன.

அவற்றினை உள்வாங்கிக் கொள்ளும் மனநிலையில் அவன் இல்லை.

அவன் எண்ணமும் ஏக்கமும் யாழ்ப்பாணத்தில் நிலைத்திருந்தன. அவன் இங்கு வந்து முப்பது நாட்களுக்கு மேலாகி விட்டன. இன்னமும் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்கான மார்க்கம் கைகூடவில்லை.

கனடாவிலிருந்து விமான மூலம் மிக இலகுவாகப் பயணப்பட்டுக் கொழும்பு சர்வதேச விமானத் தளத்தில் இறங்கிய அன்று தான், பலாலி விமானத்திலிருந்து ஐம்பத்தைந்து பயணிகளுடன் விண்ணில் கிளம்பிய லயன் எயர் விமானம் இரணைத் தீவுக்கடலில் வீழ்ந்து காணமற்போயிற்று. அத்துடன் யாழ்ப்பாணத்திற்கான விமானப்பாதை அடைக்கப்பட்டு விட்டது. சரக்குக் கப்பல் ஒன்று மாதத்திற்கு ஒருதடவை அல்லது இருதடவைகள் யாழ்ப்பாணத்திற்கும் திரிகோணமலைக்கும் பயணிகளை மந்தைகளாக அடைத்து ஏற்றியிறக்கியது. அதில் இடம் பிடிப்பதென்பது இலகுவான காரியமாகவில்லை.

திருகோணமலை நகரப் பிரதேசச் செயலாளரின் பணிமனை முன்னாள் ஆயிரக்கணக்கில் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பயணிகள் ஒவ்வொரு நாளும் தவங்கிடந்தனர். பிரதேசச் செயலாளர் அவர்களுக்குப் பயந்து பல தடவைகள் காணாமற் போனார். தீர்க்க முடியாத நெருக்கடி. அவர்களில் எத்தனை வகையினர்? வன்னியிலிருந்தும் வவுனியாவிலிருந்தும் மன்னாரிலிருந்தும் அகதிகளாக வந்து உப்புவெளி முகாமில் மாதக்கணக்காகக் காத்திருக்கும் யாழ்ப்பாணிகள் மெலிந்து கறுத்து எலும்புக் கூடுகளாகக் கலங்கி நின்றிருந்தனர். வெளிநாடுகளிலிருந்து தம் உறவுகளைப் பார்ப்பதற்காகவும் பிறந்த மண்ணை மிதிப்பதற்காகவும் ஓடி வந்த பலர் கொழும்பிலும் திருகோணமலையிலும் கப்பலுக்காகத் தவமியற்றினர்.

திருமணத்திற்கு நாள் குறித்து விட்டுக் கனடாவிலிருந்து வந்திருக்கும் குருபாதம் அவனுடன் தான் கொழும்பிற்கு வந்தான். மூன்று தடவைகள் திருமண நாள் மீளமீளக் குறித்தாகிவிட்டது. செல்ல முடியவில்லை.

நாளை மறுநாள் செல்கின்ற லங்கா முத்தக்கப்பலில் அவனுக்கு இடங்கிடைக்காவிட்டால், அவனும் தன் நானகாவது அக்காவின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ள முடியாது போய்விடும். அக்கா எவ்வளவு பாசத்தோடு அவனை எதிர்பார்த்திருக்கிறாள்.

நினைக்கும்போது நெஞ்சு கனக்கிறது.

லயன் எயர் ஒழுங்காக ஓடியிருந்தால் அவனுக்கு இவ்வளவு சிரமம் ஏற்பட்டிருக்காது. கனடாவிலேயே ஏயர்லங்காவில் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதற்குரிய ரிக்கற்றுடன் வந்திறங்கியதும் மறுநாள் லயன் எயரில் யாழ்ப்பாணம் சென்றடைய வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டிருந்த வேளையில் லயன எயர கடலில் கரைந்துபோனது. அவர்களுடைய கனவுகளும் ஆசைகளும் கூடவே கரைந்து போயின.

கொழும்பிலிறங்கியதும் எதிர்நோக்கிய பாதுகாப்புப் பிரச்சினைகளும் படையினரின் கெடுபிடிகளும் பயமுறுத்தின. அவன் தன்னைக் கனேடியப்பிரசை என்பதை நிரூபிப்பதற்கு மிகக் கஷ்டப்பட்டு விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உம்முடைய ஐ.சி.எங்க?..''

''நான் எட்டு வயதில் கனடாவிற்குச் சென்று விட்டன். அப்ப எனக்கு ஐ.சி.கிடையாது. நான் கனடாப்பிரசை. பாஸ்போட் இருக்குது''

அவர்கள் கேட்பதாகவில்லை. மூன்று நாட்கள் உள்ளே வைத்து விட்டார்கள். முப்பதனாயிரம் செலவழித்துத் தான் வெளியில் வரமுடிந்தது. அதன் பின்னர் பொலிஸ் ரிப்போர்ட், எம்ஓடி கிளியரன்ஸ் என்பன எடுத்துக் கொண்டு திருகோண மலைக்கு வந்தான். இருபது நாட்களுக்கு மேலாகத் திருகோண மலையில் காத்திருக்கிறான். ஆறுமாதங்களுக்கு மேலாகக் காத்திருப்பவர்கள் பலர் அங்கிருந்தனர்.

ஒரு நாள் எப்படியோ திருகோணமலைப் பிரதேசச் செயலாளரைச் சந்திக்க முடிந்தது. அவன் தன் இடர்ப்பாட்டினை எடுத்துக் கூறினான்.

''சேர், நான் பதினொரு வருடங்களுக்குப் பிறகுதான் இங்க வந்திருக்கிறன். எனக்கு இங்கு எதுவும் புரியவில்லை. என்ர அக்காவிற்குக் கலியாணம். நான் கட்டாயம் அதில் கலந்து கொள்ள வேணும். எங்க குடும்பமே சிதறிவிட்டது. சேர். ஆறுபேரில இப்ப யாழ்ப்பாணத்தில் அக்காவும் விதவை அம்மாவுந்தான். மற்றவை எங்கெங்கோ. அப்பாவை எண்பத தெட்டில கொன்றிட்டாங்கள். அவர் பொலிசில் இருந்தவர்.''

பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் அவன் சொல்பவற் றினை மிகவும் பொறுமையாகக் கேட்டார். இரக்கத்துடன் அவனை ஏறிட்டார்.

''சரி, நீர் கவலைப்பட வேண்டாம். அடுத்த கப்பலில் உனக்கு இடம் கிடைக்கும். முயற்சிக்கிறன்..''

அவனுக்கு நம்பிக்கை நேற்றுவரையிருந்தது. இன்று அந்த நம்பிக்கை அழிந்துவிட்டது. கொழும்பிலிருந்து வந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பட்டியலும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஒருவரின் பட்டியலும் முன்னிடங் களைப்பிடிக்க, அவன் பெயர் ரிசேவ் பட்டியலுக்குத் தள்ளப்பட்டு விட்டது. அவன் பிரதேசச் செயலாளரைச் சந்திக்க எவ்வளவு முயன்றும் முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியில் நடக்கும்போது மனம் கனக்கின்றது.

தங்கியிருந்த லொட்ஜின் அறைக்குத் திரும்பி வந்தான். குருபாதம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான்.

''கப்பல் லிஸ்றில என்ர பெயர் இருக்குது மணி. உன்ர பெயர் றிசேவில போடப்பட்டிருக்கிறது. பார்த்தன். கவலைப்படாதே. எப்படியாவது இம்முறை இடம் கிடைக்கும். றிசேவில ஆறாவது பெயர் உன்னுடையது. பார்த்தன்.''

மணிவண்ணன் அவனைக் கவலையுடன் ஏறிட்டு நோக்கிவிட்டுக் கட்டிலில் பொத்தென அமர்ந்துவிட்டான். குருபாதம் நிச்சயமாக யாழ்ப்பாணம் போகத் தான் வேண்டும். அவனுக்காக அங்கு அவனுக்குப் பேசிய பெண காத்திருக்கிறாள். தொலைபேசியில் ஒவ்வொருநாளும் கண்ணீரோடு பேசுகிறாளாம்.

அக்காவும் அப்படித்தான்.

''தம்பி, எப்படியாவ்து வந்து விடு. மூத்த அண்ணன் மனோகரன் வரவில்லை. அக்காமார் வரமாட்டினம். நானும் அம்மாவும்தான் இங்க. நீயாவது வந்திடு தம்பி.''

அவள் தொலைபேசியில் அழுதாள்.

''அக்கா..'' மனம் அழுகின்றது.

அப்பாவின் மரணத்துடன் அந்தக் குடும்பம் சிதறிப் போயிற்று. அப்போது மூத்த அண்ணனுக்கு வயது இருபது. அவனுக்கு எட்டு. அவர்களுக்கிடையில் நான்கு பேர். அப்பாவின் மரணம் அவர்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் பேரிடியாக இறங்கி அழுத்தி விட்டது.

''இங்க ஒருத்தரும் இருக்க வேண்டாம். எங்காவது ஓடித்தப்புங்கோ..'' என்று அம்மா ஓலமிட்டாள்: ''எங்கையாவது போயிடுங்கோ, பிள்ளையள்..''

யாழ்ப்பாண மண்ணைவிட்டு முதலில் அண்ணன் மனோகரனும் அவனும் புறப்பட்டனர். கனடாவிலிருந்து மாமா அவர்கள் இருவரையும் ஒருவிதமாக அங்கு வரவழைத்துக் கொண்டார். அண்ணனின் கடும் உழைப்பு அக்காமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரையும் வெளிநாட்டுக்கு மணமகள்களாக மாற்றிவிட்டது. ஒரு அக்கா ஜெர்மனியில். மற்ற இருவரும் பிரான்சில் நிலைத்து விட்டார்கள்.

சின்னக்கா அம்மாவை விட்டுவிட்டு வர மறுத்து விட்டாள்.

''நான் வரமாட்டன். இந்த மண்ணைவிட்டு நான் வரமாட்டன். அம்மா இங்க இருக்கும் வரை நன் வரமாட்டன்.''

''என்னை எங்கயும் கூப்பிடாதையுங்கோ. இது அவர் வாழ்ந்த மண். அவர் இங்க தான் இருக்கிறார். இங்க தான் என்ர சடலம் எரிய வேணும்.''

சின்னக்காவிற்கு கலியாணம் நிச்சயமாகிவிட்டது. நாளும் குறித்து விட்டார்கள். இன்னமும் நான்கு நாட்கள் தான் இருக்கின்றன.

கப்பலில் இடம் கிடைக்குமா?

அவன் கட்டிலில் சரிந்து கொண்டான். விழிகளை மூடியதும் நினைவில் பதினொரு வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தை விட்டு அவன் புறப்பட்ட காட்சி நினைவில் சதிரிடுகிறது. அப்பாவை அவர்கள் சயிக்கிலில் ஏற்றிச்சென்றதன் பின்னர், அக்காட்சியை அவனால் மறக்க முடியவில்லை.

கண்முன்னால் நிகழ்ந்துவிட்ட அந்தக் கோரத்தை எப்படி அவன் மறப்பான்? அப்பாவின் அந்தக் கடைசி நேர விழிகள். அவனிடம் அவை எதனை யாசித்தன. அவன் அன்று பயத்துடன் வீட்டிற்கு ஓடி வந்தான். அந்தப் பயம் இன்னமும் நீங்கவில்லை.

எத்தனை கொடுமை. அவன் குடும்பம் தன் அமைதியை அழித்துக் கொண்டது.

அண்ணனும் அவனும் வெளிநாட்டிற்குச் செல்வதற்காகக் கொழும்புக்குச் செல்லும் பஸ்சில் ஏறியபோது எல்லாரும் கண்ணீர் விட்டார்கள். அவன் தான் வாழ்ந்த மண்ணை கடைசியாகப் பார்த்தான். அவன் படித்த பாடசாலை, பாடசாலை நண்பர்கள் எல்லாரும் மனதில் வந்தனர். அம்மன்கோயில், நரியன்குண்டு, தலையாழிவெளி எல்லாம் அடிக்கடி நினைவில் வந்தன. எல்லாவற்றையும் கைவிட்டு அவனும் அண்ணனும் கனடாவிற்கு ஓடிச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் பிறந்து வாழ்ந்த மண்ணில் அவர்களால் வாழமுடியவில்லை.

அம்மாவும் சின்னக்காவும் எஞ்சிவிட்டனர். குடும்பம் என்பது ஒன்றாக வாழ்வதில் அர்த்தம் பெறுகிறது. உறவுகள் பிரிந்து திக்கிற் கொன்றாகச் சிதறிப் போய், தனிமையும் அழுத்தமும் வாழ்வாகிவிட்டது. யாழ்ப்பாணத்தின் இனிமை எங்கும் வராது.

''மணி..''

விழிகளைத் திறந்தபோது குருபாதம் அவன் எதிரில் நின்றிருந்தான்.

''என்ன?''

''சாப்பிடப் போவம்..''

''நான் வரவில்லை, அண்ணை. எனக்கும் ஏதாவது வாங்கி வாருங்க.''

அவனுக்குத் தனிமை தேவைப்பட்டது. அழவேண்டும் போலப் படுகின்றது. குருபாதம் அவனை இரக்கத்துடன் பார்த்துவிட்டு அறைக்கதவைச் சாத்திக் கொண்டு வெளியே சென்றான்.

''அம்மா போயிட்டு வாறன்.. அக்கா போயிட்டு வாறன்..''

அம்மா அவனைக் கட்டிக்கொண்டு விம்மிவிம்மி அழுதாள். உலகத்தின் துயரமெல்லாவற்றையும் விழி நீரால் அர்ச்சித்தாள்.

''அம்மா, போயிட்டு வாறன்..''

''இனி எப்ப காணப்போறன்.. மணி.''

''அப்ப நான இங்க இருக்கிறன் அம்மா. எனக்குப் பயமில்லை.''

அம்மா அவசரமாகக் குறுக்கிட்டாள்: ''வேண்டாம்.. வேண்டாம். நீ போயிடு.''

பதினொரு வருடங்களுக்குப் பின்னர் அவன் மீண்டும் வந்திருக்கிறான். அதற்குள் யாழ்ப்பாண மண்ணில் எவ்வளவோ சங்கதிகள் நடந்தேறிவிட்டன. அவன்இங்கிருந்து புறப்பட்ட போது இங்கு ஆக்கிரமித்திருந்த இந்திய இராணுவமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறி விட்டது. போராளிகளுக்கும் இலங்கை இராணுவத் திற்குமிடையில்மீண்டும்யுத்தம் ஆரம்பமாகி விட்டது. ஓய்வதாகவில்லை.

யுத்தம்.. யுத்தம்.. யுத்த பூமியாக அவன் பிறந்த மண் மாறிவிட்டது.

கொட்டியாரக்குடாவை ஊடறுத்தபடி வானத்தில் விமானம் ஒன்று செல்கின்ற ஒலி எழுந்தது. மணிவண்ணன் ஒரு கனம் திடுக்குற்றான். விமானச் சத்தங்கள் அவனுக்குப் பயந்தந்தன. இளம் வயதில் ஆழ்மனதில் பதிந்து விட்ட வடுக்கள்.

கட்டிலில் எழுந்து அமர்ந்து கொண்டான்.

கப்பலில் இடம் கிடைக்குமா?

எவ்வளவு இலகுவாகவிருந்த பயணங்கள். இன்று இப்படி அவலமாக மாறி விட்டன. ஒரு நாளிலேயே யாழ்ப்பாணத் திலிருந்து கொழும்பிற்கு வந்து காரியங்களைப் பார்த்து விட்டுத் திரும்பி விடக் கூடியளவிற்கு விருத்தியுற்றிருந்த பயணங்கள் இன்று மாதக்கணக்கில் காத்திருக்கும் துயரங்களாக மாறிவிட்டன. வெளியுலகிலிருந்து யாழ்ப்பாணம் துண்டிக்கப்பட்டு விட்டது.

அம்மா இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பாள்? தன் வரவினை எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பார்கள். அக்கா இனிய வாழ்க்கையின் தொடக்கத்திற்கான கனவுகளில் மூழ்கி இருக்க வேண்டியவள். தம்பிக்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பாள்.

குருபாதம் திரும்பி வந்தான்.

''லங்காமுடித காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு விட்டதாம். ஆனால் இங்க பயணிகளை இறக்கி விட்டுக் காலிக்குப்போய் பஸ்களை ஏற்றிக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் போகுமாம். அதன் பிறகு வந்துதான் இங்கிருக்கிற பயணிகளை ஏற்றிச் செல்லுமாம், மணி'' என்றான் துயரத்துடன்.

மணிவண்ணன் ஏக்கத்துடன் குருபாதத்தைப் பார்த்தான்.

''நிச்சயமாக நான் அக்காவின் கலியாணத்திற்குப் போக முடியாது. அண்ணை. இன்னமும் நான்கு நாட்கள் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குது.'' விழிகள் கலங்கித் தவித்தன. குருபாதம் ஆதரவோடு அவன் அருகில் அமர்ந்து அவனைத் தேற்ற முயன்றான்.

''கலியாணத் திகதியைக் கொஞ்ச நாட்கள் பின்போடச் சொல்லன் மணி.''

மணிவண்ணன் துடித்துப்போய் அவனை ஏறிட்டான்.

''யாழ்ப்பாணத்தில் ஒரு கலியாணம் கைகூடுவதென்பது எவ்வளவு கஷ்டம், தெரியாதா அண்ணை? எவ்வளவு கஷ்டப்பட்டு அக்காவிற்கு இந்தக் கலியாணம் சரிவந்திருக்குது. அதை எனக்காகப் பின்போடக்கூடாது. உங்கட விசயம் வேற. நீங்க மாப்பிள்ளை. போனாத்தான் உங்ககூட கலியாணம் நடக்கும். நான் எப்படியும் யாழ்ப்பாணம் போகத்தான் போறன். அக்காவின் கலியாணம் நிச்சயித்தபடி நடக்கட்டும். எனக்காக பின்போடக்கூடாதென நாளைக்குத் தெரிவிக்கப்போறன்.''

அவன் கட்டிலில் மீண்டும் சாய்ந்து கொண்டான்.

வானப்பரப்பில் விமானம் ஒன்று மீண்டும் இரைந்தபடி சீனன்குடா விமானத்தளத்தில் இறங்கியது.

அவன் தன்னை ஒருகணம் சிலிர்த்துக் கொண்டான்.

## 2

திருமணவீடு களைகட்டியிருக்கின்றது. உறவினர்களும் அயலவர்களும் கதிரைகளில் அமர்ந்து யாழ்ப்பாணத்துப் பலகாரங்களைச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிள்ளைகள் கூச்சலிட்டபடி அங்குமிங்குமாக ஓடித்திரிகின்றன. தன்னைத் தவிர எல்லாரும் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கவிதா எண்ணிக் கொள்கிறாள். உண்மையில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டியவள் அவள் தான். ஒருபெண்ணின் வாழ்வில் உன்னதமான தினம் திருமண நாள். அவளுக்கு அன்று நண்பகல் பொழுதில் சுபநேர முகூர்த்தத்தில் நல்லூர் சிவன் கோயிலில் இராசலிங்கம் மாங்கல்யம் அணிந்து தன் துணைவியாக்கிக் கொண்டுள்ளான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணப்பெண் கவலையுடன் இருப்பதா? பார்ப்பவர்கள் என்ன சொல்வார்கள்? இந்தத் திருமணத்தில் இவளுக்கு விருப்பமில்லைப் போலும். அப்படிக் கூறிவிட முடியாது. அவள் காதலித்து வரித்துக் கொண்ட பந்தம். நான்கு ஆண்டுகளாக அவள் அவனைக் காதலித்திருக்கிறாள். அவனுந் தான்.

அம்மாவிற்கு இந்தத் திருமணத்தில் அவ்வளவு விருப்பம் கிடையாது. மூத்த பிள்ளைகள் மாதிரி கவிதாவையும் கனடாவிற்கோ, பிரான்சுக்கோ அனுப்பிவிடத் தான் விரும்பினாள். அந்த நாடுகளிலிருக்கும் சகோதரங்களும் தமது உறவுகளைப் பெருக்கிக் கொள்ளும் விருப்பில் அவளை அனுப்பிவிடும்படி தான் கடிதங்கள் மூலமும் இப்பொழுது தொலைபேசி அழைப்புக்கள் மூலமும் வற்புறுத்தி வந்தார்கள்.

''..கவிதாவை அனுப்பிவையுங்கள். இங்கு நல்லதொரு பையனாகப் பார்த்துக் கட்டி வைத்து விடுகின்றோம். கவிதாவின் படத்தைப் பார்த்து விட்டுப் பலர் வலியப் பெண் கேட்டும் வந்துள்ளனர்.'' என்று மூத்த அண்ணன் மனோகரன் வற்புறுத்தியெழுதத் தொடங்கியதும் கவிதா விழித்துக் கொண்டாள்.

''நான் ஒருக்காலும் வெளிநாட்டிற்குப் போகமாட்டேன்.''

''ஏன் கவிதா? உன் அப்பாவை வெட்டிக்கொன்றபின்னர் இந்த ஊரிலிருக்க ஒருபிள்ளையளும் விரும்பவில்லை. ஓடிவிட்டினம். நீயும் போய் நல்லா இரு பிள்ளை.'' என்று அம்மா பல தடவை வேண்டினாள். அவள் மசியவில்லை.

''அப்ப நீங்களும் என்னுடன் வாங்க. உங்களை இங்க தனிய விட்டிட்டு நான் ஒருக்காலும் போகமாட்டன்.''

அம்மாவின் விழிகள் தொலைவில் நிலைக்கும். அவமாகக் கணவனை இழந்த நூற்றுக்கணக்கான பெண்களில் அவளும் ஒருத்தி. அந்தக் கொடூரத்தின் இருட் கரங்கள் அவளைப் பற்றிக் கொள்ளும். அப்படியே சுவருடன் சாய்ந்து கண்களை மூடிக்கொள்வாள். விழிகள் கலங்கி இமைப்பிளவுகளூடாக நீரைச் சொரியும். மனதில் பெருங்குமுறலும் துயரமும் சேர்ந்து அவளை அப்படியே துவட்டிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவின் துயரம் கவிதாவிற்குப் புதியதல்ல. புரியாதது மல்ல. அம்மாவிற்கு வாழ்வின் அஸ்தமனமாக அப்பாவின் மரணம் அமைந்துவிட்டது. அம்மாவிற்கு மட்டுமா? அந்தக் குடும்பத்திற்குந் தான்.

''அவரைச் சாக்காட்டியவங்கள் ஒருக்காலும் நல்லா இருக்க மாட்டான்கள். அவங்களுக்குச் சாவு இயற்கையாக வராது.''

''குற்றம் புரிந்துவிட்டு அமைதியாக எவனும் இருக்க முடியாது, அம்மா.''

''எப்படி மனம் வந்தது?'' என்று கேள்வியுடன் அம்மா மௌனமாகிவிடுவாள். கவிதா பார்த்துக்கொண்டிருக்கத் தக்கதாக அம்மாவை முதுமையின் காலத் தழும்புகள் வேகமாகப் பற்றிக் கொண்டன. அவள் வயதொத்த பலர் இன்னமும் ஆரோக்கியத் துடன் இருக்க அம்மா சொற்ப காலத்துள் கிழவியாகிவிட்டாள். இந்த மண்ணில் வாழ்வும் வளமும் முறிவடையாத தாம்பத்திய உறவில் தான் கட்டப் பட்டிருக்கின்றது. திருமண பந்தத்தில் ஒருவரின் மறைவு ஏற்படுத்தி விடும் சோகத்திற்கு இந்த வுலகத்தில் பிறிதொரு துயரம் ஒப்பாகாது. அம்மா அப்பாவின் மரணத்துடன் ஆசாபாசங்களற்ற துறவு வாழ்க்கையை கைக்கொண்டவள் ஆகிவிட்டாள். யந்திரமாக அந்த வீட்டில் கடந்த பதினொரு வருடங்களாக அம்மா உலவி வருகிறாள்.

''இந்த வீட்டில் அவர் என்னுடன் சீவிக்கிறார் கவிதா. அப்படித்தான் எனக்குப்படுகின்றது. அவர் அசைவை நான் உணர்கிறன். நான் இந்த இ வீட்டிலேயே சாகும் வரை இருந்துவிடுகிறன்.''

இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் வாழநேர்ந்த ஆறுமாத அவல வாழ்க்கையில் அம்மா தன் சொற்ப நிம்மதியையும் இழந்து விட்டாள். எப்பொழுதும் பாயில் சுருண்டு கிடப்பாள். ஒரு கட்டத்தில் கவிதா பயந்துபோனாள். சாவகச்சேரியில் அம்மாவை இழந்து விட்டுத்தான் தனித்துவர நேரிடுமோவென்று. ஆறுமாத இடம்பெயர் வாழ்வில் பின்னர் மீண்டும் ஊருக்குத்திரும்பி வந்தபின்னர் தான் அம்மாவின் முகத்தில் தெளிவு ஏற்பட்டது.

கவிதாவின் திடமான முடிவு தெரிந்தபின்னர் அண்ணன், அக்காமார் அம்மாவிற்கு எழுதினார்கள்: ''கவிதா சொல்வதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாகத் தான் படுகிறது. உங்களுக்காக அவள் அங்கு இருக்கத் தான் வேண்டும். அப்படியானால் ஊரிலியே ஒரு நல்ல பையனாகப் பாருங்கள். அவளுக்கும் வயதாகிவிட்டது.''

கலியாணப்பேச்சுக்கள் மும்முரமாக நடக்கத்தொடங்கிய போது, அவள் தன் விருப்பத்தை மெதுவாகத் தாயிடம் கூறிவிட்டாள்.

''இராசலிங்கத்தை நான் விரும்புகிறன் அம்மா.''

''எந்த இராசலிங்கம்?''

''அவர் கொக்குவிலில கராஜ் ஒன்று வைச்சிருக்கிறார். மெக்கானிக்.. நல்லவர், அம்மா.''

அம்மாவிற்குப் பெரும் ஏமாற்றமாகவிருந்தது. கவிதாவிற்கு நல்ல உத்தியோகத்துடன் ஒரு மாப்பிள்ளையைத் தேடி எடுத்து விடக்கூடிய சீதனம் அவர்களிடம் இருக்கின்றது. அப்படியிருக்க அவள் இப்படி சொல்கிறாளே?

அவளுக்கு இராசலிங்கம் அறிமுகமான சம்பவம் நன்கு நினைவில் வருகின்றது. எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்துவரும் இருவர் சந்திப்பதற்கு வாய்க்கின்ற சந்தர்ப்பம் எப்பொழுதோ நிர்ணயித்த காரியமாக அவளுக்கு இப்பொழுது படுகின்றது. கொக்குவில் சந்தியில் அது நிகழ்ந்தது. அவள் ஆடியபாதம் வீதியிலிருந்து திடுமென காங்கேசன்துறைவீதியில் சயிக்கிலுடன் ஏற, பிரதானவீதியிலிருந்து ஆடியபாதம் வீதிக்குத் திரும்பிய மோட்டார் சயிக்கிலில் இராசலிங்கம் இருந்தான். அவன் நிதானமாகவும் தன் பக்கமாகவும் மோட்டார் சயிக்கிலில் வந்தும் கவிதா தப்பான பக்கமாக வந்து பிரதான வீதியில் ஏறியதால்.. அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. விக்கித்துப்போய்த் தடுமாற அவன் அவளைக் காப்பாற்றும் எண்ணத்துடன் மோட்டார் சயிக்கிலை மடக்கித்திருப்ப, அது தறிகெட்டு ஓடி வீதியின் மருங்கேயுள்ள வெள்ள வாய்க் காலுக்குள் பாய்ந்தது. அவன் அப்படியே தூக்கியெறியப்பட்டான்.

அவளும் வீதியில் சயிக்கிலுடன் சரிந்துவிட்டாள்.

''சரியான விசர் பெட்டை. ஒழுங்காகச் சயிக்கில் ஓடத்தெரியாது. தெருவுக்கு வந்திட்டுதுகள்.'' என்று பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைத்திட்டித் தீர்த்தனர். அவள் வெட்கத்துடனும் துயரத்துடனும் எழுந்துநின்றாள்.

இராசலிங்கத்தின் தலையில் வெள்ளவாய்க்காலின் கொங்கிறீற் சுவர் பலமாகத் தாக்கியிருந்தது. மண்டை பிளந்து அப்படியே அவன் முகத்தை இரத்தச் சிவப்பாக்கியிருந்தது. அவன் மயக்கமுற்று அப்படியே கிடந்தான். அவனைப் பலர் தூக்கி வீதியருகில் வளர்த்தினர்.

''பொடியன் முடிஞ்சுது போல..''

''ஐயோ..'' என்று வீரிட்டாள் கவிதா.

இப்பொழுது நினைத்தாலும் அவளுக்கு உடல் நடுங்குகிறது. முகமெல்லாம் இரத்தத்தில் தோய்ந்து பயங்கரமாக அவன் கிடந்தான். தன்னால் அவன் இப்படியாகிவிட்டான் என்ற நினைவு அவளைச் சுட்டெரித்தது.

தெரிந்தவர்கள் அவனைக் கார் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். அன்று முழுவதும் அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. அவன் எப்படி யிருக்கிறானோ? உசிருக்கு ஏதாவது நடந்து விட்டால்..? அந்தப்பழி எனக்குத் தான்.

''இஞ்ச பார் கவிதா. சும்மா கிடந்து கவலைப்படாதை. வா நாங்க ஒருக்கா ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்து விட்டு வருவம்..'' என்று அவள் தோழி வாணி அழைத்தபோது அது நியாயமாகப்பட்டது.

''ஆரும் ஏதாவது சொல்ல மாட்டினமே?''

''என்ன சொல்கிறது? ஆஸ்பத்திரிக்கு வருத்தம் பார்க்கப் போவதில என்ன பிழை? தீயடி சரியான பயந்தனி. வா போயிட்டு வருவம்.''

''அம்மாவிட்ட சொல்லிப்போட்டுப் போவமே?''

''ஒன்டும் வேண்டாம் வா. பார்த்திட்டு வந்து சொல்லுவம். இப்ப அந்தாள் உசிரோட இருக்குதோ இல்லையோ?''

அவள் இதயம் ஒருகனம் நின்று துடித்தது.

''அப்படிச் சொல்லாதையடி..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். அவன் கட்டிலைச் சுற்றிப்பலர் நின்றிருந்தார்கள். அவன் தலையில் பெரும் கட்டுடன் படுத்திருந்தான். அவனது விழிகள் திறந்திருந்தன. அதனைக்கண்ட கவிதாவிற்கு நிம்மதிப் பெருமூச்சு வெளிப்பட்டது. 'அவருக்கு ஒன்றுமில்லை. கடவுள் காப்பாற்றிவிட்டார்.' அவளைக் கண்டதும் அவன் சிரித்தான்.

''இங்க கிட்ட வாரும்.'' என்று கண்களால் அழைத்தான்.

அவள் தயங்கித் தயங்கி அவன் கட்டில் அருகில் சென்றாள். அவள் கால்கள் மெதுவாக நடுங்கின.

''உமக்கு ஒன்றுமில்லையே?'' என்று அவன் அக்கறையுடன் கேட்டான்.

''இல்லை. உங்களுக்கு..?''

''பெரிதாக ஒன்றுமில்லை. ஆக மண்டை பிளந்து பதினெட்டுத் தையல். அவ்வளவு தான். அம்மா. இவ தான் அந்தச் சயிக்கில்காரி.

கட்டிலருகில் நின்றிருந்த நடுத்தரவயதுடைய ஒரு பெண் அவளை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் பார்வையைச் சந்திக்க முடியாமல் கவிதா தலையைக் குனிந்துகொண்டாள்.

''என்னில தான் பிழை..''

''இனியாவது கவனமாகச் சயிக்கில் ஓடு பிள்ளை..'' என்றாள் இராசலிங்கத்தின் தாயார், பாக்கியம்.

''நான் நல்லாச் சயிக்கில் ஓடுவன். என்ன நடந்ததென்று தெரியவில்லை.''

இராசலிங்கம் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவன் கறுப்பு முகத்தில் பற்கள் பளீரெனத் தெரிந்தன.

இப்பொழுது நினைத்தாலும் அவளுக்குச் சிரிப்பு வருகிறது.

''கானுக்க கிடக்கேக்க நல்லா சிவப்பாக இருந்தியள். ஆஸ்பத்திரிக்கட்டிலில நல்ல கரியாகத் தெரியந்தியள்.''

''நீர் நல்ல சிவப்புத்தான். அப்ப ஏன் என்னை விரும்புகிறீர்? நல்ல சிவப்பு மாப்பிளையாய் பாருமன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் முகம் வாடிவிடும்.

''கோபமா? சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னன். கறுப்பெண்டாலும் உங்கட லட்சணம் யாருக்கு வரும்.''

அவர்களிடையே அந்தச் சந்திப்பிற்குப்பின்னர் உறவு பலத்துவிட்டது.

முதலில் அண்ணன் இத்திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளத் தயங்கினான்.

''அண்ணை, அவர் மிக நல்லவர். என்னைக் கண் கலங்காமல் வைத்துக் காப்பாற்றுவார். ஒமெண்டுங்கோ..'' என்று அவள் தொலைபேசியில் கெஞ்சிக்கண்ணீர் விட்டதும் மனோகரன் ஒப்புக்கொண்டான்.

''சரி தங்கச்சி, அது உன்ர வாழ்க்கை. உனக்குச் சரியெனப்பட்டால் சரி. நீ தான் வாழப்போகிறது..''

''கலியாணத்திற்கு வருவியளோ?''

''எப்படி வாறது தங்கச்சி. எல்லாத்துக்கும் மணிவண்ணனை அனுப்பி வைக்கிறம். மாப்பிளைத் தோழன். யாழ்ப்பாணத்திற்கு வரவேண்டுமென்று துடிக்கிறான்.''

---

திருமணம் முடிந்துவிட்டது. மாப்பிள்ளைத் தோழன் இலங்கை மண்ணில் கால் பதித்தும், யாழ்ப்பாணத்திற்கு வரமுடியவில்லை. திருகோணமலையில் கப்பலிற்குத் தவம் கிடக்க நேர்ந்துவிட்டது.

கவிதாவின் இதயத்தில் பாரம் அழுத்துகிறது. தம்பி வந்திருந்தால் எப்படிச் சந்தோசமாக இருந்திருக்கும்? மாப்பிள்ளைத் தோழனாக அவன் நின்றிருப்பான். அவருக்குப் பாதநீர் வார்த்து அவரிடம் மோதிரம் வாங்கி மாட்டியிருப்பான். அவனது உரிமையைக் கந்தையா அம்மாவின் பேரன் ஒருவனுக்கு வழங்க நேர்ந்துவிட்டது. நினைக்க நினைக்கத் துக்கமாகி மனம் கனக்கிறது.

இராசலிங்கம் திரும்பி அவளைப் பார்த்திறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன கவிதா, சந்தோசமாகவே இல்லை. முகம் வாடி வதங்கி மகிழ்ச்சியாக நீரில்லை. ஏதோ கட்டாயப்படுத்திக் கலியாணம் செய்து வைத்ததுபோல எதையோ இழந்தது போல இருக்கிறீர்?.. ''இராசலிங்கத்தின் குரலில் மென்மையும் அக்கறையும் கலந்திருக்கின்றன. அவள் தன்னைத் தேற்றிக் கொண்டாள். மற்றவர்கள் முன்னிலையில் அவள் அப்படி ஏங்கிப்போய் மலர்ச்சியின்றி இருக்கக்கூடாது.

''அப்படியில்லை. தம்பியை எண்ணிக்கொண்டன்.''

அவன் குறும்பாகச் சிரித்தான்.

''கவலைப்படாதையும், ஓரிருநாட்களில் வந்திடுவான். நான் நிச்சயமாக இன்னொரு மாப்பிளைத் தோழன் மோதிரம் அவனுக்கும் போடுவன்.''

''விசா..'' என்று கவிதா சிரிக்கிறாள்.

அவனிடம் அவளுக்குப்பிடித்தவை அவனின் குதர்க்கப் பேச்சுக்கள் தாம்.

''கொஞ்சம் பொறுத்திரும். ஆருக்கு விசரென ராவைக்குச் சொல்லுறன்.'' அவள் முகம் ஓடிச் சிவக்கிறது.

## 3

கரைக்கோடு கண்பார்வையிலிருந்து மெதுவாக மறைந்து வந்தது. கொட்டியாரக் குடாவைவிட்டு வெளியேறிய லங்கா முடிதக் கப்பல் ஆழ்கடலினுள் பிரவேசித்து வடக்கு நோக்கித் தன் பயணத்தை ஆரம்பித்தது. ஆயிரத்திற்கு மேற்பட்ட அவலப் பயணிகள் அக்கப்பலில் சரக்குகளாக ஏற்றப்பட்டிருக்கின்றனர். பயணத்தின் அவல அனுபவங்களை அவர்கள் தாங்கிக் கொள்ளத் தயாராகவிருக்கின்றனர். திருகோணமலையில் மாதக்கணக்காகத் தங்கித் தவமிருந்து கிடைத்த அரிய பயணச் சந்தர்ப்பம்.

கப்பலின் மேல்த் தளத்தில் நின்றிருந்த மணிவண்ணன் பெருமூச்சொன்றினை கடற்காற்றில் கலக்கவிட்டான். பாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பலாயினும் இந்து சமுத்திரத்தின் அலையெறிதலிற்குத் தாக்குப்பிடித்தபடி சற்றுத்தள்ளாடியது. பயணம் ஒத்துக் கொள்ளாத பலர் வாந்தியெடுக்க ஆரம்பித்து விட்டனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீர்ப் பரப்பு விரிந்து கிடந்தது. வெறித்துப் பார்த்தபடி அவன் நின்றிருந்தான்.

சின்னக்காவிற்குத் திருமணம் முடிந்திருக்கும். நான்கு நாட்களாகியிருக்கும். அக்காவிற்குக் காதலிக்கத் தெரிந் திருக்கின்றதே? வியப்பாகவிருக்கின்றது. இந்த உலகத்தில் அனைத்து மனிதகுலத்திற்கும் நன்கு தெரிந்த உணர்வு அதுவாகத் தான் இருக்கும். காதல் உணர்வற்றவன் மானிட வாழ்வின் சொர்க்கத்தை இழந்தவனாவானென யாரோ ஓர் அறிஞன் கூறியிருக்கிறான்.

அவனைப் போலப் பலர் கப்பலின் மேல் தளத்தில் நின்றிருந்தனர். சிலர் ஆர்வத்தோடு கடலை வெறிக்கப் பார்த்தனர். கப்பலின் அடித்தளத்தில் மோதிய அலைகளின் தாக்கம் பிறப்பித்த நுரைத்திரள் குவிந்து சிதைந்து கொண்டி ருக்கிறது. சின்னக்காவின் கலியாணம் அவர்கள் இல்லாமல் நடந்தேறிவிட்டது. கூடப்பிறந்த சகோதரங்கள் குழுமிநிற்க நடந்திருக்க வேண்டிய திருமணம் அது. எவ்வளவு குதூகலமாக இருந்திருக்கும்? அண்ணன், அக்காமாரின் பிள்ளைகள் மணப்பந்தலில் கூச்சலிட்டபடி குறுக்கும் நெடுக்குமாக ஓடி விளையாடி ஆனந்திக்க இந்தத் திருமணம் நடந்திருந்தால் எவ்வளவு இனிமையாக இருந்திருக்கும்? யாருமேயில்லாத அனாதை போல அக்கா மணவறையில் அமர்ந்திருப்பாள்.

ஆ, அப்பா இருந்திருந்தால் அவர் அம்மாவுடன் சின்னக் காவின் கரத்தை அத்தானின் கரத்தில் பிடித்துக் கொடுத்து இரத்தம் பண்ணியிருப்பார். மணவறையின் இடது பக்கத்தில் சின்னக்காவின் அருகில் அமர்ந்து தம்பெண்ணின் திருமணச் சடங்கில் கலந்து கொள்ள முடியாது போன துயரத்தை அம்மா எப்படித் தாங்கியிருப்பாள்? மௌனமாகக் கண்ணீர் விட்டிருப்பாள்.

அப்பாவின் இழப்பு அன்று அம்மாவிற்குப் பெரிதாகத் தெரிந்திருக்கும். கந்தையா அம்மானும் அவர் மனைவியுந் தாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் பண்ணிக்கொடுக்கின்ற பாக்கியத்தைப் பெற்றிருப்பார்கள். அவன் உறவினர்களின் கூடிய சொந்தம் அவர்களுக்குத் தான்.

வானத்தில் பொட்டுக்களாக நட்சத்திரங்கள் தெரிய ஆரம்பித்தன. குளிர் காற்று உடலினை வருடிச் செல்கின்றது. அவன் அசையாது நின்றிருக்கின்றான். அவன் உள்ளக்கடலில் நினைவுக் கப்பல்கள் எழுவதும் வீழ்வதுமாகப் பயணப்பட்டன.

அவன் அருகில் குருபாதம் வந்து நிற்கின்றான். மணிவண்ணனின் தோளில் தன் கரத்தைப் பதித்து, ''என்ன மணி, யோசினை? நாளைக்கு யாழ்ப்பாணம் போய் விடுவோம்.'' என்கிறான். மணிவண்ணன் திரும்பி அவனைப்பார்த்தான். வலக்கரத்தால் முகத்தினை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

''சின்னக்காவிற்குக் கலியாணம் முடிந்திருக்கும்.''

சகோதரியின் திருமணத்தில் கலந்து கொள்ளாமையின் ஏக்கம் அவனுக்குப் புரிகிறது. கனடாவிலிருந்து இங்கு வந்தும் கலந்து கொள்ள முடியாதுபோனது பெரும் துயரந்தான். ஆதரவாக அவன் முதுகினைத் தடவிவிட்டான். அவன் சிந்தனைத்தடத்தினை மாற்ற விரும்பி, '''உன் அக்காவின் கலியாணம் பேசிச் செய்த கலியாணமா?'' என்று கேட்டான்.

''இல்லை. காதல் திருமணம். நான்காண்டுகளாக ஒருவரையொருவர் விரும்பியிருக்கினம். கிட்டடியில தான் எங்களுக்குத் தெரிய வந்தது.''

''அது அப்படித் தான். ஊரெல்லாந் தெரிந்த விடயங்கள் உறவினருக்குத் தெரிய வருவது கடைசியில தான்.''

''குரு, உம்முடைய திருமணத்திற்கு நான் வருவன். நாளையிண்டைக்குத் தானே?''

''நிச்சயமாக உன்னை எதிர்பார்ப்பன். கட்டாயம் வந்திடும்.''

மணிவண்ணன் அவனை ஆழமாகப் பார்த்தான்.

''உமது கலியாணம் காதல் திருமணமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம் சற்று மௌனமாகவிருந்தான். முகத்தில் சிரிப்பின் மலர்ச்சி.

''இல்லை. முற்றாக்கிய கலியாணம் தான். எனக்கு எங்கே காதலிக்க நேரமிருந்தது? சின்ன வயதிலேயே வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டேன். ஆனால் என் அம்மான் மகள் என்னை விரும்பியது எனக்குத் தெரியும். அம்மா விரும்பவில்லை. சீதனம் பார்த்தா? இப்ப துளசியைப் பேசி முற்றாக்கியிருக்கிறறா?''

''நீர் தவறு செய்துவிட்டீர், குரு. காதலிக்கப்படுவது எவ்வளவு இனிமையானது?''

வெளியே குளிர்காற்று உடலை அழுத்திச் செல்கிறது. அவர்களின் வயதும் பேச்சின் தடமும் அதனைப் பொருட்படுத்த விடவில்லை. மணிவண்ணன் குருபாதத்தை ஏறிட்டான்.

''எனக்கொரு நண்பன் ரவி. இருக்கிறான். அவன் கனடாவில் ஆடாத கூத்தில்லை. எல்லாக் கெட்ட பழக்கங்களும் அவனிடமிருந்தன. திடீரென அவற்றினை எல்லாம் கைவிட்டு விட்டான். விடயம் இதுதான். அவனின் மச்சாள் எழுதிய கடிதம். அவள் தன் காதலைக்கொட்டி எழுதியிருந்தாளாம். எங்களால் அவனை மாற்ற முடியவில்லை. ஒரு பெண்ணால் முடிந் திருக்கிறது. அவள் கேட்பதை நிறைவேற்றாமல் இருக்க என்னால் முடிவதில்லை என்கிறான்.''

''சாப்பிடவேண்டாமென்றால் சாப்பிடாமல் இருப்பான் போல..''

இருவரும் கலகலவெனச் சிரித்தனர். குருபாதம் கூறினான்: ''மணி இந்த உலகத்தில் மனிதத்தன்மை எப்பொழுது பூரணமாகின்றது தெரியுமா?''

''சொல்லும்..''

''ஆணும் பெண்ணும் ஒன்று சேர்வதில் தான், மனிதத்தன்மை பூரணமாகின்றது. மணி. காதல் ஊற்றற்ற மனிதன் ஆணாகவிருந்தாலும் சரி பெண்ணாகவிருந்தாலும் சரி அவர்கள் மானிட இயல்புகளை இழந்தவர்கள் என நினைக்கிறன். ஆனால் யாழ்ப்பாணத்து மண்ணில் இன்று காதல் இரண்டாம் பட்சமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. இளம் வயதினரின் எண்ணங்களையும் ஏக்கங்களையும் தேசத்தின் நிலை, அவலநிலை பாதித்துள்ளது.''

மணிவண்ணன் அவசரமாகக்குறுக்கிட்டான்.

''அப்படிச் சொல்ல முடியாது.''

தூரத்தில் ஒளிப்பொட்டொன்று தெரிகிறது. இன்னொரு கப்பலாக இருக்கலாம்.

''சாப்பாடு எடுத்து வாறன்.'' எனக் குருபாதம் அவ்விடத்திலிருந்து அகன்றான். மணிவண்ணன் அப்படியே நின்றிருந்தான். பின்னர் நடந்து மேல் தளத்தில் இடப்பட்டிருந்த பலகை இருக்கையில் அமர்ந்து கொண்டான். அந்த இருக்கையின் ஒரு பக்கத்தில் ஒரு பெண் அமர்ந்திருப்பது தெரிகின்றது. மங்கிய ஒளியில் அவள் ஏதோ சிந்தனை வயப்பட்டவளாகக் காணப்பட்டாள். எதேச்சையாக அவன் திரும்பி அவளைப் பார்க்க அவளும் அவனைப்பார்த்தாள். நட்பிற்குரியதான புன்னகை அவர்களிடையே விரிந்தது.

''அவர் உங்கள் நண்பரா?'' என்று அவள் கேட்டாள்.

''ஆர் குருபாதமா? ஓமோம்..''

''காதல் பற்றிப் பேசிக்கொள்கின்ற காலமா, இது? மரணங்களும் சொத்தழிவுகளும் இடப்பெயர்வுகளும் தமிழ் மக்களை அடிவேருடன் பெயர்த்தெறிந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் வாழ்வதற்கும் காதலிப்பதற்கும் இந்தத் தேசத்தில் எங்கு இடமிருக்கிறது?'' அவள் கவலையுடன் கூறினாள். மணிவண்ணனை வியப்பு ஆட்கொண்டது. அவன் சற்று வித்தியாசமான ஒரு பெண்ணைச் சந்திக்கிறான். அவள் தலைமுடிகள் காற்றில் அள்ளுப்பட்டு முகத்தில் சரிந்தன. அவற்றினை ஒதுக்கிவிட்டபடி அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''அப்ப எதைப்பற்றிப் பேசவேண்டும்?''

''யுத்தத்தைப் பற்றிப் பேசுவோம். காட்டுமிராண்டிகள் போல ஒருத்தரையொருத்தர் வெட்டியும் சுட்டும் அழிக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாகரிகத்தைப் பற்றிப்பேசுவோம். இந்த மண்ணில் எமக்கு ஏற்பட்டிருக்கும் அவலத்தை நீக்குவதற்கான வழிமுறைகள் பற்றிப்பேசுவோம். கடந்து பதினைந்து ஆண்டுகளாக நாம் அனுபவித்து வருகின்ற வேதனைகளைப் பற்றிப் பேசுவோம். இந்த மண்ணில் நாம் இழந்துபோன வாழ்வினை மீட்டெடுப்ப தற்கான வழிவகைகள் பற்றிப் பேசுவோம். அதன் பின்னர் காதலைப்பற்றியும் பேசலாம்.''

அவனை அவன் ஏறிட்டு வியப்புடன் பார்க்கிறான். வித்தியாசமான பெண். அவள் தொடர்ந்தாள்: ''இந்தத் தேசத்தில் இப்பொழுது எஞ்சியிருப்பன எவை தெரியுமா? அழிந்து போன கிராமங்கள். அழிந்து போன ஆசாபாசங்கள். நம்பிக்கை வறட்சி. வறுமை. உறவுகளை இழந்து தவிக்கும் மானிடம். சொந்த மணண்ணிலேயே அகதிகளாக எஞ்சிவிட்ட மக்கள். துன்பங்கள், துயரங்கள்.. இராணுவ அழுத்தங்கள். பயமும் பீதியும் எங்கும் நிறைந்திருக்கின்றன. சொந்த மண்ணில் எவருக்கும் பாதுகாப் பில்லாத நிலை.''

அவன் மௌனமாகினான். அவனால் எதுவும் பேச முடியவில்லை. அவளைப்பற்றிய வியப்புத்தான் அதிகரிக்கிறது.

''நான் கனடாவிலிருந்து வருகிறன். சின்னக்காவின் கலியாணத்திற்காக வருகிறன். பதினொரு வருடங்களுக்குப் பின்னர் வருகிறன்.''

''அப்ப உங்களுக்கு எங்கள் துயரம் தெரியாது.''

''தெரியும்..''

''பார்வையாளர்களாகத் தான் தெரியும். நாங்கள் இந்த மரண பூமியில் நித்தம் வாழ்ந்து வருபவர்கள்.''

அவன் கோபத்துடன் குறுக்கிட்டான்: ''இல்லை. எனக்குத் தெரியும். என் அப்பாவை அநியாயமாகக் கொன்றார்கள். தலையைத் துண்டித்துச் சுமைதாங்கியில் வைத்தார்கள். முண்டத்தை வீதிக்கானில் எறிந்தார்கள்.''

அவள் இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள்.

''அதனைக் கண்டு பயந்து இந்த நாட்டைவிட்டு ஓடினீர்களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன செய்வது? அப்பொழுது எனக்கு எட்டு வயது..''

''இங்கிருந்திருக்க வேண்டும். அந்த அநீதிக்கு எதிராகப் போராடியிருக்க வேண்டும். குரல் தந்திருக்க வேண்டும். நானாகவிருந்தால் ஓடமாட்டேன். கொக்குவிலிருந்து இடம் பெயர்ந்து சாவகச்சேரிக்கு ஓடிவந்தம். இராணுவம் வருகின்ற தென்று கேள்விப்பட்டதும் பின்னர் சாவகச்சேரியிலிருந்து வன்னிக்கு ஓடினம். அங்கு நிகழ்ந்த குண்டு வீச்சில் என் அப்பாவும் ஒரேயொரு தம்பியும் பலியாகினர். நானும் அம்மாவுந்தான் மிஞ்சினம். இப்ப அங்கிருந்து வவுனியா வந்து திருகோணமலையில் எட்டுமாதங்கள் காம்பில் அடைபட்டு கிடந்து இப்ப யாழ்ப்பாணத்திற்கு மீண்டும் வருகிறம். என்ன அவல வாழ்வு..?'' அவள் தன் விழிகளைத் துடைத்துக் கொண்டாள். அவள் இதயத்தில் கனன்றுகொண்டிருக்கும் எரிமலை எக்கணமும் வெடிக்கலாம். எல்லாருக்கும் இழப்புக்கள் இருக்கின்றன.

''நீங்கள் கொக்குவிலா?''

''ஓம். நீங்கள்..?''

''நானும் கொக்குவில் தான்.''

''அப்ப நீங்க பொலீஸ் சண்முகமாமாவின் மகன்.. மணிவண்ணனா?'' என்று அவள் வியப்புடன் கேட்டாள்.

''எப்படித் தெரியும்?''

''எங்க அம்மப்பா சொல்லியிருக்கிறார். கந்தையா.. கறுவல் கந்தையா எனபினம். அவா மகள் அன்னமலரின் மகள் நான். ராசாத்தி..''

''ஓ மை கோட்..'' என்றான் மணிவண்ணன்: ''எவ்வளவு இனிமையான சந்திப்பு? நான் எதிர்பார்க்கவில்லை. அன்னமலர் அக்காவை எனக்குத் தெரியும். நினைவிருக்கிறது.''

''கவிதா அக்காவிற்கா கலியாணம்?''

''ஓமோம். கந்தையம்மான் தான் ரெத்தம் பண்ணியவர்.''

அவ்விடத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரங்களைப் பரிமாறிக்கொள்ளும் போது மனதின் அழுத்தம் இறங்கிவிடுகின்றது.

''நீங்க இப்படிக் கதைப்பியனெண்டு நான் எதிர் பார்க்கவில்லை.''

மணிவண்ணன் அவளை ஏறிட்டுப்பார்த்தான்.

''நான் மட்டுமல்ல. இன்டைக்கு யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருவரும் இப்படித் தான் பறைவினம். ஏனென்டால் நாம் படுகின்ற அவலங்கள். அனுபவிக்கின்ற துயரங்கள் அப்படி..'' என்கிறாள் ராசாத்தி.

கப்பல் நகர்ந்து கொண்டிருக்கின்றது. பலர் வாந்தியெடுத்துக் களைத்துச் சுருண்டு கிடப்பது தெரிகின்றது. கீழ்தளத்தில் எவரும் வாந்தியெடுக்காதில்லை. வாந்திக் கழிசலிடையே அவர்கள் துவண்டு கிடந்தனர். மேல் தளத்தில் தற்காலிகமாகக் கட்டப்பட்டிருந்த றம் கழிவறைகளின் முன்னர் பலர் வரிசையாகக் காத்திருந்தனர்.

ராசாத்தி அவனைப் பார்க்கிறாள்.

''ஆப்பிரிக்காவிலிருந்து மனிதர்களை அடிமைகளாகப் பிடித்து இப்படித்தான் கப்பலில் மந்தைகள் மாதிரி அடைத்து அமெரிக்காவிற்குக் கொண்டு போனார்களோ? அவர்களுக்கும் எங்களுக்கும் சிறிதும் வித்தியாசமில்லை.''

''இருக்கிறது..''

''எப்படி?''

''அவர்கள் கழுத்தில் ஒருவரொடருவர் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தார்களாம். நாங்கள் அப்படியல்ல.''

அவள் துயரத்துடன் சிரிக்கிறாள்.

''ஒப்பரேசன் லிபரேசனின் போது பருத்தித்துறையில் பிடிபட்ட அறுநூறுக்கும் மேற்பட்ட மக்களின் கரங்களைப் பின்னால் கட்டி, ஒருவரின் கழுத்தில் சுருக்கிட்ட கயற்றினைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலித் தொடராக மற்றவர்களின் கழுத்துகளில் மாட்டித்தான் பருத்தித்துறையிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொழும்பிற்குக் கொண்டு வந்தார்களாம். கட்டப்பட்ட நிலையிலே அவர்கள் கடலில் பயணப்பட்டனராம்.''

''எனக்குத் தெரியாது.'' என்றான் அவன் கவலையுடன்.

''உங்களுக்குக் கன விசயங்கள்தெரியாது. நாங்கள் இப்பொழுது எங்குப் போகிறோம் தெரியுமா?''

''யாழ்ப்பாணத்திற்கு..''

''இல்லை.. திறந்த வெளிச் சிறைச்சாலைக்கு.. நான் சொல்லவில்லை. யாழ்ப்பாண ராணுவ அதிகாரி ஒருத்தர் அப்படித்தான் சொல்லியிருக்கிறார்.'' என்றாள் அவள். அவள் முகத்தில் அழுத்தம் படர்ந்தது.

## 4

**கு**ரிக்குருவி ஒன்று வீரிட்டபடி வீட்டு முற்றத்திற்கு மேலாக வடக்குப்பக்கமாக விரைகிறது. நெஞ்சில் யாரோ உதைத்தது போன்ற பிரமை கிளிக்கு ஏற்பட்டது. முகத்தில் கலக்கம் தெரிய எதிரில் அமர்ந்திருந்த கந்தையாவை ஏறிட்டுப்பார்த்தாள். பிறப்போடு ஒன்றிவிட்ட இயற்கைச் செய்திகளில் எவ்வளவு உண்மையிருக்கிறதோ இல்லையோ நம்பிக்கையிருக்கில் மனம் கலக்கமடைகிறது.

''அதொன்டுமில்லை, கிளி.'' என்றார் கந்தையா: ''இதுகளை நம்பாதை. நமது நம்பிக்கைகள் அபத்தமானவை.''

''அப்படிச் சொல்ல முடியாது அண்ணை. அவர் சாகிறதுக்கு முந்தி எனக்குப் பல அபசகுனங்கள் நடந்திருக்கின்றன.''

''அவற்றையும் சண்முகத்தின் மரணத்தையும் இணைக் காதை, தங்கச்சி, இயற்கை நிகழ்வுகளுக்கு முன்னறிவித்தல் தரும். விதிக்கல்ல.'' என்றார் கந்தையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர் அவமாகச் செத்தது விதி என்கிறியளா?'' அவளின் முகத்தில் துயரம் அப்பத் தொடங்குகிறது?'' அவர் காலம் வந்து சாகவில்லை. வயதாகிச் சாகவில்லை. கடும் நோயில் விழுந்து சாகவில்லை. இடைநடுவில் அவரது பயணத்தை முறித்து விட்டார்கள்.''

முற்றத்து மாமரத்தில் ஒரு அணிலால் துரத்தப்பட்டு ஓடிய இன்னொரு அணில் ஒன்று தவறி முற்றத்தில் விழுந்து ஒருகணம் அசையாது கிடந்துவிட்டு வேப்பமரத்தில் சரசரவென ஏறிக்கொண்டது. அவக்அவக்கெனக் குரல் தந்தது. மண்ணில் அணில் விழுந்த அதிர்ச்சியில் தூக்கம் கலைந்த நாய் விழிகளைத் திறந்து உயரப் பார்த்தது.

''அண்ணை, கப்பல் எப்ப வரும்? மணிவண்ணன் வருகிறான்.''

''அன்னமலரும் ராசாத்தியும் அதில வருகினமாம்.'' என்றார் கந்தையா சோகத்துடன்:'' இங்கிருந்து ஓடேக்க நான்குபேராகப் போச்சினம். இப்ப ரெண்டு பேரைப் பழி கொடுத்திட்டு அனாதைகளாக திரும்பி வருகினம். சுமங்கலியாகப் போனவள் அதனை இழந்துவிட்டு வருகிறாள், தங்கச்சி.'' குரல் தளுதளுத்தது. கண்கள் கலங்கிவிடுவன போலத் தவித்தன. முற்றத்தில் படுத்துகிடந்த நாயைப் பார்த்தபடி சிந்தனையில் ஆழ்ந்தார்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வில் இப்படி எத்தனை இழப்புக்கள்?

ஹோலில் கவிதாவும் இராசலிங்கமும் அமர்ந்திருக்கின்றனர். இங்கிருந்து பார்க்கும்போது அவர்கள் சுவரில் தொங்கும் சண்முகத்தின் படத்தைச் சுட்டிக்காட்டி எதுவோ பேசிக்கொள்வது தெரிகின்றது. பொலீஸ் சீருடையில் சந்தனப்பொட்டுடன் சண்முகம் படமாகியிருக்கிறார். படத்திற்கு மாலை சூட்டப் பட்டிருக்கின்றது.

'என்ன பேசிக் கொள்வார்கள்' என கிளி நினைத்துப் பார்த்தாள்.' அவர் தான் என் அப்பா. அவரைத் தான் பாவிகள் அவலமாக வெட்டிச்சரித்தார்கள். தலை ஓரிடமும் உடல் வேறிடமாக மீட்டோம். அவர் செய்த குற்றம் பொலீசில் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தது தான்.' என்று கவிதா கூறுவாள். இராசலிங்கம் அப்புகைப்படத்தினை ஆழமாக உற்றுப்பார்த்துக் கொண்டிருப்பது தெரிகின்றது.

''கவிதாவின் நிறத்திற்குப் பொடியன் சற்றுக் கறுப்பு.. என்னைப்போல..'' என்று கந்தையா சிரிக்கிறார்.

''பொடியன் கறுப்பென்டாலும் நல்ல குணமானவன். முதலில எனக்கும் இந்தக்கலியாணத்தில விருப்பமில்லைத்தான் அண்ணை. விசாரித்துப் பார்த்ததில பொடியன்ர குணம் பிடிச்சுக் கொண்டது. கலியாணம் என்பது எங்கட கையிலா இருக்குது. ஆருக்கு ஆரென்டு எப்பவோ முடிவாகிவிட்டது அண்ணை.'' என்றான் கிளி பெருமிதத்துடன்.

''அதெல்லாம் சரி தங்கச்சி. எனக்கு ஒரு விசயம் தான் கொஞ்சம் பிடிக்கவில்லை.'' என்று அவர் இழுத்தார். அவரின் முகத்தினைக் கிளி ஏறிட்டுப்பார்த்தாள். விழிகளில் அதென்ன என்ற வினா கொக்கியிட்டிருக்கிறது.

''பொடியன் முந்தி ஏதோ இயக்கத்தில இருந்து விலகினவனாம்.''

கிளி சற்று வினாடிகள் எதுவும் பேசாமலிருக்கிறாள். பின்னர் விழிகளைத் திருபபி இராசலிங்கத்தைப் பார்த்தாள்.

''அப்படியிருக்காது அண்ணை.''

''இந்தியன் ஆமி இருந்த நேரத்தில் இருந்தவன் என்கினம். இப்ப இல்லையாம். பயப்படத் தேவையில்லை.''

அப்பேச்சினை அவள் விரும்பவில்லையெனப்படுகிறது. பேச்சை மாற்ற, ''கப்பல் விடியவெள்ள வந்திடும். அண்ணை. அவயள் இங்க வரப் பின்னேரமாகுமாம். இருங்கோ தேத்தண்ணி கொண்டு வாறன்.'' என்றபடி கிளி எழுகிறாள். ஹோலில் அமர்ந்திருந்த கவிதாவிற்குத் தாயின் குரல் கேட்கிறது.

''நான் ஊத்தி வாறன் அம்மா.'' என்று எழுந்து அடுக்களைக்குள் நுழைய இராசலிங்கம் எழுந்து அவர்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு வந்து கதிரையொன்றில் அமர்ந்து கொள்கிறான். அவர்களைப் பார்த்து அன்புடன் புன்னகைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தம்பி, எப்ப நாள் கடைக்குப் போகிறது?''

''நீங்க எப்ப கராஜ் திறக்கிறதெண்டு கேக்கறியளோ? அது இப்பவும் நடக்குது. நிக்கிற பொடியன் நடத்துவாங்கள்.'' என்றான் அவன் தன் பின் தலையைத் தடவியபடி.

கந்தையா சிரிக்கிறார்: ''அதில்லைத் தம்பி. புதிதாகக் கலியாணம் கட்டினால் நாட்டைக்குப் பொம்பிளை விட்டார் மாப்பிள்ளையை அழைத்துப் போவினம்.''

''அது மணிவண்ணன் வந்ததும் தான்.'' என்று கிளி அவசரமாகக் குறுக்கிட்டாள்.

''நல்ல பழக்க வழக்கங்கள்..'' என்றான் இராசலிங்கம்.

''அவற்றிற்கு எதாவது அர்த்தங்கள் இருக்கும், தம்பி. ஒரு இனத்தின் கலாசாரம் அவர்கள் கைக்கொள்ளும் சடங்குகள், சம்பிரதாயங்களில் தான் தங்கியிருக்குது. நமது சடங்குகள் சம்பிரதாயங்கள் எப்படியோ? சில அபத்தமானவையாக எனக்குப் படுகின்றன. ஆனால் நமது அறநெறிகள் உயர்வானவை என்பது என் அபிப்ராயம்..''

கந்தையாவை இராசலிங்கம் மதிப்புடன் ஏறிட்டான். தான் பேசிக்கொண்டிருப்பது சாதாரண கிராமத்து மனிதரல்லர். பலவற்றினையும் தெரிந்திருக்கும் ஒரு அனுபவஸ்தரிடம் என்பதைப் புரிந்துகொண்டான்.

''அம்மான், நீங்கள் எங்கு படிச்சியள்?''

கந்தையா பெரிதாக வாய்விட்டுச் சிரித்தார்.

''அனுபவம் தான் என் பள்ளிக்கூடம்..''

தேநீருடன் கவிதா வருகிறாள். வரும்பொழுது கந்தையாவின் வார்த்தைகள் காதுகளில் விழுகின்றன.

''அவருடன் பேசி உங்களால் ஜெயிக்க முடியாது. அம்மானுடன் கதைக்கிறதே பெரிய அனுபவந்தான்.''

கவிதா நீட்டிய தேநீர்த்தம்ளரை அவர் வாங்கிக் கொண்டார். இராசலிங்கமும் வாங்கிக் கொண்டான். ரீப்போவில் தேநீர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டத்தினை வைத்துவிட்டு அதில் எஞ்சியிருந்த தம்பளரைக் கவிதா எடுத்துக் கொண்டாள்.

''மாமிக்கு.. கவிதா?''

அவ்விடத்தில் சிலகணப்பொழுதுகள் அமைதியின் பயங்கர ஆட்சி. கவிதா தாயை இரக்கத்துடன் நிமிர்ந்து பார்த்தாள். விழிகள் படக்கெனத் தளும்பின. இராசலிங்கம் எதுவும் புரியாமல் மனைவியை ஏறிட்டான்.

''அப்பா செத்ததிலிருந்து அம்மா தேத்தண்ணி, கோப்பி எதுவும் குடிப்பதில்லை. விட்டுவிட்டா. காலையில எதுவும் சாப்பிடுவதுமில்லை. மத்தியானம் ஒருநேரச் சோறு. இரவில் வற்புறுத்தினால் இரண்டு இடியப்பம்.. புட்டு. அவ்வளவு தான்.'' என்ற கவிதாவின் குரல் தளுதளுத்தது. கணவனை நிமிர்ந்து துயரத்துடன் பார்த்தாள். அவன் மாமியை இரக்கத்துடனும் பக்தியுடனும் விழிகளால் மரியாதையுடன் ஏறிட்டான். உள்ளத்தில் சுளீரென வலி கண்டது.

''ஒருவரின் மரணத்துடன் இந்த உலக வாழ்க்கை முடிந்துவிடுவதில்லை, மாமி.''

''எனக்கு உலகமே அவர் தான் தம்பி.''

அவர்கள் வெகுநேரம் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. நேரக்கழிவில் கிளி எழுந்து உள்ளே சென்றுவிட அவ்விடத்தில் இனந்தெரியாத சோகத்தின் சுவடுகள் எஞ்சியிருந்தன.

''ஒரு மரணத்தின் தொடர்ச்சியாக எத்தனை பேரின் வாழ்வில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. அநீதிகளின் தொடர்ச்சியாக இந்த மண்ணில் யுத்தம் நிலைத்து விட்டது.''

''அப்பாவைக் கொன்றவங்கள் என்றும் நல்லா இருக்க மாட்டார்கள்.'' என்று கவிதா விம்மினாள்: ''அப்பா எவ்வளவு நல்லவர். எங்கள் மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தார். அம்மா மீதும் பிள்ளைகள் மீதும் இப்படி வாஞ்சை செலுத்திய ஒருவரை நான் காணவில்லை. அவர் ஒரு சோலி சுரட்டிற்கும் போக மாட்டார். தானுண்டு தன் வேலையுண்டென்றிருப்பார். அவரை இப்படிக் கொன்று விட்டார்களே?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசலிங்கம் கவிதாவைக் கவலையுடன் பார்க்கிறான். அவளின் உணர்வுகளை அவனால் புரிந்து கொள்ள முடிகின்றது.

''அவற்றை மறந்துவிடுவோம். பிள்ளை. நாம் அனைவரும் தவறு செய்யக்கூடியவர்கள் தான். அதனால் மற்றவர்களின் தவறை மன்னித்துவிடுவோம்.'' என்ற கந்தையாவை அவள் வெறியுடன் பார்க்கிறாள்.

''இது மன்னிக்கக்கூடியதா, அம்மான்? என்னால் நிச்சயமாக முடியாது. மன்னிக்க என்னால் முடியாது.''

''முடிஞ்ச கதையளை விடுங்கோ.'' என்றபடி கந்தையா எழுந்து புறப்பட்டார்.

முற்றத்தில் இறங்கி நடந்து கதவைத்திறந்து கொண்டு வெளியேறும் வரை அவர்கள் பார்வை அவரில் நிலைத்திருந்தன. வெள்ளை வெளேர் என்ற வேட்டியும் தோளிலிடப்பட்டிருந்த சால்வையும் கவிதாவிற்கு நன்கு பரிச்சயமானவை. அப்பா செத்த பிறகு அவர்களுக்குப் பாதுகாப்பும் உதவிகளும் அவர் மூலந்தான் கிடைத்தன.

ஊருக்கு அவர் ஆலோசனைகள் தேவைப்பட்டன. அவர் எல்லாவீட்டுக் காரியங்களையும் தன் வீட்டுப்பணியாக முன்னின்று செய்விப்பார். அம்மாவிற்கு அவர் ஒரு வழியில் ஒன்று விட்ட அண்ணர். அம்மாவிற்குக் கலியாணம் பேசி முற்றாக்கிச் செய்து வைத்தவர் அவர் தான். கவிதாவின் திருமணத்தையும் அவர் தான் முன்னின்று செய்து வைத்தார். அவளை இராசலிங்கத்திற்குத் தந்தையின் தானத்தில் இருந்து பாணிக்கிரகனம் செய்து வைத்தவர்கள் அவரும் அவர் மனைவியும்தாம். அவரது பாதங்களில் அவர்கள் பணிந்தபோது அவர்களின் தோள்களைப் பற்றித் தூக்கி ஆசீர்வதித்தார். அப்பொழுது அவர் கூறியவை கவிதாவின் காதுகளில் இப்பொழுதும் கணீரிடுகின்றன.

''பிள்ளைகள், கலியாணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர். பிரிக்க முடியாத பந்தம். திருமணத்தின் வெற்றியென்பது ஒருவரையொருவர புரிந்து கொள்வதிலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதிலுந்தான் தங்கியிருக்கின்றது. ஒருவரின் நலனிற்காக மற்றவர் வாழந்தால் குடும்பத்தில் பிரச்சினையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காது. வாழ்க்கையென்று வந்தால் அது பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். ஒத்துமேவி நடந்தால் அவை பிரச்சினைகளேயில்லை. இந்த உலகத்தில் இன்பமும் துன்பமும் சரிசமனாகத் தான் இருக்கின்றன. இரவிற்குப் பின் பகல் வரும் என்பதைப் பலர் மறந்துவிடுகிறார்கள். நல்லா இருங்கள். அமோகமாக வாழுங்கள்.''

கவிதா அவரை மதிப்போடு நெஞ்சில் இருத்திக் கொண்டாள்.

''என்ன கவிதா, கடும் யோசினை?''

''ஒன்டுமில்லை. கந்தையா அம்மானை எண்ணிக் கொண்டன்.''

''அந்த மனிசனைப்போல இப்ப ஒருத்தரைக்காணபது கஷ்டம், கவிதா.''

அவர்கள் மத்தியானம் சாப்பிடுபோதும் அவர் பற்றியே பேசிக்கொண்டார்கள். அம்மாவையும் வற்புறுத்தித் தங்களுடன் சாப்பிட வைத்தார்கள்.

''தம்பி நாளைக்கு வந்திடுவான், அம்மா.''

''நல்லா வளர்ந்திட்டான். படத்தில பார்த்தன். எட்டுவயதில் என்னைப்பிரிந்து சென்றவன். பதினொரு வருடங்களுக்குப்பிறகு வாறான். என்ர பிள்ளையைக் கூடவே வைத்து வளர்த்து அவனின் வளர்ச்சியைக் காண்கின்ற பாக்கியம் எனக்குக் கிடைக்க வில்லை.''

அம்மாவின் விழிகள் கனவுகளில் மிதந்தன.

''தம்பியை கனடாவிற்கு அனுப்பாமல் இங்கயே மறித்து விடுவம், அம்மா.''

''வேண்டாம் கவிதா. இங்க இருக்கமுடியாது.''

''நாங்கள் இருக்கவில்லை?''

அம்மாவிற்கு எதுவித பதிலும் உடனடியாகக் கூறத்தெரிய வில்லை. சேலைத் தலைப்பால் முகத்தினை அழுத்தித் துடைத்துக்கொண்டாள். அவன் இருப்பானா? கனடாவில் வாழப்பழகிவிட்டவன் இங்கு இருக்கச் சம்மதிப்பானா? இருவது வயது இளைஞன் சுதந்திரமாக வாழ இந்த மண்ணில் முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடன் அவன் தங்கியிருந்து எனக்குக் கொள்ளியிட்டால் எவ்வளவு நன்றாகவிருக்கும்? அந்தப்பாக்கியம் எனக்குக் கிடைக்கப்போவதில்லை. நீண்ட பெருமூச்சு அம்மாவின் நாசிகளிலிருந்து வெளிப்பட்டது.

''என்ன அம்மா?''

''தம்பிக்கு இங்க ஒரு கலியாணம் செய்து வைத்து அனுப்பிவிடவேண்டும்.'' என்றாள் அம்மா இருந்தாற்போல.

''அவனுக்கு இப்ப இருபது வயதுதான் அம்மா.''

''அதிலென்ன? நான் கலியாணம் செய்தபோது எனக்குப் பதினேழு வயது. உன் அப்பாவிற்கு இருபத்தொன்று..''

''நல்ல அம்மா..'' என்று கவிதா சிரித்தாள்: ''தம்பி ஒப்புக்கொள்ள வேண்டுமே?''

அம்மா எல்லாவற்றையும் ஒருகணம் மறந்து சிரிக்கிறாள்.

''அவனை எப்படியாவது ஒப்புக்கொள்ள வைப்பம்.''

## 5

அன்னை மண்ணில் பாதங்கள் பட்டதும் மணிவண்ணன் தன்னை ஒருகணம் சிலிர்த்துக் கொண்டான். பதினொரு வருடங்களுக்குப் பின்னர் அவன் கால்கள் பிறந்த மண்ணை ஸ்பரிசிக்கின்றன. பாதங்களினூடாக உச்சிக்குக் குளிரேறியது போன்ற பரவச உணர்வு. காங்கேசன்துறையை அவனால் அடையாளம் காணமுடியவில்லை. எல்லாம் புதிதாகத தெரிந்தன. பார்த்தவிடமெங்கும் இராணுவத்தினர் தென்பட்டனர்.

ஆங்காங்கு இராணுவ சென்றிகள் காணப்பட்டன. அவற்றிடையே வரலாற்றுச் சின்னங்களாக மாறிவிட்ட குடியிருப்புக் கட்டிடங்கள் கூரையிழந்து, சிதிலமாகிக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தன. நெஞ்சம் கனத்தது. பார்க்குமிடமெங்கும் அழிவுக் கோலங்கள். மக்கள் வாழ்ந்த காணிகள் காடார்ந்து பற்றைகள் மண்டி ஆயிரங்காலப் பழமையைக் காட்டின. நெஞ்சு கனக்க அவன் நிற்க அருகில் நிழலாடியது. திரும்பிப் பார்த்தான்.

-ராசாத்தி.

''இது தான் எங்க தேசம்''

''அவன் அவளை ஆழமாகக் கவலையுடன் பார்த்தான்.

பஸ்சில் அவர்களை ஏற்றி காங்கேசன்துறை வீதியூடாகப் பலத்த காவலுடன் அழைத்துவரும் போது இருதசாப்த யுத்தத்தின் பயங்கர அழிவுகள் தெரிந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் வரை பெரும் பாழ் வெளியாக விரிந்தது. இடிந்த கட்டிடங்களும் பற்றைகளும் தவிர வேறெதுவுமில்லை. மனிதர்கள் அப் பிரதேசத்தில் ஒரு காலத்தில் செழிப்பாக வாழ்ந்திருக் கிறார்கள் என்பதற்குச் சான்றுகளாகப் பாரிய கட்டிடங்களும் சிதிலமாகிப் போன ஆலயங்களும் தெரிந்தன. தெல்லிப்பளைச் சந்தி வரை அவன் பார்த்த காட்சிகளில் இழந்துவிட்ட பாரிய நிலப்பரப்பு மட்டுமா தெரிந்தது? ஒரு காலத்தில் உன்னத கனவுகளுடன் தனித்துவமான சோபையுடனும் வாழ்ந்த மக்களது இழப்புக்களும் தெரிந்தன.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிற் கோபுரம் மட்டும் துயரத்தின் பீறிடலாக உயர்ந்து நின்றிருந்தது. அதற்குப்பின்னால் சிதைந்து போன கோயில் மண்டபங்கள் வரலாற்றினை இழந்து நின்றிருந்தன.

''எங்கள் நாடு அழிந்துவிட்டது.'' என்றான் மணிவண்ணன். அவனுக்கு முன் சீற்றில் அமர்ந்திருந்த ராசாத்தி அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

''நாடென்பது நிலமும் மண்ணும் தாவரமுமல்ல.. நாடென்பது என்னைப்பொறுத்தவரையில் மக்கள் தான். யாழ்ப்பாணத்திலிருந்து மக்கள் வெளிநாடுகளுக்கு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஓடுவதை நிறுத்த வேண்டும். ஒன்பது இலட்சம் மக்கள் வாழ்ந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்று நாலரை இலட்சம் மக்கள் தான் இருக்கினம். அவர்களில் பெரும்பாலோர் வெளிநாடுகளுக்கு ஓடிவிட முடியாத ஏழைமைப்பட்டவர்கள். அல்லது உத்தியோகத்தர்கள். ஆக மிகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பமானவர்கள் தான் இந்த மண் பற்றுடன் இங்கேயே வாழ்ந்து விடவேண்டுமென்ற துணிச்சலுடனும் ஆவலுடனும் இருக்கின்றனர். இருக்கின்ற ஒருத்தரும் இந்த மண்ணை விட்டு ஓடக்கூடாது. இது நாங்க பிறந்த மண். வளர்ந்த மண். எங்கள் தாயகம்.'' ராசாத்தியின் குரலிலும் விழிகளிலும் அசாத்தியத் தெளிவு தெரிந்தது.

''சத்தம் போட்டுக் கதைக்காத ராசாத்தி. ஆமி..'' என்றாள் அருகில் அமர்ந்திருந்த அன்னமலர்.

''இந்தக் காட்சிகளைக் காண வயிறு பற்றியெரியுதம்மா.''

''எங்கட இதயமே எரிந்து கருகிவிட்டதடி..''

மணிவண்ணன் அப்படியே உறைந்துபோனான்.

அவனும் ராசாத்தி சொல்வதுபோல இங்கிருந்து ஓடிப் போனவன் தான். கனடாவின் குளிரில் வாழப்பழகி விட்டவன். யாழ்ப்பாணத்தின் பங்குனி வெயில் அவனுக்குப் பழக்கப்படச் சில நாட்கள் செல்ல வேண்டும். கனடாவின் கொங்கிறீட் கட்டிடங்களில் பளிங்குபோன்ற சாலைகளில் திரிந்து பழக்கப்பட்டவனுக்கு யாழ்ப்பாண வீதிகளும் தெருவோரத்தின் சிதைந்த கட்டிடங்களும் ஏமாற்றத்தையும் ஏக்கத்தையும் தந்தன. சோபையிழந்து யாழ்ப்பாணத்துத் தெருக்கள் கிடந்தன. வழி நெடுகிலும் இராணுவ சென்றிகள் காணப்பட்டன. கப்பலில் ராசாத்தி சொல்லிய வார்த்தையின் உண்மை புலப்படத் தொடங்கியது.

-திறந்த வெளிச்சிறைச்சாலை.

அவர்களை யாழ்ப்பாணப் பிரதான பஸ் நிலையத்தில் இறக்கிவிட்டனர். பதினொரு வருடங்கள் கழிந்தும் யாழ்ப்பாண நகரம் மாறிவிடவில்லை. அதே பழைய கட்டிடங்கள். கடைகள். காட்சிகள். யாழ்ப்பாண நகரம் மட்டுந்தான் சற்றும் மாறாதிருப்ப தாக அவனுக்குப்பட்டது. ஓட்டோக்களும் கார்களும் அதிகம் காணப்பட்டன. கட்டைகளில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த பழைய கார்கள் புதுப்பொலிவுடன் வீதிக்கு வந்துவிட்டன.

அதே ஏ போர்ட்டி, மொரீஸ் மைனர், கேம்பிரிஜ்.. ராசாத்தி சொல்வது போல எல்லாரும் ஓடாது இங்கேயே தங்கிவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பழைய நிலைக்கு வர மூன்றாண்டுகள் கூட அதிகம் தான். ஓ, அவள் ஒரு விசயத்தை மறந்துவிட்டாள். வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தில் தான் யாழ்ப்பாணத்தின் பலவீடுகளில் அடுப்பெரிகின்றது என்ற உண்மையை அவர் எப்படிக் கவனத்திற்கெடுக்கவில்லை?

அவன் ஏன் வெளிநாட்டிற்கு ஓடிப் போனான்? அவனுக்கு அப்பொழுது எட்டு வயது. இந்திய அமைதிப்படை இலங்கை மண்ணில் கால்களை அழுத்தத்துடன் பதித்துக்கொண்ட காலவேளை. இந்திய இராணுவம் யாழ்ப்பானத்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயன்ற காலம். பலாலியூடாகப் பல்லாயிரக்கணக்கான இந்தியச் சிப்பாய்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி நகர்ந்தனர். இலக்கில்லாமலும் கண்மூடித்தனமாகவும் ஷெல்களையும் ஆட்லறிகளையும் முன்னே ஏவிக்கொண்டு துருப்புக்கள் வெறித்தனமாக நகர்ந்தன. கவசவாகனங்கள், டாங்கிகள், வரிசை ஒன்று பாரிய சங்கரங்களால் தோட்டங் களையும் வீதிகளையும் உழுது சிதைத்தபடி எதிர்ப்பட்ட கட்டிடங்களைத் தகர்த்தபடி முன்னேறி வந்தது. அதன் பின்னால் திரள் திரளாக இந்தியச் சிப்பாய்கள் நகர்ந்தனர். அவர்களுக்குக் கண்ணில் பட்டவர்களெல்லாம் எல்ரிரியினர் தாம். சுட்டுத் தள்ளிக்கொண்டு வந்தனர்.

அந்த நாள் மணிவண்ணனுக்கு இன்று நன்றாக நினைவிருக்கின்றது. அந்தவேளை அவன் கோண்டாவி லிருக்கும் இரத்தினம் மாமா வீட்டில் நின்றிருந்தான். சனிக்கிழமை. வீட்டிற்கு வந்திருந்த இரத்தினம் மாமா அவனைத் தன்னுடன் கோண்டாவிலுக்கு அழைத்து வந்திருந்தார். இந்திய இராணுவம் கோண்டாவிலுக்கு வந்தவேளை அவனும் இரத்தினம் மாமாவும் தோட்டத்தில் நின்றிருந்தனர். ஷெல் சத்தங்கள் எழுந்ததும் அவசரம் அவசரமாக அவர்கள் வீட்டிற்கு ஓடி வந்தனர். வீட்டிற்குள் பதுங்கிக் கொண்டனர். அவன் பயத்தால் விதிர்விதிர்த்து நடுக்கமடைந்தான். மாமியைப் பயத்துடன் கட்டிக் கொண்டான்.

''நான் இருக்கிறன். ஒன்டுக்கும் பயப்படாதை மணி.''

அதேநேரத்தில் கோண்டாவில் சந்திக்கு அப்பால் இந்திய இராணுவத்தை போராளிகள் எதிர்கொண்டனர். முன்னேறிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாங்கிகளை பசூக்கா கொண்டு தாக்குவதற்கு அவர்கள் தயாராக நின்றிருந்தனர். பசூக்கா முழங்கியவுடன் முன்னால் வந்த டாங்கி ஒருகணம் தள்ளாடியது. டாங்கியின் பின்பக்கத்தில் குபீரெனத் தீ பற்றிக்கொண்டது. இந்திய இராணுவத்திற்கு வெறிபிடித்தது. அவர்கள் ஷெல்களை அளவுகணக்கின்றி ஏவியபடி முன்னேறினர். வீட்டு வேலிகளைத் துவம்சம் செய்தபடி புகுந்தனர். மணிவண்ணன் மாமாவின் வீட்டிற்குள் யம கிங்கரர்களாக அவர்கள் சுட்டுத்தள்ளியபடி பிரவேசித்ததைக் கண்டான்.

இப்பொழுது கூட நெஞ்சம் நடுங்குகிறது.

அவன் பார்த்துக்கொண்டிருக்கத் தக்கதாக மாமாவையும் மாமியையும் மிக அருகில் அவர்கள் சுட்டுத்தள்ளினர். அவன் வீரிட்டு அலரினான். பின்னர் ஓடத்தொடங்கினான்.

தன்னையும் அவர்கள் சுட்டுவிடுவார்கள் என்ற பயம் தொடர்ந்தது. ஏன் அவனைச் சுடவில்லையென்பதற்குக் காரணம் இன்னமும் அவனுக்குத் தெரியவில்லை. பிரம்படியில் இந்திய இராணுவம் சிறுவர்களையும் சுட்டுத்தள்ளியிருந்தது அவனுக்குத் தெரிந்திருந்தது.

இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தபோது அவர்கள் பாட சாலையொன்றில் அகதிகளாகத் தங்கியிருந்தனர். இருபது நாட்களுக்கு மேல் அங்கிருந்தனர். பாடசாலையை விட்டு வெளியேறியபோது வீதியெங்கும் சிப்பாய்கள் நிறைந்து நின்றிருந்தனர். அவர்களைக் காணும்போது அவன் உடல் நடுங்கியது. பயத்துடன் தாயுடன் ஒட்டிக்கொண்டான்.

''பயப்படாதை..'' என்றாள் அம்மா.

''இவர்கள் தான் மாமாவையும் மாமியையும் சுட்டவை.''

''பேசாமல் வா அப்பு.''

அவன் கண்களால் கண்ட அந்தக் கொடூரக் கொலைகளை மறக்க முடியவில்லை. ஆழ்மனதில் பதிந்துபோயிற்று. பல இரவுகள் அவனால் சரிவரத் தூங்கக்கூட முடியவில்லை. குண்டுகள் துளைத்த மாமாவின் தலையும் இரத்தத்தால் குளிப்பாட்டப்பட்ட மாமியின் உடலும் அடிக்கடி கனவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. பயந்து பதறிப்போய் எழுந்து உட்கார்ந்துவிடுவான். உடல் வியர்த்து நடுங்கும். நாக்கு அசையாது மேல் அண்ணத்துடன் ஒட்டிக்கொள்ளும். வெகு நேரத்தின் பின்னர், "அம்மா" என்று அலறுவான். இப்படி ஒரு இரவல்ல. பல இரவுகள்.

இந்தியச் சிப்பாய்களைக் காணும்போது திரும்பி ஓடிவந்து விடுவான்.

இப்படி அவன் தத்தளித்த நெருக்கடியான வேளையில் தான் வவுனியாவிலிருந்து அப்பா லீவில் வந்திருந்தார். அப்பாவின் வருகை அவனுக்கு இனந்தெரியாத பாதுகாப்பைத் தந்தது. அவர் கூட இருக்கில் இனிப்பயமில்லை என எண்ணிக்கொண்டான். ஆனால் அவரையும் பலோத்காரமாகச் சயிக்கிலில் ஏற்றிச்சென்று, துரோகி என்ற குற்றம் சாட்டி.. துண்டிக்கப்பட்ட தலையையும் முண்டத்தையும் அவன் விழிகளில் நீர்சோரப் பார்த்தான். இதயம் கொந்தளித்தது. அப்பாவின் கொடிய மரணம் அவனுக்கு மனதில் ஒருவிதமான வெறியை ஏற்படுத்தியது. அவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற உணர்வை ஏற்படுத்தியது.

இவற்றிற்குப் பிறகு அவனால் இங்கிருக்கமுடியவில்லை.

அண்ணன் மனோகரனுடன் கனடாவிற்கு ஓடிப்போனான். பதினொரு நீண்ட ஆண்டுகள். இந்திய இராணுவம் இந்த மண்ணிலிருந்து தலைக்குனிவுடன் வெளியேறிவிட்டது. அவ்விடத்தில் இலங்கை இராணுவம் வந்துவிட்டது. யாழ்ப்பாணத்தின் சூழல் ஒருவிதத்திலும் மாறி விடவில்லை. நடிகர்கள் மட்டும் மாறியுள்ளனர். நாடகம் பழையது தான்.

அண்ணன் மனோகரனுக்கு இந்த மண்ணில் ஏற்பட்ட அனுபவம் அவனையும் கனடாவிற்கு ஓடவைத்தது. மணி வண்ணனுக்கு அந்த நாள் இன்றும் நினைவில் இருக்கின்றது. ஒரு சனிக்கிழமை மனோகரனும் அவனது நண்பன் ஒருவனும் பண்ணைப்பாலத்தைக் கடந்து வேலனை வீதியில் பயணப்பட்டனர். சாட்டி வெள்ளைக்கடற்கரையில் கடல் முழுக்குப் போடும் ஆசையுடன் சயிக்கிலை மிதித்தனர். இரு பக்கங்களிலும் காணப்பட்ட சதுப்புக்காடுகளும் சேறும் சுரியும் பல்வகைப் பறவைகளும் அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தன. மனகும்பான் சந்தி வரை சென்று அங்குச் சற்று இளைப்பாறி, பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு, வீதியோரத்துத் தேநீர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையில் மன்கும்பான் வடையொன்றினையும் பாலில்லாத தேநீரையும் அருந்துவது இனிய அனுபவம்.

வடக்கே பரந்து கிடக்கின்ற தரவையில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருக்கும். ஒட்டிவரண்ட மாடுகள் சில ஆங்காங்கே நின்றிருக்கும். சிறுசிறு திட்டாகப் பனைமரங்கள் வளர்ந் திருக்கும். காற்றின் வறட்சிக்கு ஈடுகொடுத்து அவை சரசரத்தவாறு ஓலைகளை விசிறிக்கொண்டிருக்கும். மன்கும்பான் பிள்ளையார்கோயில் முன் சடைத்துக் கிளைபரப்பி வளர்ந்தி ருக்கும் ஆலமரத்தின் கீழ் இளைப்பாறிவிட்டுப் புறப்படத் தயாரானபோது, யாழ்ப்பாணப் பக்கமிருந்து வந்த இந்திய கக்திமன் டிறக் அவர்கள் அருகில் வந்து நின்றது.

டிறக்கிலிருந்து குதித்த இராணுவச்சிப்பாய் ஒருவன் பாய்ந்து வந்து மனோகரனின் கரத்தைப் பற்றிக்கொண்டான்.

''இவன் தான் சார்..'' என்று தன்னைக்காட்டி அவன் கூறியதை மனோகரன் புரிந்துகொண்டான். ஏதோ தவறு நடந்துவிட்டது. அவனைத் தப்பாக அடையாளம் கண்டு கொண்டனர். அவன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்கும் நிலையிலில்லை. எங்கோ ஏற்பட்ட ஒரு சம்பவப்பாதிப்புக்கு ஒருவன் தேவைப்பட்டான்.

மனோகரன் டிறக்கில் ஏற்றப்பட்டான். டிறக்கில் ஏற்றப்பட்ட தும் ஒரு சிப்பாய் அவன் பிடரியில் பலமாக அறைந்தான். மனோகரன் ''அம்மா'' என்றலறியபடி டிறக்கினுள் விழுந்தான்.

இருபது நாட்களுக்கு மேல் அவன் சிறைப்பட்டிருந்தான். அங்கு விசாரணை என்ற பெயரில் நடந்த சித்திரவதைகள் மறக்க முடியாத வேதனைகள். மனதில் ஆழப்பதிந்துவிட்ட மன வடுக்கள். அவனைக் கந்தையா இறுதியில் எப்படியோ வெளியில் கொண்டு வந்தார்.

''அம்மா, நான் இனி இங்க இருக்கமாட்டன்..'' என்றான் அழுதபடி மனோகரன்.

அவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டகன்று இன்று பதினொரு வருடங்களாகிவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா எப்படியிருப்பாள்? சின்னக்கா எப்படியிருப்பாள்? புதிய அத்தான் எப்படியிருப்பார்? ஆவலோடு யாழ்ப்பாண மண்ணில் மணிவண்ணன் கால்களைப் பதித்து நின்றிருந்தான்.

ஓட்டோ ஒன்றில் கூலி பேசி ஏறிக்கொண்டான். கலட்டி இராணுவத் தடைச் சென்றியில் அவனை மறித்துக் கொண்டனர்.

''ஐசி..''

''எனக்கு ஐசி இல்லை. நான் இங்க பிறந்தாலும் எட்டு வயதிலேயே ஐசி எடுப்பதற்கு முன்னரேயே கனடாவிற்குப் போயிட்டன். நான் கனடாபிரசை. பாஸ்போர்ட் இருக்குது..''

இராணுவத்தினர் அவர் பாஸ்போர்ட்டைத் துருவித்துருவிப் பார்த்தனர்.

''ஆமி ஐசி இல்ல.''

அவனுக்கு விளங்கவில்லை. அவன் யாழ்ப்பாணத்துக்குப் புதியவன். யாழ்ப்பாணத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட அடையாள அட்டைகள் பாவனையிலிருப்பது அவனுக்கு எப்படித் தெரியும்? தேசிய அடையள அட்டை, ஆமி அடையாள அட்டை, ஜொப் அடையாள அட்டை.. எது இல்லையோ அதனைத்தான் காட்டுமாறு கேட்பார்கள்.

''நான் இன்டைக்குத் தான் யாழ்ப்பாணத்துக்கு வாறன்..''

''ஐசி வேணும்..'' என்றான் இராணுவ வீரன்.

மணிவண்ணனுக்கு எரிச்சல் மூண்டது.

''லுக் கியா.. ஐ ஆம் நொட் சிறிலங்கன். ஐ ஆம் கனேடியன். பாஸ்போர்ட் விசா ஐ காவ் எவிறிதிங்..''

அவனுடைய பலமான ஆங்கிலம் அவ்விடத்தில் சற்று வேலை செய்தது. அவனை ஏறவிறங்கப் பார்த்துவிட்டு, ''சரி.. சரி.. போ..'' என்றான் எரிச்சலுடன் அந்த இராணுவ வீரன்.

அவன் மீண்டும் ஓட்டோவில் ஏறிக்கொண்டான்.

''அவங்களோட தர்க்கம் செய்யக்கூடாது தம்பி.'' என்றான் ஓட்டோ சாரதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு நெருங்கியபோது படலையில் அம்மாவும் சின்னக்காவும் வழிமேல் வழி வைத்துக் காத்திருப்பது தெரிகின்றது.

## 6

இரவு முழுவதும் உறக்கம் அவளைத் தழுவ மறுத்தது. தம்பி நாளைக்கு வரப்போகிறான் என்ற நினைவு உள்ளத்தில் பாசப் பொழிவாக நிரம்பிக்கிடந்தது. படுக்கையில் அங்காலும் இங்காலும் திரும்பி உலட்டிக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து இராசலிங்கம் பல தடவை கேட்டு விட்டான்.

''என்னப்பா, இப்படிக்கிடந்து தவிக்கிறீா? நாளைக்குத் தம்பி வந்துவிடுவான் தானே? நீர் இப்படி நித்திரையில்லாமல் தவித்தால் உமக்காக இரவு கெதியென விடிந்திடுமோ?''

''உங்களுக்கென்ன தெரியும்?'' என்று அவள் சிணுங்கினாள். அவன் மார்போடு தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு தூங்க முயன்றாள். உறக்கம் விழிகளைத் தழுவ மறுத்தது. அவன் அவளைத் தழுவிக் கொண்டான்.

வைகறைப்பொழுதில் தன்னையறியாமல் கண்கள் சற்று மூடியிருக்க வேண்டும். முதல் சேவலின் கூவலுடன் விழிப்பு வந்துவிட்டது. படுக்கையை விட்டெழுந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் கணவனை ஒரு கனம் மெய்மறந்து பார்த்தாள். எவ்வளவு குழந்தைத் தனமான வஞ்சகமற்ற முகம். நான் காண்டுகளாக அவனை அவளுக்குத் தெரியும். எந்த ஒரு கணத்திலும் அவள் பேச்சிற்கு மாறாக அவன் செயற்பட்டது கிடையாது.

''நாங்க அடிக்கடி சந்திக்கக் கூடாது.''

ஒப்புக் கொள்வான். அவளாகத் தேடி அவனிடம் வரும்வரை வாக்கைக் காப்பாற்றுவான்.

''உங்களுக்கு என்னில் அன்பில்லை. அதனால் தான் நான் எப்ப சொல்லுவன் எண்டு காத்திருந்து ஒளிச்சனீங்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிரிப்பான்.

''என்னை தெருவில கண்டால் தெரிந்தவ மாதிரிக் காட்டிக்கொள்ளக்கூடாது. பல்லை இளிக்கக்கூடாது.'' என்பாள் ஒரு நாள்.

அவன் ஒப்புக்கொள்வான்.

''அன்டைக்குத் தெருவில கண்டனான். காணாதது போல முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறியள்? வரவர உங்களுக்கு என்னில அக்கறையேயில்லை.'' எனப்பின்னர் கோபித்துக் கொள்வாள்.

''கவிதா, நீர் சொன்னீர். நான் செய்தன்.''

''அப்ப நீங்கள் ஆரும் சொல்கிறதைத் தான் செய்வீங்களா?''

அவன் அவளை ஆழமாக ஏறிட்டான். பின்னர் உதடு களுக்குள் சிரித்துக்கொண்டான். எதையோ கடுமையாகச் சிந்திப்பதுபோலப் பட்டது.

''கவி, சரியாக என்னை மதிப்பிட்டிருக்கிறீர்?''

அவளுக்கு இருந்தாற்போல அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆளப்படுபவன் என எண்ணிக்கொண்டாள். அவன் தொடர்ந்தான்: ''அப்பா, அம்மா சொல்கிறபடி நடப்பன். அவர்கள் சொல்லிற்குத் தட்டி நடக்க மாட்டன். அண்ணன் சொல்கிறபடி கேட்பன். பள்ளிக்கூடத்தில வாத்தியார் சொல்கிறபடி நடந்தன். நல்ல பெயர் எடுத்தன். பின்னர்..'' அவன் தயங்கி நின்றான். அவன் தயக்கத்திற்கான காரணம் அவளுக்குத் தெரியவில்லை. அவன் தயக்கத்தை அவள் பரவாய் பண்ணவுமில்லை.

''அப்ப அவர்கள் என்னைக் கலியணம் செய்ய வேண்டா மென்டால் அப்படியே செய்திடுவியளோ?'' அவள் விழிகளில் ஏக்கம் குமிழிட்டது. முகத்தில் இனந்தெரிந்த கவலை படர்ந்தது.

''இல்லைக் கவிதா.. அந்த விசயத்தில் அப்படி நடக்கவில்லை. அம்மா, அப்பா அண்ணன் எல்லாரும் மறுக்காமல் ஒப்புக்கொண்டனர். அண்ணன் என்ன சொன்னார் தெரியுமா? 'இந்தக் கறுவல் குத்தியனையும் போய் ஒருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலித்திருக்கிறாளே? இவனுக்கு எங்க பொம்பிளை எடுக்கிறதென்டு நான் கவலைப்பட்டன்..' என்கிறார்.''

அவன் அவளை ஆழமாக ஊன்றிப்பார்த்தான். அவளுக்கு முகம் சிவந்து கோபம் தலைதூக்கியது.

''அப்படியா சொன்னார்? உங்கட அழகு ஆருக்கு வரும்? அவருக்கு விசர். ஒருநாளைக்கு அவரைச் சரியாகக் கேக்கிறன். ஆண்களுக்கு அழகு நிறத்திலில்லை. உடல் வலுவிலும் ஒழுக்கத்திலுந்தான் இருக்கிறது. உழைப்பாளியாக, நல்ல ஒழுக்கமுடையவராக இருக்க வேண்டும். என்னைத்தவிர வேறொருத்தியையும் கனவில்கூட நினையாதவராக இருக்க வேண்டும். எனக்காக வாழ்பவராக இருக்க வேண்டும்.''

அவள் விழிகள் கனவுகளில் மிதந்தன. அவன் அன்புடன் அவள் கரங்களைப்பற்றிக் கொண்டான்: ''கவிதா, நான் எப்பொழுதும் அப்படியிருப்பன். உமக்காக வாழ்வன்.''

அவன் அதிகாலைப்பொழுதில் கள்ளமின்றி ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருக்கிறான்.

அவள் சத்தமில்லாமல் எழுந்து வெளியில் வந்தாள். முற்றத்தில் கால்களைப் பதித்தபோது சில்லென்று குளிர்ந்தது. காற்றில் மென்வளி குளிர்ச்சியுடன் வீசியது. உடலிற்கு இதமான குளிர்ச்சி.

முற்றத்து மாமரத்துடன் படுத்திருந்த நாய் அவளைக் கண்டதும் வாலை ஒரு தடவை நன்றிக்காக அசைத்துவிட்டு மீண்டும் சுருண்டு படுத்துவிட்டது. கட்டிற்குள் இருந்த கோழிகள் அவளைக் கண்டது குதித்து உணவை எதிர்பார்த்தன. படலை வரை நடந்து திரும்பி வந்தாள். இன்னமும் நன்றாக விடியவில்லை. கெதியாகக் கிழக்கு வெளுத்தால் என்ன? இப்பொழுது கப்பல் காங்கேசன்துறைக்கு வந்திருக்கும். பயணிகள் இறங்கியிருப்பார்களோ? தம்பி எப்படியிருப்பான்? படத்தில் இருந்ததுபோல நல்லாச் சிவந்து பருத்து வாளிப்பாக இருப்பானோ? எட்டு வயதில் அவளுடன் சுற்றித்திருந்த சிறுவனின் முகம் இன்னமும் மனதிலிருந்து களையவில்லை. ''சின்னக்கா.. சின்னக்கா.'' என்று அவளை ஓயாமல் சுற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவான். இன்னொரு தடவை அழைக்க மாட்டானா என்றிருக்கும்.

'தம்பி வரப்போகிறான்' என்று பெருங்குரலில் சத்தமிடவேண்டும் போல இருக்கின்றது. இருந்தாற்போல வீதியில் நாய்கள் குரைத்தன. ஆமிக்காரர் போகிறார்கள் போலவிருக்கிறது.

அவள் முற்றத்தை விளக்குமாறெடுத்துக் கூட்டித் துப்புரவு செய்துவிட்டு உள்ளே போல முயன்றபோது வாசலில் இராசலிங்கத்தின் அண்ணன் இராசதுரை மோட்டார் சயிக்கிலில் வந்திறங்கினான். கிழக்கின் இருள் மெல்லக்கரைந்து வானம் வெளுக்கத்தொடங்கியிருந்தது.

அவன் வந்ததைக் கவிதா கண்டாள். ஓடிப்போய் படலையின் திறப்பினை எடுத்துக்கொண்டாள். எடுத்துக் கொண்டு படுக்கை அறைக்குப் போய், ''இஞ்சருங்கோ, எழும்புங்கோ உங்க அண்ணர் வந்திருக்கிறார்'' என்று கணவனைத் தட்டி எழுப்பிவிட்டாள். இராசலிங்கம் உடன் எழுந்து வெளியில் விரைந்து வந்தான். இந்த அதிகாலையில் அண்ணர் ஏன் வந்தார்?

இராசதுரை உள்ளே வந்தான். கதிரையில் அமர்ந்து கொண்டான்.

''என்ன அண்ணை?''

அவன் தம்பியை நிமிர்ந்து பார்த்தான். விழிகளில் நீர் திரையிட்டது.

''அம்மம்மா மோசம் போய்விட்டா, தம்பி.''

அம்மம்மாவைப் பற்றி இராசலிங்கம் கவிதாவிற்கு நிறையச் சொல்லியிருக்கிறான். புங்குடுதீவுக் கந்தசாமி கோயிலுக்கருகில் அம்மம்மாவின் வீடு இருக்கிறது. அது அவர்களின் பிறந்த மண். எந்த நிலையிலும் தான் பிறந்து வளர்ந்து வாழ்க்கைப்பட்ட மண்ணைவிட்டு யாழ்ப்பாணத்திற்கு வர அம்மம்மா ஒருபோதும் ஒப்புக்கொண்டது கிடையாது. தீவுகளை இராணுவம் கைப்பற்றிய போது கூட அம்மம்மா தன்னிடத்தைவிட்டு யாழ்ப்பாணத்திற்கு ஓடிவரவில்லை. அங்கேயே தங்கி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய், இந்த நேரத்தில் இப்படி நடந்திருக்கக்கூடாது. பதினொரு வருடங்களுக்கு பின்னர் தம்பி ஆசையோடு தங்களைப் பார்க்க வருகிறான். இப்படியாகிவிட்டதே?

அவள் கவலையோடு கணவனைப் பார்த்தாள்.

''நீர்வரவேண்டாம், கவிதா, தம்பி கன காலத்திற்குப் பிறகு வருகிறான். நான் போயிட்டு வாறன். நான் கட்டாயம் போகத்தான் வேணும். அம்மம்மாவின்ர கன நாள் ஆசை. பேரப்பிள்ளையள் எல்லாம் சூழந்து நின்று நெய்ப்பந்தம் பிடிக்க வேண்டுமென்று. நாங்க போயிட்டு வாறம், கவிதா, செலவை முடிச்சுக்கொண்டு கெதியாக வந்திடுவன்.''

அவன் சொல்வது அவளுக்குச் சரியாகப்பட்டது. அவன் போகத் தான் வேண்டும்.

மோட்டார் சயிக்கிலில் ஏறி அவன் புறப்பட்டபோது கவிதாவின் விழிகளில் நீர் நிறைந்து மறைத்தது. கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

அவர்கள் சென்றதன் பின்னர் மீண்டும் கவிதாவின் உள்ளத்தில் தம்பியின் நினைவு வந்தது. இவர் தான் உன் அத்தான்' என்று தன் கணவனை அவனுக்கு அறிமுகம் செய்து வைக்க அவளால் முடியாது போய்விட்டது. வந்து இறங்கியதும் அவன் அவரைத்தான் தேடுவான். சின்னக் காவிற்கு அவர் எவ்வளவு பொருத்தமானவர் எனப்பார்ப்பான். கறுவல் குத்தியன் என்பானோ? திடீரென உதடுகள் புன்னகைத்தன. தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''எங்களுக்குப் பிறக்கிறது உம்மைப்போலச் சிவப்பாக இருக்க வேணும்.''

''வேண்டாம். சிவப்புமில்லாமல் கறுப்புமில்லாமல் பொதுநிறமாக இருந்தால் போதும். என்னைப்போல அவிச்ச றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உம்மைப்போல நான் கரிச்சட்டியே?''

''உம்மைப்போல நான் அவிச்ச றாலே?''

''என்ன சட்டி றால் கதை? றால் வாங்கி வந்தால் சட்டியில காய்ச்சலாம்'' என்று அம்மா சிரித்த காட்சி நினைவு வருகின்றது.

அம்மா, தம்பியின் வருகையால் புத்துணர்வு பெற்றிருப்ப தாகப்படுகின்றது. இரவு அவரும் சரியாகத் தூங்கியிருக்க மாட்டாரென்பது விழிகளின் சோர்விலிருந்து தெரிகிறது. முகமும் வீங்கியிருக்கிறது.

''இப்ப கப்பல் வந்திருக்கும். எக்கணம் பின்னேரம் தான் வருவான்.''

''அவர் இல்லாதது அவனுக்கு ஏமாற்றமாகவிருக்கும்.''

''அதுக்கென்ன பிள்ளை செய்யிறது. இந்த நேரமென்டு அந்தக் கிழவியும் உயிரை விட்டிட்டது. எங்கட விதி அப்படி, கவிதா. தம்பி வாறான். நீ மனிசனோட இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும். பூரணமான ஆனந்தம் என்பது உண்மையில் இந்த உலகத்தில கிட்டுவது கடினம்போல இருக்குது.''

மகன் வரும்போது மருமகன் இல்லையென்ற ஏக்கம் அம்மாவின் வார்த்தைகளில் தொனித்தது. கவிதா எதுவும் பேசவில்லை. அடிக்கடி வீட்டிற்குள் வருவதும் படலைக்கு வருவதுமாக அன்றைய பொழுது கழிந்தது. தெருவில் வாகனங்கள் ஏதாவது விரையும் சத்தம் கேட்டால் தம்பி வந்துவிட்டானென்ற ஆவல் எழும். மத்தியானத்திற்குப் பின்னர் தாயும் மகளும் படலையை விட்டு நகரவில்லை.

கந்தையாவும் அவர்களைப் பார்த்துச் சிரித்துவிட்டுச் சென்றார்.

அவருடைய மகளும் பேர்த்தியும் வருகிறார்கள். மகிழ்ச்சி இருக்காதா?

மாலை கவிக்கின்ற வேளையில் தூரத்தில் ஓட்டோ ஒன்று விரைந்துவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டோவிலிருந்தபடி ஒரு பரிச்சயமான முகம் எட்டிப்பார்ப்பது தெரிகிறது.

''தம்பி வாறான்.'' என்று கவிதா சத்தமிட்டாள்.

## 7

ஊரில் பல மாற்றங்கள் தெரிகின்றன. பல வீடுகள் இடிந்தும் உடைந்தும் காணப்படுகின்றன. சில வீடுகள் முற்றாகத் தரைமட்டமாகியிருக்கின்றன. வாசிகசாலைக்கட்டிடம் இருந்த இடத்தில் கல் குவியல் தான் காணப்படுகின்றது. பிள்ளையார் கோயில் கோபுரத்தின் ஒரு பக்கத்தில் ஷெல் சீவியெடுத்திருந்தது. எல்லாற்றிற்கும் மேலாகப் பலவீடுகளில் ஆட்களே இல்லை. வீடுகள் சில கூரை கழற்றப்பட்டும், ஜன்னல்கள் கதவுகள், நிலைகள் கழற்றப்பட்டும் வெறும் எலும்புக்கூடுகளாகக் காணப்பட்டன. யுத்தத்தினால் சிதையாத வீடுகளை இடம்பெயர்ந்து திரும்பி வந்த மக்களிற் சிலர் பிய்த்தெடுத்துச் சிதைத்துவிட்டார்கள்.

சயிக்கிலில் ஊரின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்யும்போது இவை அனைத்தும் தெரிகின்றன. நெஞ்சம் கனக்கிறது. எப்படியிருந்த ஊர்? இன்று இப்படிச் சீரழிந்து விட்டதே? எவ்வளவு பேர் வாழ்ந்த இடம்? இன்று பலர் இந்த ஊரைவிட்டு எங்கெங்கோ ஓடிவிட்டார்கள். வன்னியில் அகப்பட்டவர்கள் திரும்பி வரும்போது அவர்களின் வீடுகளில் சுவர்க்கற்கள் கூட இருக்காது. யுத்தம் சிதைத்ததைவிட கள்ளர் சிதைத்தது அதிகமாகப்படுகின்றது.

குச்சொழுங்கையொன்றில் சயிக்கிலைத் திருப்பினான். மனம் அசை போடுகின்றது.

ஓட்டோவிலிருந்து இறங்கியதும் அம்மா அவனைக் கட்டிக்கொண்டாள். அவ்விடத்தில் பாசத்தின் சங்கமம் நிகழ்ந்து. சின்னக்கா அன்புடன் அவன் அருகில் வந்து அவனை அணைத்துக் கொண்டாள். அம்மா கன்னத்தில் இட்ட முத்தம் இன்பொழுதும் இனிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ராசா.. என் மணி..'' என்று அம்மா அவனை அணைத்துக்கொண்டு புலம்பினாள். விழிகளிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து அவன் தோள்களை நனைத்தது.

சின்னக்காவின் கணவன் அவ்விடத்தில்லாதது அவனுக்கு முதலில் ஏமாற்றமாக இருந்தது. சா வீட்டிற்கு அதுவும் அவரின் அம்மம்மாவின் சா வீட்டிற்குச் சென்றுவிட்டார் என்றறிந்ததால் ஏமாற்றவுணர்வு நீடிக்கவில்லை.

''நான் அங்குப்போகவேண்டுமா, அம்மா?'' என்று அவன் தாயிடம் கேட்டான்.

''வேண்டாம் மணி, நீ இன்றுதான் வந்திருக்கிறாய். புங்குடுத்தீவு.. தவியப் போவது பயம். மண்கும்பான் கடந்து போகவேண்டும். ஆமி சென்றிகள்.. வேண்டாம்.''

அம்மாவிற்கு இந்திய இராணுவத்தின் காலத்தில் மூத்தமகன் மனோகரனுக்கு ஏற்பட்ட துர்பாக்கிய அனுபவம் நினைவு வந்திருக்கும். கலட்டிச்சந்தியில் மணிவண்ணனிடம் அடையாள அட்டைகள் கேட்டுப் பிரச்சினைப்பட்டது அவனுக்கு நினைவு வந்தது. அம்மா சொல்வது நியாயமாகப்பட்டது.

சயிக்கிலில் ஏறி ஊரைச் சுற்றிவரும் ஆவல் அவன் மனதில் உடன் ஏற்பட்டது. பதினொரு வருடங்களுக்கு முன்னர் அவன் தரிசித்த கிராமம். இன்று எப்படியிருக்கிறது? கனடாவின் குளிரில் யந்திர மயமாக வாழ்ந்து பழகிவிட்ட அவனுக்குக் கிராமத்தின் காட்சிகள் சுதந்திரக் காற்றினைச் சுவாசிக்க வைத்தன. அவர்கள் அடிக்கடி வந்து பொருட்கள் வாங்கிய சந்திக்கடைகள், சந்தியில் ஓங்கி வளர்ந்திருக்கும் அரசமரம், வெள்ள வாய்க்கால், மதகுகள் எல்லாம் அவனுக்குப் பழைய வாழ்வின் சுவையை உடலெங்கும் பரப்பி ஆனந்தத்தைத் தந்தன. ஒழுங்கையூடாக வந்து அம்மன் கோயில் முன்றலில் ஏறி நின்றான். அம்மனின் தல விருட்சமான வேம்பு முன்னரிலும் நன்கு ஓங்கிச் சடைத்திருந்தது. அதே தேர் முட்டி. சகடைகள், சகடைகளில் ஏறிவிளையாடியதும், சாமிச் சகடையில் வைத்துத் தள்ளும் போது தள்ளுவதாகப் பாசாங்கு செய்து சகடையில் தொற்றிப் பயணப்பட்டதும் நினைவிற்கு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவிற்குச் சென்றதால் அவற்றினை இழந்து விட்டான். பளிங்கு போல வளவளப்பான தெருக்களில் இடைவெளியின்றி விரையும் கார்களும், தரையில் கால் படாது மாடி வீடுகளில் வாழ்ந்துவிடுகின்ற நிலையும் சலிப்பினைத் தந்தன.

சயிக்கிலில் ஏற முயன்றபோது எதிரில் மாட்டுவண்டி ஒன்று அட்டகாசமாக வந்தது. வியப்புடன் பார்த்தபடி ஒதுங்கி நின்றான். வெள்ளைவெளோ என்ற கம்பீரமான மாடுகள். ஆசனத்தட்டில் ஒரு இளைஞன் அமர்ந்திருந்தான். வண்டிலை ஓட்டி வந்தவன் அவன் அருகில் வந்ததும் மாடுகளின் பிணைப்புக்கயிறுகளை இழுத்து நிறுத்தியபடி அவனை வியப்பும் நட்பும் தெரியப் பார்த்தான்.

''மணி..'' என்று பெரும் குரலில் அழைத்தபடி வண்டிலிருந்து கீழே குதித்தான். இவ்வளவு நேரத்திற்கு கிராமத்தில் அடையாளம் கண்ட முதல் மனிதன் அவன் தான்.

''நடா..'' என்று குரல் தந்தான் மணிவண்ணன். அவனை எப்படி மறந்துவிட முடியும்? அவனுடன் பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன். எத்தனை குறும்புகள் அவனுக்குக் காட்டித் தந்த நடராஜசுந்தரம் வண்டியிலிருக்கிறான்.

நண்பர் இருவரும் நெருங்கி ஒருவரையொருவர் பற்றிக் கொண்டனர். கரங்களின் இறுக்கத்தில் அவர்களின் பாச நட்பின் பலம் தெரிந்தது.

''மணி.. உண்மையில் நீதானா? எப்படா வந்தாய்? நல்லா வளர்ந்திட்டாய். வெள்ளைக்காரன் மாதிரியிருக்கிறாய்?'' என்றான் நடராஜசுந்தரம்.

''இன்டைக்குத் தான் வந்தன். நீ என்ன செய்கிறாய்?''

''தெரியவில்லை. வண்டில் வைச்சிருக்கிறன். அப்பா செத்துப்போனார். ''அவன் கவலையுடன் தயங்கினான். முகத்தில் துயரத்தின் சுவடுகள் படிந்தன. அவன் தொடர்ந்தான்: ''வண்டிலுடன் ஒழுங்கையில் ஏறியவர் எங்கிருந்தோ வந்த சன்னம் தாக்கி அப்படியே சரிந்துவிட்டார். அவர் உயிரற்ற உடலுடன் மாடுகள் வீட்டிற்கு வந்தன. நான் என்ன செய்வது இந்த நாட்டிலே யமன் எப்ப வருவானென்டு சொல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் அம்மா, சகோதரங்கள்.. என்னால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. அப்பாவின் விருப்பிற்கு மாறாக அவர் செய்த தொழிலைச் செய்யத் தொடங்கிவிட்டன.''

நண்பனின் தோளில் ஆதரவுடன் மணிவண்ணன் கரங்களைப் பதித்தான்.

''எப்படியடா சமாளிக்கிறாய்? பெரிய குடும்பம் அல்லவா?''

நடராஜசுந்தரம் வானத்தை வெறித்துப்பார்த்தான்.

''இன்றைக்கு என்னைப்போல இந்த ஊரில எத்தனையோ பேர்.. சில வீடுகளில ஒரு நேரச்சாப்பாடு தான். பசியால சிறுவர் சிறுமிகள் பிறரின் வீட்டுப் படலைகளைத் தட்டிச் சாப்பாடு கேக்கின்ற நிலை உருவாகிவிட்டது. அரிசி விலை, பொருட்கள் விலை.. கூலி வேலைகளில்லை. குழந்தைகள் எலும்பும் தோலுமாக மாறிவிட்டன. எங்கும் கஷ்டம். மற்றவையோட ஒப்பிட்டுப்பார்க்கும் போது எங்கள் பாடு பரவாயில்லை. உழைப்பவன் வீட்டிற்குள் பசி எட்டிப்பார்க்கும். ஆனால் நுழைந்துவிடாது என்று கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்று அவன் சிரித்தான். அச்சிரிப்பினூடாக அவனது வாழ்க்கையைச் சவாலாக ஏற்றிருக்கிறான் என்பதை மணிவண்ணன் புரிந்து கொண்டான்.

''நான் உன்னுடன் வண்டிலில் வரட்டாடா..''

''உனக்கில்லாததா..'' என்றபடி சயிக்கிலைத் தூக்கி வண்டியில் வைத்தான்: ''முன்னால் ஏறிக்கொள்.''

வண்டியில் பயணம் செய்வது இனிமையன அனுபவமாக விருந்தது. கரடுமுரடான ஒழுங்கையின் பள்ளங்களில் விழுந்தெழும்பி வண்டில் விரைந்தது. சொகுசாகக் கனடாவில் ஐசி காரில் அவன் பயணம் செய்திருக்கிறான். பிறந்த ஊரில் வண்டியில் சவாரி செய்கின்ற திருப்தி அவனுக்கு அங்கு ஏற்படவில்லை.

''நடா, வாழ்வின் தேவைகள் வேறு. வாழ்க்கையின் சௌகரியங்கள் வேறு என்பதை இங்கு வந்ததும் நான் புரிந்து கொண்டேன். உன்னைப் பார்க்கும்போது எனக்குப் பெருமை யாகவிருக்கிறது. குடும்பத் தேவைக்காக நீ உழைக்கிறாய்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் நாங்கள் அப்படியல்ல.. தேவைகளுக்கும் அப்பால் நவீன வசதிகளுக்காக.. சௌகரியங்களுக்காக உழைக்கின்றோம்.''

''நாங்க வாழ்வதற்காக உழைக்கிறோம். நீங்கள் உழைப்பதற்காக வாழ்கிறீர்கள்.'' நடராஜசுந்தரத்தை வியப்புடன் மணிவண்ணன் மீண்டும் பார்த்தான். நடா கொஞ்சமும் மாறிவிடவில்லை. பேச்சில் அதே கெட்டித்தனம் இருக்கின்றது.

வண்டில் மாடுகளின் சதங்கை ஒலி கேட்டதும் நடராஜ சுந்தரத்தின் தம்பி ஒருவன் ஓடிவந்து தட்டியைக் கழற்றித் திறந்துவிட்டான். மாடுகள் பக்குவமாக வளவிற்குள் நுழைந்து வழக்கமானவிடத்தில் தரித்து நின்றன.

மண் வீடு, பனையோலைக் கூரை. தலை வாசல். பதினொரு ஆண்டுகளுக்கு முன் அவன் பார்த்த நிலையில் எதுவித வித்தியாசமில்லை. காலம் இவர்களின் வாழ்க்கையில் எதுவித மாற்றத்தையும் செய்துவிடவில்லை. துயரத்தினை அதிகரிக்க வைத்ததைத் தவிர என அவன் எண்ணிக் கொண்டான்.

தலைவாசலில் இடப்பட்டிருந்த வாங்கில் மணிவண்ணன் அமர்ந்து கொண்டான். வண்டில் மாடுகளை நுகத்திலிருந்து கழற்றி கொட்டிலில் கட்டிவிட்டு வைக்கோலை அள்ளி பட்டியில் இட்டுவிட்டு நடராஜசுந்தரம் அவனிடம் வந்தான்.

வீட்டிற்குள்ளிருந்து பல முகங்கள் எட்டிப்பார்த்தன. வயோதிபப் பெண் ஒருத்தி வெளியில் வந்தாள்.

''அம்மா. இவன் தான் மணி.. என் நண்பன். என்னுடன் ஒன்றாகப் படித்தவன்.''

''பொலீஸ் சண்முகத்தாற்ற மோனே?'' என்று அவன் தாய் கேட்டாள்.

அப்பாவின் நினைவு இதயத்தைச் சுளீரெனக் குத்தியது.

''ஓம் அம்மா..'' என்றான் மணிவண்ணன்.

அவர்கள் ஊர்ப் புதினங்களைப் பேசிக் கொண்டார்கள். யாழ்ப்பானத்தில் நடந்து முடிந்த அசம்பாவிதங்கள்.. தென்னூற்றைத்தின் இடப்பெயர்வு, திரும்பி வந்தவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மணியில் கிருசாந்தியைக் கற்பழித்து இராணுவம் கொன்றமை, அவளைத் தேடி வந்த தாயையும் அயலவரையும் சகோதரவையும் கொன்று புதைத்தமை, செம்மணிப் புதைகுழியில் உறங்குவதாகக் கூறப்படும் நானூறிற்கும் மேற்பட்ட இளைஞர்கள், காணாமற்போன அறுநூறு பேர்..

மணிவண்ணனுக்கு அவை புதிய செய்திகளல்ல.

''நடா, இங்கு நடக்கின்ற ஒவ்வொரு விடயங்களும் உங்களுக்குத் தெரிவதற்கு முன்பே கனடாவில் எங்களுக்குத் தெரிந்துவிடும்.''

நடாவின் தாயார் தந்த தேநீரை வாங்கி அருந்தியபடி மணிவண்ணன், ''நடா நீ என்னுடன் கனடாவிற்கு வந்துவிடன்'' என்று கேட்டான். அவ்விடத்தில் சற்று நேரம் மௌனம் நிலவியது.

முற்றத்தில் மாடுகளுக்கு வாளியில் தவிடும் பிண்ணாக்கும் கரைத்துக் கொண்டிருந்த நடராஜசுந்தரத்தின் தம்பி அவர்களை நிமிர்ந்து பார்த்தான். அமர்ந்திருந்தவன் தவிட்டுக் கறை படிந்த கரத்துடன் எழுந்து நின்றான். தமையனின் பதிலை அவன் ஆவலுடன் எதிர்பார்த்தான்.

''நான் ஏன் வரவேண்டும்?'' நடராஜசுந்தரம் மிக அமைதியாக மணிவண்ணனைப் பார்த்தபடி வினவினான்: ''நான் ஏன் வரவேண்டும்?''

''நன்றாக உழைக்கலாம். உன் குடும்பத்தை நன்கு முன்னுக்குக் கொண்டு வரலாம்.''

''எனக்குச் சௌகரியங்கள் வேண்டாம். மணி. நாங்கள் எல்லாரும் எப்பவும் ஒன்றாக இருக்க வேணும். நெல்லிக்காய் மூடை, அவிழ்ந்தது போலச் சிதறிப்போய்விடக் கூடாது. இன்டைக்கு யாழ்ப்பாணத்தில் பெத்த பிள்ளைகளை உலகத்தின் மூலை முடுக்குகளுக்கு அனுப்பிவிட்டுத் தவிக்கின்றவர்களை எனக்குத் தெரியும். பணம் மட்டும் வாழ்க்கையல்ல. உறவு தான் என்னைப்பொறுத்த வரையில் முக்கியம் என்று நினைக்கிறன். நான் எந்தச் சூழ்நிலையிலும் அம்மாவையும் சகோதரர்களையும் விட்டுவிட்டு விலகிச்செல்ல முடியாது. என் சகோதரங்கள் படித்து நல்லா வர நான் இங்கு இருக்க வேண்டும். உழைக்க வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கு உயிருக்கு ஒரு உத்தரவாதமுமில்லை, நடா.''

''இனடைக்கு உலகத்தில் ஒரு இடத்திலும் உசிருக்கு உத்தரவாதமில்லை, மணி.''

''கனடாவில் எவ்வளவு சுதந்திரமாக வாழலாம் தெரியுமா? எங்கு சுதந்திரம் வாழ்கிறதோ அது தான் என் நாடென ஒரு அறிஞன் சொன்னானாம்.''

''இன்னொரு அறிஞன் என்ன சொன்னான் தெரியுமா?''

''என்ன சொன்னான்?''

''நமது இதயம் எங்கு பிணைக்கப்பட்டிருக்கிறதோ அது தான் நமது நாடு என்கிறான். என் இருதயம் இங்கு இந்த மண்ணில் தான் பிணைக்கப்பட்டிருக்கிறது.''

மணிவண்ணனை வியப்பு ஆட்கொண்டது.

''இதையெல்லாம் எங்கயடா தெரிந்து கொண்டாய்?''

''அண்ணனுக்கு என்ன வேலை. ஒரே புத்தகம் படிக்கிறது தான்.'' என்றான் சிரித்தபடி முற்றத்தில் நின்றிருந்த அவன் தம்பி. மீண்டும் அவன் வாளிக்குள் கைவிட்டுத் தவிட்டைக் கலக்கிவிட்டான்.

மணிவண்ணன் விடைபெற்றுச் சயிக்கிலில் ஏறியபோது மத்தியானமாகியிருந்தது. சாப்பிட்டுவிட்டுப் போகும் படி நடராஜசுந்தரம் வற்புறுத்தினான்.

''அம்மாவின் கையால முதன் முதல் இன்றைக்குத் தான் சாப்பிடப்போறன் நடா. இன்னொரு நாளைக்குக் கட்டாயம் வாறன், சாப்பிட.''

அவனை அவர்கள் தடுக்கவில்லை. அவன் சயிக்கிலில் ஏறி ஒழுங்கையால் மிதந்து வீதியில் ஏறினான். நண்பனின் வார்த்தைகள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. நடராஜசுந்தரம் நன்றாகப் பேசக்கற்றுக்கொண்டுவிட்டான்.

வீடு நெருங்கியபோது அந்தப் பனைவடலி தெரிந்தது. அதன் முன் பதினொரு வருடங்களுக்குமுன் நிகழ்ந்த சம்பவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சில் பலமாக வந்து மோதியது. அவ்விடத்தில் தான் அவன் தகப்பனை அவர்கள் பலாத்காரமாகச் சயிக்கிலில் ஏற்றிச் சென்றார்கள். அதன் பின் அவன் தந்தையை உசிரோடு காணவில்லை. துண்டிக்கப்பட்ட தலையையும் முண்டத்தையும் தான் கண்டான்.

''அப்பா.. அப்பா..''

அவன் இதயம் ஓலமிட்டலறியது.

## 8

இறுதிக் கிரியைகளுக்காக முற்றத்தில் இடப்பட்டிருந்த தட்டிப்பந்தல் இன்னும் கழற்றப்படாது அப்படியே சற்றுமுன் ,அங்கு நடந்தேறிய அம்மம்மாவின் அந்திமப் பயணத்திற்குச் சாட்சியாக நிற்கின்றது. சவப்பெட்டிக்கு மூன்று கட்டுக்கள் போடுவதற்காக தோரணக் கயிறுகள் உருவியெடுக்கப்பட்டுவிட, முற்றத்தில் மாவிலைகளும் தென்னங்குருத்துத் தோரணங்களும் சிதறிக்கிடக்கின்றன. அம்மம்மாவின் சடலம் வளர்த்தப்பட்டிருந்த வாங்கு ஒரு பக்கம் சரித்து விடப்பட்டிருக்கின்றது.

இராசலிங்கம் அவற்றினை நோக்கியவாறு முற்றத்துக் கதிரையொன்றில் அமர்ந்திருக்கிறான். அம்மம்மாவை அவன் நினைவுக் கொண்டுவர முயல்கிறான். அப்போது அவனுக்குப் பத்து வயதிருக்கும்.

முற்றத்தில் நிலவின் ஒளி பரவிக்கிடந்தது. முற்றத்தில் பாய் விரித்து அமர்ந்திருந்த அம்மம்மாவின் மடியில் அவன் தலை வைத்துப் படுத்திருந்தான்; அவன் அருகில் இராசதுரை உட்கார்ந்திருக்கிறான்.

''இன்னமும் சின்னப்பிள்ளை.பவா. பத்து வயதாகிறது. அம்மம்மா மடியில வளர்த்திக் கொஞ்சுகிறதா?'' என்றாள் அடுக்களைக்குள் இருந்தபடி அம்மா.

அம்மம்மாவிற்குச் சற்றுப் பெருமிதமாகவிருந்தது. அவனின் தலை மயிரைக் கோதிவிட்டாள். தன் வலது கரப் பெருவிரலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுவிரலையும் சேர்த்து இராசலிங்கத்தின் மூக்கை மேலிருந்து கீழாக அழுத்தி, ''நாய்க்கு மூக்குண்டு, நரிக்கு மூக்குண்டு நான் பெத்த மோனுக்கு மூக்கு வா.'' என்றான்.

இராசதுரை அம்மம்மாவை வியப்புடன் பார்த்தான்.

''இப்படி மூக்குப்பிடித்தால் மூக்கு வந்துவிடுமோ?''

''இப்படிப் பிடித்ததால் தான் உங்களுக்கெல்லாம் இப்படிச் கூரான மூக்கு வந்தது தெரியுமோ?'' என்றாள் அம்மம்மா.

அம்மம்மா இப்படி எத்தனை காரியங்கள் செய்வாள்? எத்தனை கதைகள் அவர்களுக்குக் கூறியிருப்பாள்? விக்கிர மாதித்தன் கதைகளிலிருந்து பாரதக்கதை வரை அவனுக்குத் தெரிந்திருக்கிறதென்றால் அதற்கு அம்மம்மா தான் காரணம். அம்மா அவர்களைத் தூக்கி வளர்த்ததிலும் அம்மம்மாதான். அவர்களைக் கரிசனையோடு வளர்த்திருக்கிறாள். தலைக்கு எண்ணெய் வைத்துக் குளிப்பாட்டுவதும் சோறு தீத்துவதும் அம்மம்மாவின் கடமைகள். பன்னிரண்டு வயது வரை அம்மம்மா குழைத்து ஊட்டிவிட்ட சோற்றின் சுவை இப்பவும் நாக்கில் ஊறுகிறது.

சேலைத் தலைப்பின் முடிச்சினை அவிழ்த்து அவனுக்கு அவள் வழங்கிய பத்துச்சதம் தின்பண்டங்களுக்கு அவள் வழங்கிய கொடை. எத்தனை பத்துச் சதங்கள்? அம்மம்மாவின் உலகம் பேரப்பிள்ளைகளாகத் தான் இருந்தார்கள்.

அம்மம்மா அவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டு பெருங்குரலில் ஒரு தடவை அழுதிருக்கிறார். இப்பொழுதும் பசுமையாக நெஞ்சில் உறைக்கின்றது. இராசலிங்கம் முகத்தினை அழுத்தித் துடைத்துக் கொண்டான்.

ஒரு நாள் பாடசாலைக்குப் போனவன், எழுபத்தெட்டுகளில் பத்து நாட்கள் காணாமல் போயினான். அவனோடு கூடவே படித்த மேலும் ஐவர் சென்றிருந்தனர். அறுவரும் பேசிப் பறைந்து ஒவ்வொரு இயக்கத்தில் சேர்ந்துவிட்டனர். தமிழகமக்களது சாத்வீகப்போராட்டம் ஆயுதப்போராட்டமாக உருவெடுத்த காலம். பல்வேறு இயக்கங்கள் யாழ்ப்பாண மண்ணில் நிலை கொண்டிருந்த வேளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி அறிந்த இராசலிங்கத்தின் பெற்றோர் திகைத்தனர். அம்மம்மா ஒப்பாரி வைத்து அழத்தொடங்கிவிட்டாள். அவன் பத்து நாட்களின் பின்னர் வீட்டிற்கு வந்தபோது அவனைக் கட்டிக்கொண்டு அம்மம்மா பெருங்குரலில் அழுதாள்.

''உனக்குது வேண்டாம் ராசா. வந்திடு..நல்லாப்படி, அப்பு.''

அம்மம்மாவின் வார்த்தைகள், வேண்டுதல்கள் பயனற்றுப் போயின.

அதன் பிறகு எவ்வளவோ நடந்துவிட்டன. இப்பொழுது நினைத்தாலும் இராசலிங்கத்திற்கு நடந்தேறியவை நம்ப முடியாதனவாயும் கவலைக்குரியனவாகவும் இருக்கின்றன. அவனோடு இயக்கத்தில் சேர்ந்த ஐவரில் குருபாதம் இடைநடுவில் கனடாவிற்கு ஓடிப்போய் விட்டான். அவனைப் பிடித்து எப்படியோ நாடு கடத்திவிடுவதில் அவன் பெற்றார் வெற்றி கண்டனர். மூவர் இருந்தவிடம் தெரியாமல் காற்றில் கலந்து விட்டார்கள். ஒருவன் எங்கென இன்னமும் தெரியவில்லை.

கதிரையில் அமர்ந்தபடி சிதறிக்கிடக்கும் தோரணங்களைப் பார்க்கும்போது அம்மம்மாவின் கடைசி ஆசையை நிறைவேற்றிய திருப்தி ஏற்படுகின்றது. தலைமாட்டில் நின்று என் பேரன் நெய்ப்பந்தம் பிடிக்க வேண்டும். நெய்ப்பந்தத்தை ஏந்தியபோது அவன் கை நடுங்கியது. உள்ளம் வெடித்துவிடுமாப்போல அழுத்தியது. நித்திரை கொள்ளுமாப்போல சவப்பெட்டியில் நீட்டி உறங்கும் அம்மம்மாவின் முகத்தினை அவனால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

''ராசா, நான் உன்னைப்பற்றிக் கேள்விபடுபவை எனக்குக் கலக்கத்தைக் கொடுக்கின்றன, அப்பு. அப்படியெல்லாம் நடந்திடாதை.''

அம்மம்மாவின் சடலம் இப்பொழுது தீயுடன் சங்கமித்திருக்கும். நிறை வாழ்வு வாழ்ந்து முடித்த பெருமாட்டி. இன்று யாழ்ப்பாணத்தில் இயற்கை மரணத்துடன், உற்றமும் சுற்றமும் சூழ்ந்து கண்ணீர் விட, பேரப்பிள்ளைகள் நெய்ப்பந்தங்கள் பிடிக்க, உரிமைக்குரிய மகன் கொள்ளிக்குடம் ஏந்தத் தன் இறுதிப்பயணத்தைச் செய்கின்ற பாக்கியம் எத்தனை பேருக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்திருக்கின்றது? யாருமற்ற அனாதைகளாகவும், இறந்துபோனது தெரியாமல் நாற்றம் கிளம்பியபின்னா் அயலவா் அறிந்த அனாதைப்பிணங்களாகவும் போனவா்களின் எண்ணிக்கை யாழ்ப்பானத்தில் மிக அதிகம். யாா் யாருக்கோ கொள்ளி வைக்கின்ற பாக்கியம் கிடைக்கின்றது. அம்மம்மாவிற்கு அப்படி எதுவும் நிகழவில்லை.

வாசலில் ஆரவாரம் எழுகின்றது. இராசலிங்கம் படலையைப் பாா்க்கிறான். சின்னத்துரை அம்மான் பண்டினிப்பண்டத்துடன் வருகிறாா். மதியச்சாப்பாடு கொண்டு வரப்படுகின்றது. சின்னத்துரை அம்மான் சோற்றுச் சருவத்தினைக் கடகம் ஒன்றில் வைத்துக் காவி வர வேறு சிலா் கறி ஏதனங்களுடன் வருகின்றனா். அவன் எழுந்து சென்று சின்னத்திரை அம்மானிடமிருந்து சருளச் சுமையை வாங்கிக் கொள்கிறான்.

உள்ளே பெண்கள் முழுகித் துடைத்து ஆயத்தமாக இருக்கிறாா்கள். அம்மம்மாவை மறந்துபோய்ச் சாப்பிட ஆயத்தமாகிறாா்கள்.

''இராசு, முழுகிட்டு வா.. சாப்பிட...''

''இப்ப வேண்டாம். கொஞ்சம் ஆறி வாறன்.'' என்கிறான் இராசலிங்கம்.

''இப்பவே நாலரையாகுது. எழும்பி முழுகிவிட்டு வா..'' என்று அண்ணன் அதட்ட அவன் எழுந்து கிணற்றடிக்குச் செல்கிறான். அண்ணனின் வாா்த்தைகளை அவனால் மீறமுடிவதில்லை. அப்படிப் பழகிவிட்டான். அண்ணனின் வாா்த்தைகளை மட்டுமா?

கிணற்றடி ஆடுகால் ஒரு பக்கம் மாறிப்போய்க்கிடக்கின்றது. பணத்துலாவின் அச்சுலக்கைத் துவாரம் அகன்று பெரிதாகி விட்டதால் துலா இடம் வலமாக ஆட்டம் தந்தது. கயிற்றினை இழுத்து நீரினுள் வாளியை அமிழ்த்தி அள்ளியபோது ஆடுகால்களை நிமிா்த்திச் செப்பனிடவேண்டுமென அவன் எண்ணிக்கொண்டான். இந்தக் காலத்தில் இவற்றினைத் திருத்திச்செப்பனிட யாா் இருக்கிறாா்கள்? கிணறுகளிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துலாக்கள் மெல்ல மறைந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் இடத்தை கப்பிகளும் பம்புகளும் பிடித்துக்கொண்டுவிட்டன.

இந்தக் கிணற்றில் நீர் அள்ளி எத்தனை வருடங்கள் அவனை அம்மம்மா குளிக்கவார்த்திருக்கிறாள். உடல் முழுவதும் ஊத்தை உருட்டி சவர்க்காரமிட்டு அக்கறையுடன் பராமரித்திருக்கிறாள். குளியலின் நிறைவு வாளி நீரை அவனுக்கு மேல் வார்க்கும்போது ''சோம் சோம் வளர் வளர்'' என்று வாழ்த்தி ஊற்றிவிடுவாள்.

''ராசா, ஓ உன்னைப்பற்றிக் கேள்விப்படுபவை சரியாகவில்லை.'' என்று அம்மம்மா ஒருநாள் அவனிடம் கேட்டாள். அவை காதுகளில் இப்பொழுதும் ரீங்காரமிடுகின்றன. அவன் தவறாகவா நடந்து கொள்கிறான்?

நீரையள்ளித் தலயில் வார்த்துக்கொள்ளும்போது துயரம் எல்லாவற்றையும் கழுவித் தள்ளிவிட விரும்பினான் இனந் தெரியாத துயரத்தின் பயங்கலந்த ஏக்கம் இரண்டு மூன்று நாட்களாக அவனைப் பிடித்துக் கொண்டிருக்கிறது.

தலையைத்துவாயினால் துவட்டிக்கொள்ளும் போது யாரோ மோட்டார் சயிக்கில் ஒன்றில் வந்து இறங்கித் தன் பெயரைச் சொல்லி விசாரிப்பது கேட்கின்றது. அப்படியே கிணற்ற டியிலிருந்து முற்றத்திற்கு வந்தான். முற்றத்தில் அண்ணருடன் பேசிக்கொண்டு குருபாதம் நின்றிருக்கிறான். கனடாவிலிருந்து இவன் எப்பொழுது வந்தான்?

''உன்னிடம் தான் ராசு.'' என்றார் அண்ணர்.

''வாடா வா நீ எப்ப வந்தாய்?''

''இப்பத் தான். உன் அம்மம்மா செத்துப்போனா என்று கேள்விப்பட்டதும் ஓடி வாறன்.'' என்று குருபாதம் சிரிக்கிறான். அவன் தசைபோட்டுக் கொழுத்திருக்கிறான். வண்டியில் தொங்கல் தசை காணப்படுவது, இறுகக்கட்டிய வயிற்றுப் பட்டியையும் மீறித் தெரிகின்றது.

அவர்கள் கதிரைகளில் அமர்ந்தபோது அண்ணர், ''சாப்பிட்டுவிட்டுக்கதைக்கலாமே?'' என்கிறார்.

''வா குரு, சாப்பிட்டபடி கதைப்பம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் பந்தியில் அமர்ந்து கொண்டனர்.

"நான் நேற்றுத் தான் யாழ்ப்பாணம் வந்தனன். எனக்கு நாளை மறுநாள் கலியாணம். உனக்குச் சொல்ல உன் வீட்டிற்குப் போனன். நீ இங்க என்றினம். என்னடா மச்சான் நீ மணிவண்ணனின் அக்காவையா திருமணம் செய்திருக்கிறாய்?"

"உனக்கெப்படித் தெரியும்?"

"மணியும் நானும் ஒன்டாகத்தான் கனடாவிலிருந்து வந்தம். நல்ல பழக்கம். உன்னைப்பற்றி விசாரித்தேன். கராஜைக் காட்டிவிட்டினம். அங்க போனன். உன்ர மனிசி வீட்டைக் காட்டிவிட்டனம். அவர்கள் நீ இங்க என்று சொல்லிச்சினம். வந்திருக்கிறன்."

"முதலில் வடிவாச் சாப்பிடுங்கோ."

அவர்கள் சாப்பிட்டுவிட்டு எழுந்து கை கழுவிக் கொண்டனர்.

"நீ இப்பஇயக்கத்திலில்லையா?"

"இல்லை.. விலகிவிட்டன். கன காலம். ஐந்து ஆறு வரியமிருக்கும்."

"நீ என்னைப்போல வெளிநாட்டிற்கு வந்திருக்க வேணும்.."

"எல்லாருக்கும் வெளிநாட்டிற்குச் செல்ல வசதியிருக்கிறதா, குரு?"

"நீ எனக்கு எழுதியிருக்கலாம்."

"உன் விலாசமே எனக்குத் தெரியாது. இன்று தான் காண்கிறன். சொல்லாமற் கொள்ளாமல் ஓடிப்போனாய். இப்படித் தான்ரா, நேரில கண்டதும் அழைப்பியள்."

இராசலிங்கத்தின் கரத்தினைக் குருபாதம் பற்றிக் கொண்டான்.

"அப்படியென்டால் உன்னைத் தேடி வந்ததும் வராததுமாக வருவனா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சும்மா ஒரு கதைக்குச்சொன்னன், மச்சான். கோபியாதை.''

நண்பர்கள் பலதும் பத்தும் பேசிக்கொண்டார்கள். அவர்களின் பேச்சு மீண்டும் சுய விபரத்திற்கு வந்தது.

''நீ என் கலியாணத்திற்கு வருவியா? உன்ர மனிசியையும் கூட்டி வா. சும்மா செல்லக்கூடாது உன்ர செலக்சன் பிரமாதம், இராசு. காதல் கலியாணமாமே? எப்படியடா..? உன்னாலும் காதலிக்க முடியுமென்டு நான் நினைக்கவில்லை.''

இராசலிங்கம் வெட்கத்துடன் சிரித்தான். கவிதாவின் எழில் முகம் மனதில் எழுகிறது. அவளை இருநாட்கள் பிரிந்திருப்பது தாபத்தை ஏற்படுத்தியது.

''காதலிக்கப்பட்டன்..'' என்றான் இராசலிங்கம்: ''அது ஒரு இனிய அனுபவம். எல்லா ஆசைகளிலும் காதல் தான் வலிமையானதென நினைக்கிறன். குரு. உன் கலியாணம்.. காதல் திருமணமா? சீதனத்திருமணமா?''

''அதென்ன சீதனத் திருமணம்?''

''யாழ்ப்பாணத்தில் பேசிச்செய்கின்ற பெரும்பாலான திருமணங்கள் சீதனத்திருமணங்கள் தான். அது தான் கேட்டன்.''

''பேசி முற்றாக்கிய கலியாணந்தான். ஆனால் சீதனத் திருமணமல்ல. வெளிநாட்டு மாப்பிள்ளை எடுக்க யார் தயாராகவிருக்கினம்? அந்தக் காலகட்டம் கடந்துவிட்டது. ஒருத்தியும் வெளிநாட்டு மாப்பிள்ளைகளைக் கட்டிக்கொள்ள இப்ப தயங்குகிறாளவை. அங்கு வந்து கணவனோடு யந்திரமாக உழைக்க அவர்கள் தயாராகவில்லை. அல்லது இருபத்தி நான்கு மணிநேரமும் அறைக்குள் ரி.வி. பார்த்துக்கொண்டு சிறை யிருக்கத் தயாராகவில்லை. என்ரகலியாணம் கண்டிசனோட நடக்குது. மூன்று வரியத்தில கனடாவிலிருந்து நிரந்தரமாக திரும்பி யாழ்ப்பாணத்திற்கு வந்திட வேண்டுமாம்..''

''அப்படியில்லையென்டால்..''

குருபாதம் பலமாகச் சிரித்தான்.

''என்னைக் கனடாவில் விட்டுவிட்டு அவள் பிள்ளை களுடன் யாழ்ப்பாணத்திற்கு வந்திடுவாளாம். இடைக்கிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வந்து போகட்டாம்.. இராசு, என்னதான் பணம், வசதிகள் இருந்தாலும் யாழ்ப்பானம் போல வராது. இந்த மண்ணில் அப்படியொரு பாசப்பிடிப்பு, ஒட்ட வைக்கும் பசையிருக்குது. நானும் இரண்டு மூன்று வரியத்தில திரும்பி வந்து விடலாமென்றிருக்கிறன். பிள்ளைகள் அந்த மண்ணில் பிறந்து வளர்ந்து ஆளாகிவிட்டால் அதுகள் யாழ்ப்பாணத்திற்கு நிச்சயம் வராதுகள். யாழ்ப்பாணத்தின் தொலைந்துபோகும் தலைமுறை களாகிவிடும்.''

''எனக்கு அதில் நம்பிக்கையில்லை.'' என்கிறான் இராசலிங்கம்.

குருபாதம் விடைபெற்று படலையை நோக்கி நடக்கிறான். நண்பனுக்கு விடை கொடுப்பதற்காகக் கூடவே இராசலிங்கமும் செல்கிறான். மோட்டார் சயிக்கிலில் ஏறி அமர்ந்தபடி குருபாதம் இராசலிங்கத்தைக் கேள்விக் குறியுடன் ஏறிட்டுப்பார்த்தான்.

''நீ என்ன கேக்க விரும்புகிறாய் என்பது எனக்குத் தெரியும். உண்மையில் திருமணம் முற்றாகிய பின்னர் தான் கவிதா, சண்முகத்தாரின் மகள் என்பது எனக்குத் தெரியும், குரு.'' இராசலிங்கத்தின் வார்த்தைகள் பரிதாபமாக வெளிப்படுகின்றன. அவனைக் கவலையோடு ஏறிட்டுப் பார்த்துவிட்டு குருபாதம் மோட்டார் சயிக்கிலை உதைத்து ஸ்டார்ட் பண்ணி தெருவில் வேகமாக ஏறிக்கொள்கிறான்.

## 9

கட்டிலில் படுத்திருந்தபடி யன்னலூடாக முற்றத்தைப் பார்க்கும் போது முற்றம் குளிர்ச்சியாக இருப்பதாகப் படுகின்றது. முற்றத்தில் ஒரு வேம்பும் மாமரம் ஒன்றும் நன்கு செழித்து வளர்ந்து நிழலைப் பரப்பிக்கொண்டிருக்கின்றன. மாமரத்தினைச் சுற்றிப் பெரியதொரு பாத்தி பிடிக்கப்பட்டிருக்கிறது. பாத்திக்குள் பாத்திரங்களை வைத்து அம்மா வாளியிலிருந்து நீரை அள்ளிக் கழுவிக்கொண்டிருக்கிறாள். பாத்திரங்கள் கழுவுவதாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமரத்திற்குத் தண்ணீர் கிடைப்பதாகவும் இந்த ஒழுங்கு இருப்பதாக மணிவண்ணன் எண்ணிக் கொண்டான்.

முற்றத்துக் குப்பைகளைக் கூட அம்மா வளவில் ஒதுக்காக அரைவேலிப்பட்டி அடைத்து அதனுள் சேகரித்து வருகிறாள். கந்தையா அம்மான் காலத்திற்குக் காலம் வண்டிலுடன் வந்து இலவசமாகத் தோட்டத்திற்கு ஏற்றிச் செல்வார்.

சின்னக்கா அடுக்களைக்குள் சமையல் வேலையில் ஈடுபட்டிருக்கிறாள். அவனுக்கு விதம் விதமாக ஆக்கிப் போடுவது அவள் பணியாகிவிட்டது.

''உனக்குச் சின்னவயதில் சீனியரியாரம் பிடிக்கும், தம்பி''

அடுக்களைக்குள் சீனியரியாரம் எண்ணெயில் பொரிந்து வேகுவது மணத்திலிருந்து தெரிகிறது. தெருவில் வாகனம் ஒன்று விரைகிறது. இராணுவ டிறக் போல் தெரிகிறது. முற்றத்தில் சுருண்டு படுத்திருந்த நாய் குரைத்துவிட்டு மீண்டும் படுத்துவிட்டது.

சின்னக்காவின் திருமணம் நினைவில் மீண்டும் வருகின்றது.

கந்தையா அம்மான் ஏன் அப்படிக் கதைத்தார்? நேற்றுக் காலை அவன் அவர் வீட்டிறகுச் சென்றிருந்தான். அவர் வீட்டிலிருந்தார். வன்னியிலிருந்து திரும்ப வந்த அவரது மகள் அன்னமலரும் ராசாத்தியும் அங்கிருந்தனர். அவனைக் கண்டதும் ராசாத்தி முகம் மலர்ந்து ''வாங்கோ.'' என்று வரவேற்றாள். ஒரு கப்பல் பயணத்தில் அவள் அவனுடன் நன்கு அறிமுகமாகி விட்டாள். அவளுக்குப் பதினெட்டு வயதிருக்கும். இலட்சண மான பெண். சிரிக்கும் போது முன் பற்களில் தனியாகத் தெரிகின்ற ஒரு பிளவு அவளது சிரிப்பிற்குத் தனி சோபை தந்தது. மெலிவுமற்ற பருமனுமற்ற அளவான கவர்ச்சியான தோற்றம். அவன் பேசும் போது விழிகள் கனவில் ஆழ்ந்திருக்கும். வார்த்தைகள் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் வெளிவரும். கப்பலில் அவருடன் பேசிய சொற்ப நேரத்திற்குள் அவன் புரிந்து கொண்டவை இவை.

''எப்படிக் கனடா, தம்பி?'' என்று கந்தையா அம்மான் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன கனடா அம்மான். யாழ்ப்பாணம் மாதிரி வராது.''

''அப்ப எல்லாரும் அங்க ஓடுகினம்?''

''அதற்குக் கன காரணம் இருக்கிறது அம்மப்பா. இங்க பாதுகாப்பில்லை. தொழிலில்லை. சுதந்திரமில்லை.'' என்றாள் ராசாத்தி உரமாக. அவள் வார்த்தைகள் தெறித்து விழுந்தன.

''ராசாத்தி சொல்வது சரிதான். நீங்க இடம் பெயர்ந்து திரும்பி வந்தியன். நானூறு பேர் வரையில் காணாமற் போயினர். அப்ப இங்க என்ன பாதுகாப்பிருக்கிறது? நான் கூட அண்ணனுடன் கனடாவிற்குப் போனது அதனால் தான். இந்திய அமைதிப்படை இங்க செய்த அட்டூழியங்களுக்குப் பயந்து தான். பட்டப்பகலில் அப்பாவைச் சயிக்கிலில் ஏற்றிச் சென்று தலையைத் துண்டித்து வீதியில் எறிந்தார்களே? அதற்காகத் தான்..''

மணிவண்ணனின் குரலில் கோபமும் கவலையும் வெளிவந்தன.

கந்தையா அமைதியாக அவர்கள் இருவரையும் பார்த்தார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள். அவர்களுடன் பேசிவிட முடியாது. பிள்ளைப்பருவத்தின் இனிமைகளைத் தொலைத்தவர்கள். வெப்பிகாரமும் ஏமாற்றமும் வன்மும் நெஞ்சங்களில் குடியேற்றியிருக்கும். அவர்கள் பலவற்றினையும் பேசிக்கொண்டார்கள்.

அவர்களின் பேச்சு கவிதாவின் திருமணத்திற்கு வந்தது.

''எனக்கு இத் திருமணத்தில் சிறிதும் விருப்பமிருக்க வில்லை. தம்பி.'' என்று கந்தையா அம்மான் கூறியபோது மணிவண்ணன் திகைப்படைந்தான். அவன் விழிகளில் ஆச்சரியமும் கவலையும் படர்ந்தன. கந்தையா அவனை ஏறிட்டுப் பார்த்தார்.

''ஏன், அம்மான்? அத்தான் சரியில்லையா? அக்காவை விரும்பித்தானே, அக்காவும் விரும்பித்தானே கலியாணம் நடந்தது?''

''அம்மப்பா சொல்லுற காரணம் சரியில்லை. ஒரு காலத்தில் இயக்கத்தில் இருந்தவர் என்றதுக்காக இப்படியெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மப்பா கதைக்கக் கூடாது. எங்கூட இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்த நேர்ந்தது என்பதை வயதுபோனதுகள் மறந்திருக்கலாம். நாங்க ஒருக்காலும் மறக்க முடியாது.'' என்று ராசாத்தி அவசரமாகக் குறுக்கிட்டாள். மணிவண்ணனுக்கு அதிர்ச்சியாகவிருந்தது. அப்பாவின் மரணத்திற்குப் பிறகு அவனுக்கு இயக்கம் என்றால் பிடிப்பதில்லை. அவர்களைத் தகப்பனில்லாத பிள்ளைகளாக்கியது ஏதோ ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நாம். அவன் முகத்தில் தோன்றிய மாற்றத்தை ராசாத்தி கண்டாள்.

''போராட்டத்தில் அப்படியான நிலைமைகள் தவிர்க்க முடியாதவை.''

''என் அப்பா என்ன குற்றம் செய்தார்?''

அவள் அவனை இரக்கத்துடன் பார்த்தபடி, ''அது உங்களுக்குத் தெரியாது. எனக்கும் தெரியாது. நியாயம் எவர் பக்கமோ?'' என்றாள்.

''ஒவ்வொருவனும் தன் செயலிற்குத் தன்பக்கத்தில் நியாயம் வைத்திருப்பான், ராசாத்தி தயவுசெய்து கொலையை நியாயப்படுத்த முயலாதீர்கள்.''

கந்தையா அவசரமாகக் குறுக்கிட்டார்.

''உந்தக் கதைகளை விட்டிட்டு தம்பிக்குத் தேத்தண்ணி ஊத்தி வா, பிள்ளை.''

ராசாத்தி சிரித்தபடி அடுக்களைக்குள் நுழைகிறாள். கந்தையா மணிவண்ணனை சாந்தமாகப் பார்த்தார்.

''இதோ பார் தம்பி, எந்த மனிதனும் பிறக்கும் போது கொடியவனாகப் பிறப்பதில்லை. சந்தர்ப்பம் தான் மனிதனை நல்லவனாகவோ தீயவனாகவோ மாற்றுகின்றது. சந்தர்ப்ப வசத்தால உன் அப்பாவிற்கு அப்படிச் செய்திட்டினம். அதெல்லாம் விதி, தம்பி.''

''அதை விதியென்று சொல்ல மாட்டன் அம்மான். அப்பாவை இந்த நிலைக்கு ஆளாக்கியவனை நான் கண்டால்..'' விழிகள் சிவக்க அவன் அவரைப் பார்த்தான்.'' அந்தப் பாவிகளைக் கண்டால் விடமாட்டன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தையா அவனை கருணையோடு விழித்தார்.

''ஒருத்தன் தீமை செய்திட்டான் என்பதற்காக அவனைப் பழி வாங்குவதைவிட மன்னிப்பது அதி கண்ணியமானது தம்பி.''

''அவனைப் பழிவாங்கிறதென்டு நான் சொல்லவில்லை, அம்மான். நிச்சயமாக அவனை நான் மன்னிக்க மாட்டன். எங்கள் இனிமையான குடும்பத்தைச் சீரழித்த பாவி.''

''நடந்தது நடந்துவிட்டது. இந்த விசயத்தில உணர்ச்சி வசப்படக்கூடாது. பகுத்தறிவோடு செயற்படவேண்டும். உலகத்தில ஒவ்வொன்றுக்கும் மாறி மாறிப் பழி வாங்கிக் கொண்டு போனால் கடைசியில என்ன மிஞ்சும்? உன் அப்பாவின் மரணத்தால் உன் அம்மா விதவையானதுபோல உன் பழிவாங்கலால் இன்னொருத்தி தாலியறுக்கக்கூடாது. உன் அப்பாவின் மரணத்தால் நீங்கள் அனாதைகளானதுபோல உன் பழி வாங்கலால் வேறு பிள்ளைகள் அனாதைகளாகிவிடக்கூடாது. தம்பி. ஒரு சின்ன ஓட்டையே பெரியதொரு கப்பலை மூழ்கடித்துவிடும். குடும்பம் என்பதும் ஒரு கப்பல் தான்.''

தேநீருடன் ராசாத்தி வந்தாள்.

இப்பொழுது நினைத்தாலும் கந்தையா அம்மானின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் மனதில் தெறிக்கின்றன. அவர் ஏன் அப்படியெல்லாம் பேசினார்? தொடர்பற்ற பேச்சு மாதிரியும் இருக்கிறது. ஏதோ விசயத்தை மனதில் மறைத்துக்கொண்டு அவனைச் சாந்தப்படுத்தும் விதமான பேச்சாகவும் படுகின்றது.

முற்றம் வெறிச் சிட்டுக்கிடக்கின்றது. வெயில் உச்சிக்கு ஏறியிருக்கிறது. வேம்பின் கிளைகளை மீறி முற்றத்தில் ஒளிப்பொட்டுக்கள் தாம் சிதறிக்கிடக்கின்றன. வெயிலின் காங்கை இருந்தாற்போல வீட்டிற்குள் தெரிகிறது.

வாசல் படலையில் மோட்டார் சயிக்கில் ஒன்று வந்து நிற்கிறது. ஹோர்ன் சத்தம். அக்கா எழுந்து ஓடிச்செல்கிறாள். அத்தான் என்று நினைத்தாளோ? படலையைத் திறந்த போது ஒருவன் பெரியதொரு ஆல்பம் ஒன்றினை அவளிடம் நீட்டுகிறான். அக்காவின் முகம் மலர்கிறது. ஆவலுடன் பிரித்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிறாள். திருமணப்படங்கள். முகத்தில் பெரு மகிழ்ச்சியும் பெருமிதமும் களியிட வேகமாக ஒவ்வொரு படக்கத்தையும் தட்டிப்பார்க்கிறாள்.

''என்னக்கா?''

''வெடிங் போட்டோ.. இந்தா வடிவாகப் பார். அத்தானைப் பார். அடுப்படில கறி கொதிக்குது..'' அவனிடம் படங்களை வழங்கிவிட்டு அக்கா அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள்.

அவன் ஆவலுடன் போட்டோ அல்பத்தை எடுத்துப்பிரிக்கத் தொடங்கினான். பக்கங்கள் விரிகின்றன. அக்காவின் சாமார்த்தியச் சடங்குப்படங்கள் முதற்பக்கங்களைப் பிடித்திருந்தன. அக்கா பலகையில் முக்காடிட்டு இரு கரங்களிலும் வெற்றிலைச் சுருள்களுடன் அமர்ந்திருக்கக் கந்தையா அம்மான் உட்படபலர் பால் அறுகு வைக்கிறார்கள். அடுத்த பக்கங்களில் அக்காவின் மணவறை அலங்காரத் தோற்றங்கள்.'' சின்னக்கா நல்ல வடிவு'' என்று அவன் தனக்குள் சொல்லிக் கொள்கிறான்.

பக்கங்கள் தட்டப்படுகின்றன. இராசலிங்கம் மாப்பிள்ளை அலங்காரத்துடன் எழுந்து நிற்கிறான். அழைத்து வருகிறார்கள். அக்காவின் பக்கத்தில் அமர்ந்திருக்கிறான். அவன் அமர்ந்திருப்பதைப் புகைப்படக்காரன் மிக குளோசப்பாகப் பிடித்திருக்கிறான்.

''இவனா?..'' என்று மணிவண்ணன் வீரிட்டான். அப்படியே நிலை குலைந்துபோய் எழுந்து அமர்ந்தான். விழிகளில் பொறி தட்டியது. தலை சிதறிவிடுமாப்போல விண்ணென வலி காண்கிறது. வீட்டின் கூரை அப்படியே தகர்ந்து அவன் மீது சரிந்ததுபோல உணர்வு.

''அக்கா நீ ஏமாந்துபோனியே? இவனையா நீ காதலித்தாய்? போயும் போயும் இந்தப் படுபாவியையா நீ காதலித்தாய்?'' இதயம் குமுறி அலறியது. உடம்பு மெதுவாக நடுங்கத் தொடங்குகிறது. கட்டிலை இறுகப்பற்றிக் கொண்டான்.

விரல்கள் வலிகண்டன.

விழிகள் நீர்த்துளிகளை ஏந்திக்கொள்கின்றன. ஆல்பத்தை அப்படியே தூக்கிக் கட்டிலின் கால்மாட்டில் வீசியெறிந்துவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திருக்கிறான். காங்கரில் மாட்டியிருந்த சேர்ட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு, வேப்பமரத்தடியில் நிறுத்தப்பட்டிருந்த சயிக்கிலை வேகமாக உருட்டிக்கொண்டு படலையை நோக்கி நகர்ந்தபோது, கவிதா வெளியில் வந்தாள்.

''தம்பி, இந்தவெயிலில் எங்க போறாய்? சாப்பிட்டுவிட்டுப் போ..'' சின்னக்காவின் அழைப்பு அவன் காதுகளில் விழுகிறது. அவன் திரும்பிப்பாராமல் படலையைத் தள்ளித் திறந்து கொண்டு தெருவில் ஏறினான். இதயத்தில் எரிமலை குமுறி வெடிக்கிறது.

சயிக்கிலை அழுத்தி விழக்கி வேகமாகத் தெருவைக்கடந்து கண்ணில் பட்ட ஒழுங்கைகளூடாகச் செலுத்தினான். எவருக்கும் இப்படியொரு துன்பம் வரக்கூடாது. கப்பலில் சிறு ஓட்டை விழுந்துவிட்டது. கந்தையா அம்மானுக்கு இவை தெரிந்திருக்கின்றன. தெரிந்துமா இக்கலியாணம் நடக்கச் சம்மதித்தார்? சின்னக்காவின் கரத்தைப்பற்றி அந்தப்பாவியின் கரத்தில் ஒப்படைத்தார்? தன் பிள்ளையென்றால் இப்படிச் செய்திருப்பாரா?

அவன் நடராஜசுந்தரத்தின் வீட்டிற்கு வந்திருந்தான். படலையில் சயிக்கிலைச் சாத்திவிட்டு, ''நடா..'' என்று பெருங்குரலில் சத்தமிட்டான். அப்பொழுது தான் சாப்பிடத் தட்டில் கைவைத்த நடராஜசுந்தரம் திடுக்கிட்டு எழுந்து வெளியில் ஓடிவந்தான். மணிவண்ணன் நின்ற நிலை அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது.

''நடா..'' என்று அலறியவாறு ஓடிவந்து நண்பனைக் கட்டிக்கொண்டான். அவன் தோளில் முகத்தைப் புதைத்து விம்மிவிம்மி அழத்தொடங்கினான்.

''என்ன மணி.. என்ன?''

அவ்விடத்தில் எல்லாரும் கூடிவிட்டனர். சிறு குழந்தைபோல அவன் அழுவதைக் காண எல்லாருக்கும் எதுவும் புரியவில்லை. நண்பனின் முதுகை ஆதரவோடு தடவி அப்படியே அவனை அழைத்து வந்து தலைவாசல் வாங்கில் அமரவைத்தான். வாங்கில் அமர்ந்து கொண்ட மணிவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையில் அறைந்துகொண்டு மீண்டும் அழுதான். நடராஜசுந்தரம் அவன் கரங்களை இறுகப்பற்றிக்கொண்டான்.

''என்னடா தம்பி..'' என்று நடாவின் தாயார் கவலையோடு கேட்டாள்.

''எல்லாமே முடிஞ்சு போச்சுது, அம்மா.. எல்லாமே முடிஞ்சு போச்சுது. அந்தப்பாவிய சின்னக்கா கலியாணம் செய்துவிட்டா.''

அவன் என்ன சொல்கிறான் என்பது ஒருவருக்கும் புரியவில்லை.

''நான் ஆருக்கோ ஏதோவென்று பயந்து போனன்.. மணி. எல்லாம் அப்புறம் பேசிக் கொள்ளலாம். மத்தியானம் சாப்பிட்டியா? இங்க சாப்பிடுகிறியா? அல்லது வீட்டிற்குப் போகப் போறியா?''

''நான் வீட்டிற்கு இனிப்போகமாட்டன்.''

நடராஜசுந்தரம் துயரத்துடன் மணியைப் பார்த்தபடி திகைத்து நின்றான்.

ஏதோ நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. இவன் இவ்வளவு தூரம் கலங்கிப்போவதற்கு ஏதோ பலமான காரணமிருக்க வேண்டும்.

''நீ இங்கயே இருக்கலாம் மணி. உனக்கு மனச்சாந்தி வரும் வரை இங்கயே இருக்கலாம்.''

தூரத்தில் நாய்கள் கடிபட்டுச் சத்தமிட்டன.

அம்மன்கோயில் மதியகாலப் பூசைக்கான மணி ஒலி காற்றில் கலந்து வருகிறது. மணிவண்ணன் வாங்கில் அப்படியே சரிந்து கொண்டான். விழிகள் நீரைச்சொரிய அப்படியே அயர்ந்து மயங்கிப்போனான். நடராஜசுந்தரம் வீட்டிற்குள் போய் ஒரு தலையணியை எடுத்து வந்து நண்பனின் தலையை உயர்த்தி அதில் வைத்தபோது விழிகளைத் திறந்து பார்த்தான். மணிவண்ணன். பின்னர் அப்படியே அயர்ந்துபோனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரமான கனவுகள் அவனைப்பயமுறுத்தின. நண்பனின் அருகில் அவனைப்பார்த்தபடி நடராஜசுந்தரம் அமர்ந்திருந்தான்.

''தம்பி, சாப்பிடன்.''

''வேண்டாம் அம்மா.''

## 10

இரவு கழிந்து பகல் எழுந்தது. அந்த வீட்டில் எவரும் உறங்கவில்லை. மணிவண்ணன் இன்னமும் வீடு திரும்ப வில்லை. மத்தியானம் திடீரென வெளியேறிச் சென்றவன் திரும்பி வரவேயில்லை. கிளி இடிந்துபோய் ஒரு மூலையில் அழுதபடி அமர்ந்துவிட்டாள். கவிதா கலங்கிப்போய் தெரிந்த வர்கள் வீடெல்லாம் தம்பியைத் தேடிப் பார்த்துக் காணாது ஏங்கிப்போனாள்.

அவன் ஏன் அப்படி நடந்து கொண்டான்? அல்பத்தைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவன் திடீரென ஏன் வெளியேறிச் சென்றான்? அவள் கூப்பிடக் கூப்பிடச் சென்றானே? கவிதாவிற்கு எதுவும் புரியவில்லை.

''எனக்குப் பயமாக இருக்குது கவிதா.. ஆமிக்காரர் அவனைப் பிடிச்சிட்டினமோ என்று. உன்ர மனிசன் இருந்தாலும் நாலு காம்புகளுக்கு அனுப்பி விசாரிக்கலாம்.

''அப்படியிருக்காது அம்மா.''

''அவனிட்ட ஐ சி யுமில்லை. ஒரு ஐ சி யுமில்லை. அவன்ர பாஸ்போர்ட் கூட இங்க தான். எடுக்காமல் வெளியில் போயிருக்கிறானே?''

அம்மா விம்மி விம்மி அழுகிறாள். அவள் அமைதி அழிந்துவிட்டது. பதினொரு வருடங்களுக்குப் பின்னர் வந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன். ஆசையோடு அவனுக்குப்பிடித்த கணவாய் வாங்கிச் சமைத்து வைக்க ஒரு வாய் சாப்பிடாமல் வெளியேறிவிட்டான். 'என்ர பிள்ளை ஒருக்காலும் எங்கும் வெளியில் நிக்காது. ஏதோ நடந்துவிட்டது. ஆமிக்காரர் தான் ஐ சி யில்லாமல் பிடிச்சிருக்க வேண்டும்.''

அவளுக்குக் கந்தையாவின் நினைவு எழுந்தது. அவரைக் கூட்டிக்கொண்டு விசாரிக்கப் புறப்படவேண்டும்.

அவள் எழுந்திருந்தாள்.

''நானும் வாறன் அம்மா..''

அவர்கள் மூன்றாம் முறையாகக் கந்தையாவின் வீட்டிற்கு வந்தனர்.

''மணி இங்க வரவில்லை கிளி. எங்க போனான்?''

''சொந்தக்காரர் வீடெல்லாம் விசாரித்துப் பார்த்துவிட்டன். எங்குமில்லை. எல்லாரும் காம்புகளிலில விசாரிக்கச் சொல்லுகினம் அண்ணை. எனக்குப் பயமாக இருக்குது.''

''அப்படிப் பயப்படாதை, கிளி. ஏன் கவிதா, அவனுக்கு ஆராவது நண்பர்கள் இங்கினேக்க இருக்கினமே?''

அவளுக்கு ஒருவரையும் நினைவு வரவில்லை. எட்டு வயதில் ஊரைவிட்டுக் கனடாவிற்குச் சென்றவன். அந்த வயதில் அவனது நண்பர் யார் எவரென அவருக்குத் தெரிந்திருக்க வில்லை. அவனைத் தேடி ஒருத்தரும் வீட்டிற்கு வந்ததாகவும் அவளுக்கு நினைவில்லை.

''என்ன அண்ணை செய்யிறது? என்ர பிள்ளை எப்படியாவது எடுத்து வாருங்கோ?''

இராணுவம் தான் பிடித்திருக்க வேண்டுமென்று கிளி திடமாக நம்புகிறாள்.

''சரி.. உனக்காகத் திருநெல்வேலி காம்பிற்குப் போய் வாறன்.''

''நானும் வாறன் அண்ணை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் திருநெல்வேலி இராணுவ முகாமிற்கு வந்தனர். காத்திருந்து அதிகாரியைச் சந்தித்தனர். அவர் பலவிடங்களுக்கும் தொலைபேசி மூலம் மணிவண்ணன் பற்றி விசாரித்தார்.

''அப்படி யொருத்தரையும் நாங்க கைது செய்யவில்லை. கைது செய்திருந்தால் துண்டு தந்திருப்பினம், அம்மா.''

''என்ர பிள்ளை எங்கயும் போகாது. வீட்டிற்குள்ளேயே இருப்பான். தயது செய்து விசாரியுங்கோ..'' என்று கிளி அழுதபடி கெஞ்சினாள்.

''சரி அம்மா. நீங்க போயிட்டுச் சாயந்தரமாக வாருங்கோ.''

அவர்கள் ஏமாற்றத்துடன் வெளியில் வந்தனர்.

''தாவடிக் காம்பில விசாரிப்பமே, அண்ணை.''

அங்கும் அதே பதில் தான் கிடைத்தது.

''மனிதவுரிமைகள் சங்கத்தில் போய் ஒருக்கா முறைப்பாடு செய்யுங்கோ..'' என்று ஒரு சிலர் ஆலோசனை வழங்கினர்.

''இன்டைக்கும் பார்த்திட்டு செய்வம்..''

நண்பகல் கழிந்து மாலை நெருங்கியது. மணிவண்ணன் வீட்டிற்குத் திரும்பவில்லை. கவிதாவிற்கு நெஞ்சு வெடித்து விடும்போலவிருந்தது. இதற்காகவா அவனைக் கனடாவிலிருந்து இங்கு அழைப்பித்தம்? அங்கயே நிம்மதியாக இருக்க விட்டிருக்கலாமே? பத்திரிகைகளில் வருகின்ற செய்திகள் அவளுக்குக் கலக்கத்தைக் கொடுத்தன. ஒருவேளை அவன் புங்குடித்தீவிற்குப போய் இருப்பானோ? அத்தானின் அம்மம்மாவின் செத்தவீட்டிற்கு? இருக்காது. சொல்லாமல் போகமாட்டான்.

அவனுக்கு என்ன நடந்தது? நான் ஏதாவது கோபித்து நடந்து கொண்டேனா? அவனுக்காகச் சீனியரியாரம் கூடச் செய்தேனே? அதில் ஒன்றைக் கூட அவன் சாப்பிட்டுப் பார்க்கவில்லை.

இப்படியிருக்குமோ? அவளுக்குப் பொறிதட்டியதுபோல விழிப்பு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்பத்தைப் பார்த்திருப்பான். அக்காவிற்குப் பொருத்தமாக அத்தான் இல்லை என்று நினைத்திருப்பானோ? அதனால் கோபித்துக் கொண்டு வெளியேறிவிட்டானோ? இதில் கோபிக்கிறதுக்கு என்ன இருக்கிறது? அவள் விரும்பித்தானே இராசலிங்கத்தைக் கலியாணம் செய்ய ஒப்புக்கொண்டாள். அந்த மனிசனின் இளகிய உள்ளமும் தெளிவான பேச்சும் நல்ல குணமும் வேறு யாருக்கு வரும்?

வந்ததும் வராததுமாக மணிவண்ணன் கவிதாவிடம் கேட்டான்:'' அக்கா, அத்தான் எப்படி?''

''நீ உருவத்தைக் கேக்கிறாயா? குணத்தைக் கேக்கிறாயா?''

''இரண்டையும் தான்.''

''தோற்றத்தில அவர் கறுப்பு. பௌர்ணமியும் அமாவாசையும் என்று அம்மா ஒரு நாள் சொன்னா. ஆனால் குணத்தில தங்கக் கம்பி. வெத்திலைக் காம்பைக்கூடக் கடிக்க மாட்டார். நான் கிழித்தகோட்டை என்னைக் கேளாமல் தாண்டமாட்டார்.''

''ஐந்து நாட்களுக்குள்ள அதெப்படி அக்கா உனக்குத் தெரியும்?''

''நான்கு வருசப் பழக்கமடா, தம்பி.''

அவன் சிரித்த சிரிப்பு இப்பொழுதும் நினைவில் வருகின்றது.

படலையை யாரோ திறக்கின்றார்கள். கவிதா பார்க்கும்போது ராசாத்தி சயிக்கிலுடன் உள்ளே வருகிறாள். ஏதாவது தகவல் கிடைத்திருக்குமோ?

ஆவலுடன் அவளை ஏறிட்டாள் கவிதா. அம்மாவும் எழுந்து வந்தாள்.

கதிரையில் அமர்ந்து கொண்டாள் ராசாத்தி.

''ஏதாவது தெரிந்ததா, ராசாத்தி?''

''அம்மப்பா தேடித்தான் போயிருக்கிறார், மாமி. பயப் படாதையுங்கோ. எதுவும் தப்பாக நடந்திருக்காது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசாத்தியின் ஆறுதல் மொழி அவர்களுக்குச் சற்று நிம்மதியைத் தந்தது.

''என்ர பிள்ளை, என்ர பிள்ளை..'' என அம்மா புலம்பத் தொடங்கினாள்.'' ஒரு கலியாணம் கட்டி அவனோட அனுப்பி விட எண்ணியிருந்தனே?''

''அழாதையுங்கோ, மாமி. அவர் வந்திடுவார். இங்க வீட்டில ஏதாவது நடந்ததே?'' என்று ராசாத்தி கேட்டாள்.

''ஒண்டுமே நடக்கவில்லை. வெடிங் அல்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவ்வளவு தான் இருந்தாற்போல எழுந்து விறுவிறென வெளியில போறதைக் கண்டன். கூப்பிடக்கூப்பிட எதுவும் பேசாமல் போய்விட்டான். ஒன்டுமே விளங்கவில்லை. ராசாத்தி.''

ராசாத்தியின் உள்ளத்தில் பளீரென உறைத்தது. எதுவும் பேசவில்லை. மணிவண்ணனுக்கு ஒன்றும் ஆகியிருக்காது. யாழ்ப்பானத்துத் தாய்மார் தம் பிள்ளைகள் மாலைக்கருக்கக்குள் வீடு திரும்பவில்லையென்றால் பயந்து பதறிப்போவார்கள். கிளி மாமியும் அந்தச் சாதாரண தாய்மாரில் ஒருத்தி தான்.

யாழ்ப்பாண நிலவரங்கள் அப்படித் தான் இருக்கின்றன. எங்கோ ஒரு மூலையில் யாரோ ஒருவர் கைது செய்யப் படுகின்றார்கள். வருடக்கணக்கில் எதுவித விசாரணையும் இன்றி சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மணிவண்ணனுக்கு அப்படியொன்றும் ஆகியிருக்காது. அவர் காணாமற்போனதுக்கு வேறு காரணமிருக்கிறது. அம்மம்மா சொன்னது மாதிரி அப்படியிருக்குமோ?

ராசாத்தி வீட்டிற்குத் திரும்பி வந்தபோது தலைவாசலில் கந்தையா சிந்தனையோடு அமர்ந்திருந்தார்.

''ஏதாவது தெரிந்ததா, அம்மப்பா?''

அவர் அவளை நிமிர்ந்து பார்த்துவிட்டு எதுவும் பேசாமல் இருந்தார். அவருக்கு ஏதோ தெரியும். மணிவண்ணனைப்பற்றி அவன் இருக்குமிடம் பற்றித் தெரிந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மணிவண்ணன் எங்க அம்மப்பா? சொல்லுங்கோ..''

கந்தையா முற்றத்தினை வெறிக்கப் பார்த்தார்.

''உது வலு பிரச்சினையாகத் தான் வரும்போல இருக்குது, ராசாத்தி.''

''அதுகிடக்கட்டும் அவர் இப்ப எங்க? கண்டியளா?''

''கண்டன்.. வர மறுத்திட்டான். வாறதென்டால் கொலைகாரனாகத் தான் வருவானாம். அந்த வீட்டிலிருந்து இராசலிங்கத்தின் பிரேதம் வெளிவந்தால் தான் அவன் அங்க வருவானாம்..''

ராசாத்தி திக்கித்துப் போனாள்.

''எங்க கண்டியள்..?''

''சொல்லக்கூடாது என்றிட்டான். அவன் வெறி பிடித்திருக்கிறான், பிள்ளை.''

''எங்க சொல்லுங்க அம்மப்பா? அவரை இப்படியே விட்டுவிடுவதா? அவருக்கு வெறி பிடிக்க என்ன நடந்தது?''

கந்தையா சொன்னார்: ''வண்டில்கார நடராஜசுந்தரம் வீட்டில இருக்கிறான். நடராஜசுந்தரத்துடன் ஒண்டாப் படித்தவனாம். பழைய சிநேகிதம். தான் அங்க இருக்கிறத வீட்டில சொன்னால் உண்மையில் தான் எங்காவது கண்காணாத இடத்திற்கு ஓடிப்போய்விடுவேன் என்கிறான், பிள்ளை.''

ராசாத்தி சற்று நேரம் மௌனமாகவிருந்தாள்.

''அம்மப்பா, அங்க கிளி மாமியும் கவிதா அக்காவும் துடிச்சுப் போய் இருக்கினம்.. இன்னமும் நேற்று மத்தியானத்திலிருந்து சாப்பிடவில்லை. பசி பட்டினியாகக்கிடக்கினம். அவருக்கு என்ன நடந்ததாம்?''

கந்தையா மௌனம் சாதித்தார்.

மணிவண்ணனுடன் அவர் மனந்திறந்து பேசினார். அவன் தெளிவாகத் தன் மனநிலையை அவருக்குத் திறந்து வைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மான், நீங்களாகவிருந்தால் என்ன செய்வியள்?''

''தம்பி, இஞ்ச பார். நடந்தது நடந்துவிட்டது. அவன் இராசலிங்கம் என்பது உனக்கு நல்லாத் தெரியுமா?''

''அந்த முகத்தை நான் மறக்கவில்லை, அம்மான். அப்பாவைக் கட்டாயப்படுத்தி இழுத்துச் சயிக்கில் காரியரில் ஏற்றி அழைத்துச்சென்ற அந்த முகத்தை நான் இன்னமும் மறக்கவில்லை. அம்மான். நீங்களும் அங்க நின்றியள் தானே?''

அவர் எதுவும் பேசவில்லை. அவருக்கு அந்த முகம் தெளிவாகவில்லை. உள்மனதில் ஏதோ ஒரு அசமந்தம் எச்சரித்திருக்கிறது. இராசலிங்கத்தைக் கவிதாவிற்குக் கட்டிவைக்க அவர் விரும்பாமைக்கு அந்த எச்சரிக்கைதான் காரணமோ?

''இதோ பார் மணி, இனித் தான் நீ பொறுமையோடு இருக்க வேண்டும். இது உன் அக்காவின் வாழ்க்கை. ஏறுமாறாக நடந்து குடும்பத்தையே குலைத்துவிடாதே?''

''ஒரு கொலைகாரனோடு என் அக்கா வாழுறதிலும் காலமெல்லாம் கண்ணீரோடு விதவையாக வாழுறது நல்லது. அக்காவிற்கு இராசலிங்கம் யார் என்ற உண்மை தெரிந்தால் போதும். அவவே அவனுக்கு விசம் வைப்பா.''

கந்தையா திடமாக அவனிடம்,'' எனக்கு ஒரு வாக்குத் தரவேணும், மணி. நான் சொல்கிறவரை இந்த விசயத்தை எவரிடமும் சொல்லக்கூடாது.'' கேட்டார்.

அவன் அவரைத் துயரத்துடன் ஏறிட்டுப்பார்த்தான்.

''அப்ப நீங்களும் நான் இங்க இருக்கிறதை எவரிடமும் சொல்லக்கூடாது.''

''இப்படியே இருக்கப் போறியா?''

''நான் நல்லாக் குழம்பிப்போய் இருக்கிறன் அம்மான். எனக்குச் சற்று சந்திக்க அவகாசம் தேவை.''

''நல்லா யோசித்துப் பார். சரி பிழையை நல்லா யோசித்துப் பார், மணி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் அவசரப்பட்டு முடிவெடுக்காமல் சிந்திக்க ஆரம்பித்துவிட்டானென்றால் அவ்விடத்தில் தெளிவிருக்கும் என அவர் எண்ணிக்கொண்டார்.

ராசாத்தி இங்கு அவரை வற்புறுத்தினாள்.

''கிளிமாமிக்காவது சொல்லுவம், அம்மப்பா.''

''கூடாது.. நீ சொல்ல வேண்டாம். நான் பக்குவமாக எடுத்துச்சொல்லுவன். நாங்க சொல்கிற வார்த்தையில் தான் அந்தக் குடும்பம் நிம்மதியாக வாழ்கிறதா? அல்லது ஒரேடியாகச் சீரழிந்து போகிறதா என்ற சங்கதியே இருக்கிறது பிள்ளை. கால் தடுமாறினால் சமாளித்து நிக்கலாம் பிள்ளை. நாக்குத் தடுமாறினால் அவ்வளவு தான். மீளவே முடியாது. கறந்த பால் முலையில் ஏறாதது போல, கொட்டிய வார்த்தைகளுக்கு மீளப் பெற முடியாதவை. தெரியுதா?''

''புரியுது அம்மப்பா. ஆனால் அவர்களுக்கு ஆறுதல் சொல்லுங்கோ.''

''அது சரி, நானும் பார்க்கிறன். நீ கப்பலில் வந்ததிலிருந்து மணியில இவ்வளவு அக்கறையாக இருக்கிறாய்?'' என்று அவர் பேத்தியை நோக்கிக் கண்சிமிட்டினார்.

அவள் ஒருகணம் உறைந்து போனாள்.

## 11

யன்னலூடாகச் சில்லென்ற காற்று நுழைந்து பரவுகிறது. கட்டிலில் படுத்திருந்தபடி வெளியே பார்க்கும்போது வானத்தில் தகதகவென பௌர்ணமி நிலவு முகம் காட்டுகிறது. ஆனால் கவிதாவின் உள்ளத்தில் அந்தகார இருள், இனந்தெரியாத கவலை அழுத்திக்கொண்டிருக்கின்றது. அருகில் படுத்திருக்கும் இராசலிங்கத்தைப் பார்த்தாள். அவன் ஒரு புறம் திரும்பிப் படுத்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இருவரையும் உறக்கந் தழுவவில்லை. மனதில் பெருங் கொந்தளிப்பு, பௌர்ணமி இரவுக்கடலாக ஆர்ப்பரிக்கின்றது. அன்று மாலை தான் இராசலிங்கம் புங்குடு தீவிலிருந்து வந்திருந்தான்.

வீட்டில் சோகத்தின் காரிருள் கவிந்திருப்பதை கவிதாவினது அழுது வீங்கிய முகத்திலிருந்தும் மூலையில் நிலைகுலைந்து அமர்ந்திருந்த மாமியினது நிலையிலிருந்தும் புரிந்து கொண்டான். ஏதோ நடந்துவிட்டது.

''என்ன கவிதா?''

''வாருங்கோ..'' அவனை அறைக்குள் அழைத்துச் சென்றாள். அவள் நடை தளர்ந்து சுடலில் மெதுவான நடுக்கம் இருப்பதை அவன் உணர்ந்தான்.

''என்ன கவிதா நடந்தது? உம்முடை தம்பி எங்க..?''

''அவன் வீட்டைவிட்டுப் போய்விட்டான்.'' என்று கவிதா விம்மலுடன் சொன்னாள்.

இராசலிங்கம் சிலகணங்கள் அப்படியே நிலைகுத்தி நின்றிருந்தான். என்ன நடந்தது? வீட்டைவிட்டுப் போகும் அளவிற்கு என்ன நடந்திருக்கும்?

''வீட்டைவிட்டுப் போயிட்டானா? அல்லது ஆமி பிடிச்சு..''

''முதலில் அப்படித்தான் நாங்க நினைச்சம். அப்படியொன்று மில்லை. தம்பிக்கு இங்கிருக்கப் பிடிக்கவில்லையாம். தன்ர சினேகிதன் வீட்டபோய் இருக்கிறான். அதுவும் ஊரெல்லாம் நாங்க அலைஞ்ச பிறகு தான் தெரியவந்தது. கந்தையா அம்மான் தான் கண்டறிந்து தெரிவித்தார்..''

''ஏன் வீட்டைவிட்டுப் போனான். பதினொரு வருடங்களுக்கு பிறகு வந்தவன். ஏதாவது பிரச்சினையா, கவிதா? நீங்கள் ஏதாவது..''

அவள் காரணத்தை அறியாள். கந்தையா அன்று மாலை வீட்டிற்கு வந்து பக்குவமாக மணிவண்ணன் இருக்குமிடத்தை எடுத்துச் சொன்னார். தாயும் கவிதாவும் நடராஜசுந்தரத்தின் வீட்டிற்கு ஓடிச்சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அவர்களை எதிர்பார்க்கவில்லை. அவர்களை முகம் திரும்பிப்பார்க்கவும் இல்லை. தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தான். அம்மா அவன் அருகில் சென்று அப்படியே தன்னுடன் அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்டாள். ''ராசா.. என்ன மணி.. ஏன்ரா இப்படிச் செய்கிறாய்? நான் என்ன குற்றம் செய்தன்? எங்களைத் தவிக்க விட்டுவிட்டு வந்திட்டியே? உன்ர மனம் நோக நாங்க என்ன செய்தம்?''

''நீங்கள் ஒன்றும் செய்யவில்லை, அம்மா.''

''அப்ப நானா ஏதாவது செய்தனா தம்பி?'' என்று கவிதா வேதனையுடன் கேட்டாள். அவன் சின்னக்காவை வெறுப்புடன் பார்த்தான். அந்தப்பார்வையின் காங்கையைக் கவிதாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வேலியின் பட்ட கதியாலில் இருந்த அணில் ஒன்று அவக் அவக்கென்று கத்தி ஆரவாரமிட்டது. வேலியோரமாகப் பதுங்கிச் சென்ற கறுப்புப் பூனையை அது பார்த்திருக்க வேண்டும்.

அணிலின் குரலில் பயத்தை மேவி, எச்சரிப்புத்தொனி மேலோங்கி நின்றது.

''இல்லை அக்கா..'' என்றான் மெதுவாக: நீ என்ன செய்வாய்? அப்படி நடந்துவிட்டதே?''

''என்ன நடந்ததடா?''

''ஒன்டுமேயில்லை.''

''நீ எதையோ மறைக்கிறாய்?''

''ஒன்டையும் மறைக்கவில்லை. நீங்க வீட்டிற்குப் போங்கோ.. நான் வருவன். நீங்க போங்கோ.. தயவு செய்து போங்கோ..''

நடராஜசுந்தரம் நண்பனைக் கவலையோடு பார்த்தபடி நின்றிருந்தான்.

''தம்பி, தயவு செய்து வந்திடு. நான் ஏதாவது தவறாக நடந்திருந்தால் மன்னித்துவிடடா. உன்ர காலில விழுந்து கேக்கிறன்.'' அவள் அவனை நெருங்கியபோது அவன் வாங்கிலிருந்து விருட்டென எழுந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னை வற்புறுத்தாதையுங்கோ.''

''ஏன்ரா ராசா வரமாட்டன் என்கிறாய்?'' அக்காவின் குரல் உடைந்து ஒலித்தது.

''எனக்குப் பிடிக்கவில்லை. அந்த வீட்டைப்பிடிக்கவில்லை. அங்க இருக்கிற உன்ர மனிசனைப் பிடிக்கவில்லை.'' தன்னையறியாமல் பலமாக அந்த வார்த்தைகள் வெளிவந்து விட்டன. கவிதா துடித்துப் போனாள். அப்படியே சிலகணங்கள் திக்பிரமைபிடித்தபடி நின்றிருந்தாள். வார்த்தைகள் எதுவும் வாயிலிருந்து வெளிவரவில்லை. தொண்டைக்குழிக்குள் ஏதோ பலமாகச் சிக்கிவிட்டது போன்ற பிரமை.

யன்னலிற்கு வெளியே வானத்தில் நிலவு தொங்கிக் கொண்டிருக்கின்றது. அவளருகில் இராசலிங்கம் உறங்கிக் கொண்டிருக்கிறான். அவனிடம் அவள் அதை எப்படிக் சொல்வாள்? 'உங்களை என் தம்பிக்குப்பிடிக்கவில்லை?' இப்பொழுதும் அவள் நினைத்துப் பார்க்கிறாள். மணிவண்ணனுக்கு ஏன் அவரைப்பிடிக்கவில்லை? அவள் எவ்வளவோ வற்புறுத்திக் கேட்டும் அவன் காரணம் சொல்ல மறுத்துவிட்டான். அம்மா அவன் வீட்டிற்கு வராவிட்டால் அங்கேயே தானும் இருந்துவிடுவதாகக் கூறியபோது அவன் திடமாகச்சொன்னான்:

''நீங்க இங்க இருக்கிறதென்டால் நான் எங்காவது கண்காணாதவிடத்திற்கு ஓடிப்போய் விடுவன், அம்மா.''

அம்மா அழுதபடி வீட்டிற்குத் திரும்பி வந்தாள்.

வானத்தில் கருமுகில் திரளொன்று நிலவை மூடி மறைக்கிறது. இருந்தாற் போல நிலவொளி மங்கி இருள் கவிகிறது. இராசலிங்கம் திரும்பி அவள் பக்கம் படுத்துக் கொண்டான். அவனது இடது கரம் அவள் இடையில் விழுந்து கட்டிக்கொண்டது. அவருடன் நெருக்கமாகத் தன்னை இணைத்துக்கொண்டாள்.

''கவிதா.. கவிதா..''

''என்ன?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்குப் பயமாக இருக்கிறது."

அவள் துடித்துப் பதைத்து அவனைப் பார்த்தாள். அவன் பக்கமாக அவளும் திரும்பி அவனை அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

"என்ன, ஏன் அப்படிச் சொல்லிறியள்?"

"எனக்கே தெரியவில்லை. எங்கே உன்னை இழந்து விடுவேனோ என்று பயம் ஏற்பட்டிருக்கிறது. கவிதா, என் உயிர் நீ தான். உன்னை இழந்து நான் உசிரோடு இருக்க மாட்டன். பாலையாக வறண்டிருந்த என் வாழ்வில் நீ தான் நீர் வார்த்தாய். உன்னைச் சந்தித்த பின்னர் தான் வாழ்வின் அர்த்தமே எனக்குப் புரிந்தது. கவிதா, உனக்கு நினைவிருக்கிறதா? ஆஸ்பத்திரியில் நான் தலையில் காயக்கட்டுடன் படுத்திருக்கிறன். நீ தயங்கித் தயங்கி வந்து என் அருகில் நின்றாய்? அந்தக்காட்சி என்றும் என் மனதிலிருந்து விலகாது, குஞ்சு. நான் கட்டையில் போகும் வரை அது என் நினைவைவிட்டு நீங்காது.."

அவள் தன் வலக்கரத்தால் அவன் உதடுகளைப் பொத்துகிறாள்.

"ஏன் இப்படிக் கதைக்கிறியள்? தம்பி அங்க அப்படி.. நீங்க இங்க இப்படி? ஏன் எல்லாரும் என்னை இப்படிச் சித்திரவதை செய்றியள்? நீங்க இல்லாமல் நான் மட்டும் வாழ்ந்துவிட முடியுமா? நான் தான் உங்களை விரும்பிக் கட்டிக்கொண்டன். என்னிதயத்தில் என்றும் வீற்றிருக்கும் தெய்வம் நீங்க தான்."

அவனை அவள் இறுகத் தழுவிக்கொண்டாள். அவ்விடத்தில் ஆழ்ந்த மோனம் நிலவியது. ஒருவரின் அணைப்பு ஒருவருக்கு நிம்மதியைத் தந்தது. அவன் மார்பில் அவள் முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அவன் இருதயம் படக்படக்கென்று ஒலிப்பது கேட்டது. கவிதா, கவிதா என்று சத்தமிடுவதாக அவள் உணர்ந்தாள்.

அவள் கன்னத்தில் அவன் முத்தமிட்டபோது கண்ணீரின் உப்புக்கரிப்பை உணர்ந்தான். அவன் தோளில் அவள் கன்னம் ஒட்ட முகம் புதைத்தபோது அவன் விழிகளிலிருந்து நீர் வழிந்து தன் கன்னத்தை நனைத்ததை உணர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் தம் துயரங்களைப் பரிமாறிக் கொள்வதுபோல இறுகத் தழுவிக் கொண்டனர்.

''கவிதா.. என் உயிரே..''

''ம்..''

அவ்விடத்தில் உயிர்களின் சங்கமம் நிகழ்ந்தது. மன வாழ்க்கைதான் மனிதனின் ஆதி இயற்கையான நிலையோ?

இரவு முழுவதும் அவர்கள் உறங்கவில்லை. அவனை உறக்கம் தழுவியபோது பயங்கரக்கனவுகள் வந்து பயமுறுத்தின. அவனை எவரோ முகம் தெரியாத ஒருவன் துரத்தி வருகிறான். இராசலிங்கம் பயந்து ஓடுகிறான். எதிரில் ஏதோ குறுக்கிடுகிறது. குறுக்கிட்ட பொருள் கரிய நிறத்துடன் பனைமரம் அளவிற்கு உயர்ந்து நிற்கிறது. கரத்தில் பாரிய நீண்ட உலக்கை. அதனை உயர்த்தி அவனை அடிக்க வர, அவன் விழித்துக் கொண்டான். உடல் வியர்வையில் நனைந்திருந்தது.

திரும்பிப் பார்த்தபோது கவிதா நிம்மதியாக அயர்ந்து தூங்குவது தெரிகிறது. மெதுவாக கட்டிலைவிட்டு எழுந்து யன்னல் பக்கம் சென்றான். பார்வை வெளியே படிந்தது. நிலவில் வளவு முழுவதும் குளித்துக்கொண்டிருக்கிறது. அடிவளவின் பலாமரத்தில் ஏதோ சரசரப்பு எழுகிறது. மரநாயாக இருக்கும். அந்த மரத்தின் உச்சிக்கிளையொன்றில் இருக்கும் போறையொன்றினுள் மரநாய் ஒன்று இருந்ததை அவன் கண்டிக்கிறான். கூட்டிற்குள் இல்லாது மரங்களில் இரவில் தங்கிய பல கோழிகள் அதற்கு இரையாகியிருக்கின்றன.

அதுவாகத் தான் இருக்குமோ?

கொட்டிலிற்குள் கட்டப்பட்டிருக்கும் ஆடுகள் நின்றபடி இரை மீட்டுக்கொண்டிருக்கின்றன. நிலவொளியில் நிழலாக அவற்றின் வடிவம் தெரிகிறது. அந்த ஆடுகள் ஏன் இன்னமும் தூங்கவில்லை? அவையும் ஏதாவது குற்றம் செய்துவிட்டனவா? குற்றம் புரிந்துவிட்டு என்றும் அமைதியாக இருந்துவிட முடியாது என்பது அவற்றிற்குத் தெரியவில்லை. அமைதியாக இருப்பதாக எவனும் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ள முடியாது. மனச்சாட்சி ஒரு பெரும் நீதிபதி. ஒவ்வொரு கணமும் அது நெஞ்சில் குத்தி வலியைத் தந்துகொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசலிங்கம் தன் நெஞ்சை இறுகப்பிடித்துக்கொண்டான்.

மனதில் நிழலாகச் சில காட்சிகள் விரிகின்றன. இருந்தாற் போலக்கட்டளை வரும். அவர்கள் மூவர் புறப்படுவர். குறிப்பிட்டவரை விசாரணைக்கு அழைத்து வருவர். விசாரணையின் பின்னர் திரும்பியவர்களுமுள்ளனர். திரும்பாதவர்களுமுள்ளனர். அவன் அவற்றினைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒரு முறை மட்டும் கவலைப்பட்டான்.

இந்திய இராணுவத்தின் கனத்த பாதங்கள் யாழ்ப்பாண மண்ணினை அழுத்திக் கொண்டிருந்த காலவேளையில் அச் சம்பவம் நடந்தது. இருள் கவியாத தெளிவான ஒரு மாலைப்பொழுது. ஒழுங்கையிலிருந்து ஒரு நடுத்தரவயதுக் காரரும் ஒரு எட்டு வயதுச் சிறுவனும் தெருவில் ஏறுகிறார்கள்.

''அவன் தான்..'' என்று சுட்டிக்காட்டுகிறான் பரமன்.

அவர்கள் சயிக்கிலில் வந்து அவர்கள் முன் நின்றபோது அந்த மனிதனின் விழிகளில் பயம் படர்ந்தது. உடல் பதறியது.

''அண்ணை உங்களை விசாரிக்க வேண்டும். ஒருக்கா வாருங்கோ.''

''சயிக்கில ஏறும்..''

''தம்பிமார் பிள்ளையை வீட்டில விட்டிட்டு வாறன்..''

''அதெல்லாம் அவனுக்குப் போகத் தெரியும். ஏறடா சயிக்கிலில..''

அந்தச் சிறுவனின் பயந்த விழிகள்? பூதாகாரமாக இன்று வானமெங்கும் விரிந்து தெரிகிறது.

இராசலிங்கத்தின் உடல் மெதுவாகப் படபடக்கிறது. நினைவில் ஆடு அசை போடுகிறது.

அவனை ஒப்படைப்பதுடன் அவர்களின் பணி முடிந்து விட்டது. மறுநாள் அந்த மனிதனின் துண்டிக்கப்பட்ட தலை குளத்துச் சுமைதாங்கியில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்ட போது ஒருகணம் துடித்துப் போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் இப்படிச் செய்தியள்?''

''அவன் ஒரு சி.ஐ.டி. பொலீஸ். உமக்குத் தெரியுமா? மதவடியில் கைதான லிங்கன் சுடப்பட்டுக்கிடந்தான். இந்த ஊரில இயக்கப்பொடியள் என்டு கைதாகி ஆறுபேர் போகம்பரச்சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டினம். அவர் திரும்பவில்லை. அந்த ஏழு பேரின் மரணத்திற்கு அவன் காரணமாகவுள்ளான்..''

''பொலீஸ்காரன் வேறு என்ன செய்வான்? அவன் தன் கடமையைச் செய்தான்.''

''அவன் தன் கடமையைச் செய்தான். அப்ப நாங்களும் எங்கட கடமையைச் செய்தம். இங்க பார் ராசு, இனவிடுதலைப் போராட்டத்திலே இது தவிர்க்க முடியாதது. போராட்டப் பாதையில் தடைக்கல்லாக அமைவதெல்லாம் தூக்கியெறியப் படவேண்டும். எங்கள் செயற்பாட்டிலும் நியாயம் உள்ளதைப் புரிந்து கொள். காட்டிக்கொடுப்பவர்கள் எவராகயிருந்தாலும் தண்டனை பெற்றே தீர வேண்டும். ஆயிரக்கணக்கான பயணிகளுடன் ஓடிக்கொண்டிருக்கும் புகையிரத்தின் பாதையில் ஒருவன் குறுக்கிடுகிறான். திடிரென பிறேக் பிடித்தால் புகையிரதம் கவிழ்ந்துவிடும். ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகும். புகையிரதத்தை அவன் மீது ஏற்றிவிட்டால் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றிவிடலாம்..''

ஒவ்வொருவர் பக்கத்திலும் நியாயங்கள் இருக்கத்தான் செய்யும்.

இராசலிங்கம் யன்னலின் ஊடாக பார்த்தபடி நிற்கின்றான்.

அவன் மனதில் அமைதியில்லை. பலாமரத்தில் பதற்றம் காணப்படுகிறது. மரநாயியின் பிடியில் அகப்பட்ட ஏதோ ஒரு பறவை சிறகுகளை அடித்துத் துடிப்பது கேட்கின்றது. அவன் உள்ளம் அதற்காக இரக்கப்பட்டது.

யன்னல் அருகில் அவன் பிரமை பிடித்தபடி நிற்க, பின்னால் வந்த கவிதா அவனை மெதுவாகக் கட்டிக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

பனிப் புகார் படர்ந்த தோட்டத்தினூடாக அதிகாலை வேளையில் நடப்பதன் இனிய அனுபவத்தை மணிவண்ணன் உணர்கிறான். அவனால் ஒரு முடிவிற்கும் வந்துவிட முடியவில்லை. பழிவாங்கும் எண்ணம் எல்லாவற்றையும் மீறி உள்ளத்தில் ஆக்கிரமித்திருந்தாலும் சின்னக்காவின் சிரித்த முகமும் இராசலிங்கம் மீது அவள் வைத்திருக்கும் அன்பும் தடுத்தன.

தோட்டத்தில் காய்கறிகள் செழித்து வளர்ந்திருந்தன. ஒரு பக்கத்தில் புடல் பந்தல் காணப்படுகிறது. புடல் பந்தலுள் தொங்கும் வாளிப்பான காய்கள் கண்ணூறுக்குக்கொள்ளக் கூடாதென்பதற்காக வாழையிலைச் சருகுகளை மறைப்பாகத் தொங்கவிட்டிருந்தனர்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை தோட்டவெளி பரந்து கிடந்தது. எல்லைப்புறங்களில் தென்னைகளுடன் கூடிய வீட்டு வளவுகளும் வீடுகளும் தென்படுகின்றன. அவன் வெகு நேரம் அவ்விடத்தில் நின்றிருந்தான். கிழக்கில் கதிர்கள் எழுந்து முகத்தில் உறைக்கத் தொடங்கியதும் தோட்டத்தினின்றும் வெளிப்பட்டுத் தெருவில் ஏறினான்.

அவன் தெருவில் ஏற, வடக்குப்பக்கமிருந்து ராசாத்தி சயிக்கிலில் வருவது தெரிந்தது. அவன் அருகில் வந்து சயிக்கிலை நிறுத்திவிட்டு இறங்கி அவனைப் பார்க்கிறாள். அவளது இன்றைய பார்வையில் சற்று வித்தியாசமிருக்கிறது. மணிவண்ணனுக்கு அது தெரிய நியாயமில்லை.

''நானும் வந்ததிலிருந்து பார்க்கிறன். நீ மணியில வலு கரிசனையாக இருக்கிறாய்?'' என்று அம்மப்பா கேட்டதிலிருந்து அவள் தன்னைச் சிலிர்த்துக் கொண்டாள். அப்படித் தான் அவள் நடந்து கொண்டாளோ? அம்மப்பா நன்றாக அவதானித்து விட்டார். கவலை அவளைச்சூழ்ந்து கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனந்தெரியாத ஒரு அக்கறை அவனில் அவளுக்கு ஏற்பட்டது. அவன் ஒன்றும் அசாதரணமான இளைஞனல்லன். யாழ்ப்பாணத்தின் சராசரி இளைஞன். தான் தன் குடும்பம் என்ற வட்டத்திற்குள் வாழப்பழகிவிட்டவன். அதற்கு வெளியே அவனால் வர முடியவில்லை. வர வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

''என்ன, இந்த வெள்ளன எங்க போறியள்?''

''இன்டைக்கு பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை எங்கட கிராமத்தில் போசாக்கு நிலை பற்றி ஒரு ஆய்வு செய்யுதாம். அதற்கு உதவிக்கு வரும்படி சனசமூகநிலையக் காரர் கேட்டிருக்கினம். அது தான் போறன். நீங்களும் வாருங்களன். வித்தியாசமான அனுபவமாக இருக்கும். எங்கட கிராமத்தில் எத்தனை விதமான மக்கள் வாழவும் முடியாமல் சாகவும் முடியாமல் கஷ்டப்படுகினம் என்பதைக் காணலாம்.''

''ஆய்விற்கு முதலே முடிவெடுத்திட்டியள்.''

''இதற்கு ஆய்வா தேவை? எத்தனை வீடுகளில ஒருவேளை தான் அடுப்பு மூட்டப்படுகிறது என்பது எனக்குத் தெரியும். பாடசாலைக்குச் செல்லாமல் எத்தனை சிறார்கள் வீணே அலைகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். கூரை மேய்வதற்கு வழியின்றி சன்னமாகிவிட்ட ஈக்கில் கூரைக்குள் முடங்கிக் கிடக்கின்ற பலரை இந்தக்கிராமத்தில் நான் அறியன். மணி, நீங்கள் நினைப்பது போல எங்க ஊரில மக்கள் இல்லை. வசதியான ஒருசிலரை வைத்துக்கொண்டு ஒட்டு மொத்தமாக முடிவு செய்துவிட முடியாது. ஆமான சாப்பாடின்றி நடக்கத் திராணியற்ற வயோதிகர்களையும், போசாக்கின்மையால் வளர்ச்சி குன்றிப்போய் இருக்கும் சிறார்களையம் என்னுடன் வாருங்கள் நான் காட்டுகிறன். வறுமைதான் மனிதனுக்குள்ள ஜீவனையும் பண்புகளையும் தின்று விடுகின்றது. இன்று களவுகள் அதிகரித்திருக்கின்றமைக்கு அது தான் காரணம்..''

ராசாத்தியை அவன் வைத்த கண் வாங்காமல் பார்த்தபடி நின்றிருக்கிறான். இந்தப் பெண்ணிற்குப் பல விசயங்கள் தெரிந்திருக்கின்றன. வார்த்தைகளில் ஒரு ஆவேசமும் பாதிக்கப்பட்ட அம்மக்களின் நிலைக்குக் காரணமானவர்களின் மீது ஒருவித வெறுப்பும் பாதிக்கப்பட்ட அம்மக்களுக்கு ஏதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவிடவேண்டுமென்ற உணர்வும் தொனித்ததைக் கண்டான்.

அவன் விழிகளை அகலத்திறந்து தன்னை வியப்புடன் பார்ப்பதைக் கண்டு அவள் சிரிப்பினை உதடுகளில் தவழவிடுகிறாள்.

''வாறியளா?..''

''கட்டாயம் வாறன்..''

அவள் சயிக்கிலை உருட்டிக் கொண்டு தெருவில் நடக்க அவள் அருகில் அவன் நடக்கிறான். காற்றில் அவள் கூந்தல் அள்ளுப்பட்டு நடனமிட்டது. முகத்தில் சரிந்த மயிர்களைத் தள்ளிப் பின்னால் ஒதுக்கியபடி அவள் நடக்கிறாள்.

''உங்கட பிரச்சினை என்ன? ஏன் வீட்டிற்குப் போக மாட்டன் என்கிறியள்?''

அவன் தன் நடையைச் சட்டெனநிறுத்திக் கொள்கிறான்.

''எனக்கு அங்கு செல்லபிடிக்கவில்லை. தயது செய்து காரணம் கேட்காதீர்கள்.''

''எல்லாரும் ஏதோ பெரிய இரகசியத்தை மறைக்கிறியள். வெளியில வரலாமா போகுது. உங்களுக்குக் கவிதா அக்காவின் கணவரைப்பிடிக்கவில்லையென்று கதைக்கினம். எல்லாம் முடிந்தபின்னா் பிடிப்பது பிடிக்காதது பார்க்க முடியுமா? இதில எது முக்கியமென்டால் கவிதா அக்காவிற்கு அவரைப் பிடித் திருக்கிறது. அவருக்கு அவளைப்பிடித்திருக்குது. அவ்வளவு தான். வாழப் போவது அவர்கள் தான். வாழ்வின் துன்ப துயரங்களை அனுபவிக்கப் போவதும் அவர்கள் தான். பிறகேன் கவலைப்படுகிறியள்..''

அவன் கோபத்துடன் ராசாத்தியைப் பார்த்தான். ஏதோ சொல்லிவிட வேண்டுமென்ற எண்ணம் வந்தபோது, எதிரில் சயிக்கிலில் வந்த ஒரு இளம் பெண், ''செல்வி, உம்முடன் முக்கியமா நான் கொஞ்சம் கதைக்க வேணும்'' என்றபடி இறங்கிக் கொள்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிறகு கதைப்பமே? நான் வந்து உம்மைச் சந்திக்கிறன்..'' என்றாள் ராசாத்தி அவசரமாக. இறங்கிய பெண் தலையை ஆட்டிவிட்டு மீண்டும் சயிக்கிலில் ஏறிக் கொண்டாள்.

''செல்வியா? உமக்குப் பெயர் செல்வியா?..''

''அப்படியும் ஒரு பெயர் எனக்கிருக்குது. வீட்டில ராசாத்தி என்று கூப்பிடுவினம்.''

அவள் கண்கள் எங்கோ ஆழ நிலைத்தன. முகத்தில் இருந்தாற்போல நிலவிய மகிழ்ச்சி அழிந்து துயரத்தின் கருமை படந்தது. முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். சிரிக்க முயன்றாள். அவன் அவளில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானிக்கவில்லை.

அவர்கள் சனசமூகநிலையத்திற்கு வந்தபோது பலர் அங்கு குழுமி நின்றிருந்தனர். அவர்களின் ஆய்வுப்பணி என்ன என்பது விளங்கப்படுத்தப்பட்டது. படிவங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அக்கிராமத்தின் பகுதிகள் வகுக்கப்பட்டு விளக்கப்பட்டன. படிவங்களில் உள்ள தகவல்களைக் கூடியவரை சரியாக நிரப்பிக் கொண்டு வரவேண்டும்.

ராசாத்திக்கும் மணிவண்ணனுக்கும் அம்மன்கோயில் பகுதியில் முப்பது குடும்பங்கள் தெரிந்து தரப்பட்டன.

அவர்கள் புறப்பட்டனர். ஒழுங்கையில் ஒரு வீட்டின் படலையைத் திறக்கும்போது ராசாத்தி கூறுகிறாள்: ''இந்த வீட்டாரை எனக்குத் தெரியும். 1975இல் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா, பொன்னாலைக் கிருஸ்ணன் கோயில் வீதியில் சுட்டுக்கொல்லப்பட்டதும் பொலீசார் வகை தொகை தெரியாமல் இளைஞர்களைக் கைது செய்தார்கள். இந்த வீட்டின் குடும்பத்தலைவன் லிங்கமும் அவ்வாறு கைது செய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டவர் தான். தகப்பனற்ற குடும்பம். லிங்கன் தான் ஐந்து சகோதரங்களில் மூத்தவன். காதலித்து ஒரு பெண்ணைக் கலியாணமும் கட்டிக்கொண்டான். கலியாணம் முடிந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் பொலீசார் அவனைக் கைது செய்து கூட்டிச்சென்றனர். அவன் மீண்டும் திரும்பியே வரவில்லை. என்னவானான் என்றே தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இக்குடும்பம் இன்னமும் துயரத்திலிருந்து மீளவில்லை. திக்கிற்கொருவராகப் பிரிந்தும் விட்டார்கள். அக்காலவேளையில் 'குற்றவாளிகள் உருவாக்கப்பட்டார்கள்.. மணி.''

ஒவ்வொரு கணமும் ராசாத்தியை எண்ண அவனுக்கு வியப்பு அதிகரித்தது.

அவர்கள் படலையைத்திறந்து கொண்டு வள்விற்குள் காலடி எடுத்து வைத்தனர். முற்றத்தில் படித்திருந்த நாய் எழுந்திருந்து அவக் அவக் கென்று குரைத்தது. வீட்டிற் குள்ளிருந்து வயோதிப்பெண் ஒருத்தி வெளியில் வந்தாள். தளர்ந்து கூனியிருந்தாள். முகத்தில் காலத்தின் கொடியகரங்கள் பதிந்திருந்தன. அந்த வீடு அப்படியொன்றும் வசதியானதாகத் தெரியவில்லை. அவர்கள் அவள் முன்பு படிவங்களுடன் வந்தபோது, ''என்ன நிவாரணப்படிவங்களா?'' என்று கேட்கிறாள். யாழ்ப்பாணத்தில் படிவங்கள் நிவாரணங்களுக் குரியன என்றே எல்லாரும் நம்புகிறார்கள். கையேந்தி வாழும் நிலை வந்துவிட்டது.

ராசாத்தி எதுவும் கூறவில்லை.

''அப்படி இருங்கோ..'' என்று திண்ணைக் குந்தினைக் காட்டினாள்.

''லிங்கம் அண்ணையின் மனைவி இல்லையா?''

''உள்ளுக்கு இருக்கிறா? அவளைத் தெரியுமா, பிள்ளை.''

''தெரியும்.. அவளின்ர மகன் இப்ப எங்க?..''

அவள் முகத்தில் வன்மம் படிந்தது. முகத்தைக் கஷ்டப் பட்டுத் திருப்பிக் கொண்டாள்.

''அவன் இயக்கத்திற்கு எப்பவோ போய்விட்டான். அவன் இருக்கிறானோ இல்லையோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்..''

''ஏன் போனவன்?..'' மணிவண்ணன் நேரமறியாத ஒரு வினாவைக்கேட்டு வைக்கிறான். அந்த வயோதிப் பெண்ணின் முகத்தில் திடீரென ஏற்பட்ட மாற்றத்தை ராசாத்தி கண்டாள். மணிவண்ணன் ஊர் உலகம் அறியாதவன். கனடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொரு வருடங்கள் வாழ்ந்துவிட்டு யாழ்ப்பாண மண்ணிற்கு வந்து திரும்பி வந்திருக்கிறான். அதுவும் கனடாப்பிரசையாக ஊர்காண வந்திருக்கிறான். இந்தப்பதினொரு வருடங்களில் இந்த மண்ணில் நிகழ்ந்து முடிந்துவிட்ட அவலங்கள் அவனுக்குத் தெரிந்திருக்காது. குருதியினால் இந்த அன்னை தேசம் குளிப்பாட்டப்படுவதை அவன் உணரவில்லை.

''ஏன் போனான்?'' அந்த வயோதிப் பெண் ஒருதடவை தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறாள்: ''அவன் அப்பனை அநியாயமாகப் பிடித்துச்சென்று அழித்தவர்களைப் பழி வாங்க.. அவனைப் போல எத்தனை பேர்கள்?''

மணிவண்ணன் உறைந்துபோய் இருக்கிறான். எவ்வளவு ஒற்றுமை? அவன் மனதில் இப்பொழுது குமுறுகின்ற உணர்வும் அதுதான்.

மனிதர்களுக்கு என்ன பிடித்துவிட்டது?

ராசாத்தி அவனைப்பார்த்து எதுவும் பேசாதிருக்கும்படி சைகை செய்தாள்.

வீட்டிற்குள்ளிருந்து நடுத்தர வயதுடைய ஒரு பெண் வெளியில் வந்தாள். அவள் தான் லிங்கத்தின் மனைவியாக இருக்க வேண்டும். வெளியில் தாயார் பலமாகக் கூறியவை அவள் காதுகளில் விழுந்திருந்தன. கனவாக மறைந்து கொண்டிருக்கும் விடயத்தை சாம்பலை ஊதித் தலைக் கிளப்பியதுபோல எவரோ கிளறிவிட்டனர். அந்தப் பெண்ணின் இழப்புக்கள் அவள் உருவத்தில் தெரிந்தன. அவள் வயதில் இன்னமும் இளமை குலையாதிருப்பவர்கள் பலர் உள்ளனர். அந்தப் பெண் இளமையிலேயே விதவையாகிவிட்டாள்.

மணிவண்ணனுக்கு அவ்விடத்தில் லிங்கனின் மனைவி நிற்பதாகத் தெரியவில்லை. சின்னக்கா கவிதா நிற்பது போன்ற ஒரு பிரமை திடீரென ஏற்பட்டது. ஏன் ஏற்பட்டதென்பது அவனுக்குப் புரியவில்லை.

யாழ்ப்பாணச் சமூகத்தின் ஆணிவேரே கணவன் தானோ? உழைக்கும் சக்தி அவனிடம் தங்கியிருப்பதால் உழைப்பாளியின் இழப்போடு அனைத்து வாழ்வின் அர்த்தங்களும் முற்றுப் புள்ளியாகிவிடுகின்றனவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனின் அம்மா பண ரீதியாகப் பாதிக்கப்படவில்லை. அப்பாவின் மரணத்தின் பின்னரும் அவளுக்கு அப்பாவின் முழுச்சம்பளம் இன்னமும் கிடைத்துக் கொண்டு தான் இருக்கின்றது. சட்டத்தல் அப்படியொரு பாதுகாப்பு அவளுக்கிருக்கிறது. இந்தப் பெண்ணிற்கு?

''அவர் எதுவிதமான குற்றமும் செய்யாதவர். அவர் அந்தக் கொலையில் சம்ந்தப்பட்டிருந்தால் அவரைப்பிடித்துச் சென்றதையும் அவர் காணாமற் போனதையும் கூட நான் மன்னிச்சிருப்பேன். அப்படியில்லை. அவர் ஒரு சோலி சுரட்டிற்கும் போகாதவர். தனிப்பட்ட விரோதத்திற்காக ஒருவன் அநியாயமாக அவரைக் காட்டிக் கொடுத்துவிட்டான்.''

அவள் அமைதியாகச் சற்றுநேரம் இருக்கிறாள். விழிகள் நீரைப்போல பொலவெனச் சொரிகின்றன. சேலைத் தலைப்பால் விழிகளையும் மூக்கையும் துடைத்துக் கொண்டாள்.

''அந்த சிஐடி பொலீஸ்காரன் அவரை மட்டுமல்ல இந்த ஊரிலுள்ள பலரைக் காட்டிக்கொடுத்துக் கைதுசெய்வித்தான். அவன் இந்த ஊர்க்காரன். எல்லாரையும் அவனுக்குத் தெரிந்திருந்தது. சம்பந்தப்பட்டவர்களிலும் சம்பந்தப் படாதவர்கள் கனபேர்.''

மணிவண்ணன் இருப்புக்கொள்ளாமல் தவிக்கிறான்.

''அந்தப் பாவியைத் தலையை வெட்டிச் சுமைதாங்கியில் வைத்தினம். முண்டத்தைத் தெருக்கானில் எறிந்தினம். அதற்குப்பின்னர் தான் எங்க மனம் ஆறியது..''

திண்ணைக்குந்தைவிட்டு அவன் துடித்துப் பதைத்து எழுந்திருக்கிறான்.

உடல் பதறுகிறது. தலையை அழுத்திப்பிடித்தபடி மீண்டும் திண்ணைக் குந்தில் பட்டென அமர்ந்துகொள்கிறான். அவன் அப்படியான ஒரு பொறுத்துக் கொள்ள முடியாத உணர்ச்சியை என்றும் அனுபவித்தவனல்லன். தலை விண்விண்னென்று கனத்தது. இரத்த நரம்புகள் அப்படியே வெடித்துவிடும்போன்ற ஒரு அவஸ்தை ஏற்பட்டது. இருகரங்களாலும் தலையைத் தாங்கிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசாத்திக்கு அவன் நிலை புரிந்தது.

பரிதாபமாக அவனைப் பார்த்தபடி, ''என்ன மணி, என்னசெய்யுது?'' என்றாள்.

ஒன்டுமில்லை, ராசாத்தி. எனக்கு மனமும் உடலும் சரியாகவில்லை. நான் போகப் போகிறன்.''

''தனியப் போவியளா?''

அவன் பரிதாபமாகத் தலையை ஆட்டிவிட்டுப் படலையை நோக்கி நகர்ந்தான். முற்றத்து நாய் மீண்டும் குரைத்தது. அவன் அதனைக் கவனிக்கும் நிலையில் இல்லை.

அப்பா என்ற பாச உருவத்திற்குப் பின்னால் இன்னொரு விலங்கு மனிதன் இருந்திருக்கிறானே?

## 13

**யா**ழ்ப்பாணத்தின் அந்தக்காலத்து ஒஸ்ரின் காரிலிருந்து, அண்மையில் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து தருவித்த யப்பானியக் கார்கள் வரை அந்தக் கராச்சில் நிறுத்தப் பட்டிருக்கின்றன. பத்துப்பேர் வரையில் அந்தக்கராச்சில் வேலை செய்து கொண்டிருந்தனர். இராசலிங்கம் பட்டறைமுன் அமர்ந்திருந்து காபறேற்றர் ஒன்றினை அக்கு வேறு ஆணி வேறாகக் கழற்றிக் கழுவிக் கொண்டிருந்தான்.

''அண்ணை செய்திட்டன்..'' என்று ஒரு இளைஞன் குரல் தருகிறான். இராசலிங்கம் எழுந்து சென்று அந்த இளைஞன் திருத்திய காரினை மேலோட்டமாகப் பார்க்கிறான். காரின் உரிமையாளர் அதன் அருகில் நிற்கிறார்.

''சரி.. ஸ்ராட் பண்ணுங்கோ..'' என்கிறான் இராசலிங்கம். அவர் காரில் ஏறி காரை இயக்குகிறார். சற்றுநேரம் இயக்கிய பின்னர், ''போதும்..'' என்று கூறிவிட்டு, ''புளொக்குகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருக்காக் கழற்றி கிளீன் பண்ணிப்போடு; சைலென்சர் பைப்பில எங்கோ லீக் இருக்குது. பார்..''

உரிமையாளர் முகத்தில் திருப்தி படர்கிறது. இராசலிங்கம் அந்தக் கராச்சின் உரிமையாளன். சிறிதாக ஆரம்பித்த கராச் இன்று பெரியதா வளர்ந்துவிட்டது. பத்துக் குடும்பங்கள் அந்தக் கராச்சினால் சீவிக்கின்றன.

''கெட்டிக்காரர்.. சத்தத்தைக்கொண்டு பிழை எங்க இருக்குது என்டு ஒரு கணத்தில கண்டுபிடிச்சிட்டார்..'' என்கிறார் கார் உரிமையாளர்.

''அந்தாள் பிப்ரி கலிவர் இயக்கிய மனிசர்..'' என்ற கார் திருத்திய இளைஞன் டக்கெனத் தன் உதடுகளைக் கடித்துக் கொண்டான். சொல்லக்கூடாத வார்த்தைகளைக் கூறி விட்டதுபோல முகபாவம் மாறியது. அவன் கூறியவற்றினை அவர் அவதானிக்கவில்லை.

இராசலிங்கத்தின் கரங்கள் காபறேற்றரைத் திருத்தும் பணியிலீடுபட்டிருந்தாலும் அவன் மனம் எங்கோ தெறி கெட்டலைகிறது. மணிவண்ணனின் வெளியேற்றம் அவனை நன்கு பாதித்துவிட்டது. அவன் தன்னை அடையாளம் கண்டு கொண்டான். பதினொரு வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்துவிட்ட அந்தத் துயரத்தின் பாதிப்பு அவன் மனதில் ஆழமான வடுவாக எஞ்சிவிட்டது. இன்னமும் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளவில்லை. புகைப்பட ஆல்பத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தவன் அதனை வீசிவிட்டு எழுந்து சென்றிருக்கிறான்.

இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கும்போது எப்படி யிருக்கும்?

கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு அவன் பாய்வான். எதிர்த்தாக்குதல் நிச்சயம் இருக்காது. 'நான் அப்படிச்செய்யமாட்டேன். அவன் தன் ஆத்திரம் தீரும் வரை எது வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். சாக்காட்டினாலும் பரவாயில்லை.' மனிதனின் மனதில் உறங்கிக் கிடக்கின்ற விலங்கு விழித்துக் கொண்டால் அதைத் தடுப்படுத்துவது மிகக் கடினம். பழிவாங்கும் எண்ணம் மிகப்பயங்கரமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சுபாபத்தின் இயற்கை இயல்பினை முற்றாக மாற்றிவிடும்.

''பாவி.. படு பாவி. உன்னை அழிக்காமல் விடமாட்டன்.''

''நான் உன் அக்காவின் புரிசன்.''

''ஆனா என் அப்பாவைக் கொல்வதற்குக் காரண மாயிருந்தவன்.''

''அதை நான் செய்யவில்லை. அப்படி நடக்குமென்டு எனக்குத் தெரியாது. நான் என் கடமையைச் செய்தன்.''

''கொலைக்குக் கூட்டிச்செல்வது கடமையா?''

''விடுதலைப் போராட்டத்தில அது தவிர்க்க முடியாதது.''

அவன் இவற்றினைக் கேட்கவா போகிறான்? அவனைப் பொறுத்தமட்டில் தந்தையின் இழப்பு அவனுக்குப் பெரிதாகப் பட்டிருக்கும். பிறந்த மணண்ணில் மகிழ்ச்சியாக வாழ விடாது கணகாணாத தேசத்திற்கு ஓடிச்செல்ல இந்தச் சம்பவம் தான் காரணமாக இருந்துள்ளது. அவன் இங்கிருந்திருப்பான். இந்தத் தேசத்தின் துன்ப துயரங்களையும் அவற்றினை மேவிய சந்தோச அனுபவங்களையும் அவன் அனுபவித்திருப்பான்.

இராசலிங்கத்தின் தலை கனக்கிறது. காபறேற்றரை முழுமையாகப் பூட்டிவிட்டு நிமிர்ந்தபோது குருபாதம் மோட்டார் சயிக்கிலில் வந்து இறங்குகிறான். அவன் முகம் கறுத்து வாடிப்போய் இருக்கின்றது. திருமணத்திற்கு இன்னமும் இரண்டு நாட்கள் தான் இருக்கின்றன. அதற்குள் ஏன் இப்படியொரு வாட்டம்?

மோட்டார் சயிக்கிலை நிறுத்திவிட்டு அவன் இராசலிங்கத் திடம் வந்தான். சற்றுத் தள்ளிக்கிடந்த ஸ்டூலை எடுத்துத் தூசியைத்தட்டிவிட்டு அமா்ந்து கொள்கிறான்.

''என்ன, குரு, கலியாணத்திற்கு ரெண்டு நாள்தான் இருக்குது.''

''கலியாணம் நடக்காது, மச்சான்.'' என்றான் துயரத்துடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசலிங்கம் திகைத்துப்போய் அவனை ஏறிட்டான். கனடாவிலிருந்து கலியாணத்திற்காக ஓடி வந்தவன். இப்படிச் சொல்கிறானே?

''ஏன்ரா?..''

குருபாதத்தின் முகத்தில் காரிருளாகக் கவலை படர்ந்து பற்றிக்கொள்கிறது. எதுவும் பேசாது பார்வையை மேய விடுகிறான். தூரத்தில் கார் ஒன்றிற்கு ரிங்கரிங் செய்தபடி இருக்கும் ஒருவரின் பார்வை படிகின்றது. அர்த்தமற்ற நோக்கு. இராசலிங்கத்தின் முகத்தினை ஏறிட்டுப்பார்க்கும் நிலைமையை மறைப்பதற்கான முயற்சி.

''நான் இங்கு வந்திருக்கக்கூடாது, ராசு.''

''என்ன நடந்தது என்று சொல்லடா.''

''இனி என்ன நடக்க வேணும்? எனக்குப் பேசி முற்றாக்கியிருந்த பெண்ணிற்கு ஏற்கனவே இங்கு ஒருவனிடம் காதல் இருந்திருக்கிறது. அது எங்களுக்குத் தெரியாது. மறைத்து வெளிநாட்டு மாப்பிள்ளைக்குப் பேசியிருக்கினம். கலியாணத் திற்கு இரண்டு நாட்களேயிருக்க துளசி ஓடிவிட்டாள். ஏன் இவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள்? ஆசைகள் அனைத்திலும் காதல் தான் வலிமையானதென்பது எனக்குத் தெரியும். அதனை வாழ்த்துகிறேன். ஆனால் இவ்வளவு தூரம் நடக்கும் வரை அப்பெண் தன் முடிவைத் தெரிவிக்காமல் இருந்திருக்கக் கூடாது. பெரும் அவமானமாகப் போய்விட்டது. இது எங்களுக்கு நல்லாக வேணும். என் அம்மா பெரும் சீதனத்திற்கு ஆசைப்பட்டதற்கு இது நல்லாக வேணுந்தான். மாமாவின் மகள் இருக்கத் தக்கதாக, அவர்களிடம் எதுவுமில்லையென்பதற்காக உறவைத்தள்ளிவிட்டு வெளியில் பெண் பார்த்த எங்களுக்கு இது வேணும் தான், ராசு. இப்ப அம்மா அழுகிறா. மானம் போய்விட்டதென..''

இராசலிங்கம் அவனை உற்றுப் பார்த்தான்.

''அம்மா கிடக்கட்டும். நீ என்ன சொல்கிறாய்? நீ எப்படி இந்த விடயத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறாய்?''

அவன் பெருமூச்சொன்றை விடுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''துளசியை நான் நேரில் பார்த்ததேயில்லை. அவள் புகைப்படத்தைத் தான் பார்த்தேன். பிடித்துக் கொண்டது. ஒரு பார்வையிலேயே அவள் உருவம் எனக்குப்பிடித்துக் கொண்டது. ஒப்புக்கொண்டேன். பேசி முற்றாக்கினார்கள். மனதில் கனவுகளைக் கட்டிக் கொண்டேன். கற்பனைகளை வளர்த்துக் கொண்டேன். மானசீகமாக அவளுடன் வாழ்ந்து வந்தேன். அந்த நினைவுகளை இலகுவில் தூக்கியெறிய முடியவில்லை. ஏமாற்றமாகத் தான் இருக்கின்றது. துளசி அழகான பெண்..''

''காதலிக்கப்படாத அழகான பெண்கள் மிகக் குறைவு, குரு.''

இருவரும் சில பொழுதுகள் மௌனமாகவிருந்தனர். ஒரு பையன் இரண்டு தம்ளர்களில் தேநீர் ஏந்தி வந்தான். இருவரிடமும் பணிவாக நீட்டினான்.

''தேத்தண்ணியைக் குடி குரு..''

தம்ளரை உதடுகளில் ஒரு தடவை பதித்து உறிஞ்சிக்கொண்டான். தேநீரில் சற்றுக் கசப்பு இருந்திருக்க வேண்டும். முகத்தில் அது தெரிந்தது.

''இவங்களுக்குத் தேநீர் போடத்தெரியாது. கவிதா அற்புதமாகப் போடுவாள், குரு.''

''யார் உன் மனிசியா?''

''ஓமேம்.. உனக்கு நான் ஒன்று சொல்லட்டும்?''

''என்ன?..''

''உன்ர அம்மான் மகளைக் கலியாணம் செய்து கொள்ளன்.''

''அம்மாவும் அதைத் தான் இப்ப சொல்கிறா. ஆரம்பத்தில் நான் எனக்குக் கலியாணம் பேச ஆரம்பித்தபோது எழுதியிருந்தன். கேக்கவில்லை. எங்கள் பக்கத்தில் வசதிகளும் வாய்ப்புகளும் அதிகரித்ததும் பழைய வாழ்க்கையை நாம் மறந்துவிடுகிறம். அம்மானுக்கு எங்களில கோபம். இதற்கு ஒப்புக்கொள்ளமாட்டார் இனி என அம்மா நினைக்கிறா. மச்சாருக்கு இதில விருப்பமிருக்கென்டு தெரியுது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறகென்ன..?"

"என்னால் முடியவில்லை. உலகத்தில் எதையும் மாற்றலாம் ராசு. காதலைத்தவிர.. நான் கனடாவிற்குப் போகப்போறன். யாழ்ப் பாணத்துப் பெண்களைப் பற்றி அங்கு கேள்விப்பட்டவற்றினை இலகுவில் நானம்பவில்லை."

"என்ன கேள்விப்பட்டாய்?"

"கனடாவிலுள்ள மாப்பிள்ளைக்காகக் கனடாவிற்கு அனுப்புவதற்கு அழைத்துவரப்பட்ட மணப்பெண்களில் ஓரிருவர் கொழும்பிலேயே சோடி மாற்றிக்கொண்டார்கள். சிலர் கனடா மண்ணில் கால்பதித்ததும் அழைத்துவந்தவனுடன் கம்பி நீட்டிவிட்டார்கள். நான் யாழ்ப்பாணத்திற்கு வந்து ஏமாந்து நிற்கிறேன்.."

இராசலிங்கம் ஆத்திரத்துடன் குருபாதத்தைப் பார்க்கிறான்.

"ஒட்டுமொத்தமாக அவ்வாறு எங்கள் பெண்களைக் கணித்துவிடாதை. சில சம்பவங்கள் அப்படி நடந்து தான் இருக்கின்றன. முகந்தெரியாத ஒருவனுக்காக அழைத்து வரும்போது முகந்தெரிந்த ஒருவனுடன் பழக நேர்வதால் மனம் மாறியிருக்கும். இயற்கை. இதென்ன மடத்தனம்.. நம்பி ஒரு ஆண்மகனோட தம் பெண்ணை அனுப்பி வைப்பது? அழைத்துச் செல்லும் ஏஜண்டுகள் என்ன தெய்வங்களா? ஒட்டு மொத்தமாக ஆண்கள்.. நிச்சயமாக தங்கள் கை வரிசையைக் காட்டத்தான் செய்வாங்கள்."

"அவற்றை விடு.." என்றான் குருபாதம் அருவருப்புடன்.

"எதுக்கும் உன் அம்மா இப்பொழுது எடுத்த முடிவின்படி நடந்து கொள். அது தான் உனக்குச் சரி."

"குறிக்கப்பட்ட நாளில் என்ர கலியாணம் நடக்க வேணும் என்று அம்மா பிடிவாதமாக நிக்கிறா. மாமனின் கால்களில் விழுந்தாவது சம்மதிக்க வைக்கிறதென அங்கு போயிருக்கிறா. நான் எழுந்து வந்துவிட்டன். என்னாவது செய்து கொள்ளட்டும். ஒரு பெண்ணில்லாமல் கனடாவிற்குச் செல்வது வெட்கக்கேடு. எல்லாரும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருபாதம் சற்று தெளிவடைந்திருப்பது போலப்பட்டது.

''இன்றைக்கு மத்தியானம் என்னுடன் சாப்பிடவா. குரு.''

''வேண்டாம். விருந்து சாப்பிடும் நிலையில் நான் இல்லை. அது சரி, ராசு, இந்தக் கராச்சினால் உனக்கு நல்ல வருமானம் வருமா?''

இராசலிங்கம் சிரிக்கிறான்.

''நேரம் தான் பணம் என்பதை மனதில் வைத்துக்கொண்டு செயற்பட்டால் எங்கும் வெற்றி பெறலாம். ஓர் அறிஞன் சொன்னான், நேற்று என்பதும் நாளை என்பதும் உனக்குச் சொந்தமில்லை. இன்று தான் சொந்தம்.செயற்படு என. அந்த வாக்கினை நான் மதிக்கிறேன். இந்தக் கராச்சின் வருமானத்தில் ரெண்டு தங்கச்சிமாரைக் கரைசேர்ந்திருக்கிறேன். இன்னொரு தங்கச்சி இருக்கிறாள். அவளுக்கும் கலியாணம் செய்து வைத்துவிட்டால் நான் சுதந்திரப்பறவை.'' என்றவன் குருபாதத்தை ஆழமாக அர்த்தத்துடன் ஏறிட்டுப்பார்த்தான்.

''என்னடா?''

''இல்லைக் குரு..''

''ஏதோ சொல்ல விரும்புகிறாய், கூறு..''

''உன் மாமாவின் முடிவு பாதகமாகவிருந்தால் நான் என் விருப்பத்தைக் கூறுவன்.''

குருபாதம் ஒன்றும் அறியாத சிறுவனல்லன். அவன் என்ன சொல்ல விரும்புகிறான் என்பதைப் புரிந்து கொண்டான். கவலையுடன் புன்னகைத்தான்.

''எனக்கு விதியில் எப்பவும் நம்பிக்கையிருந்தது கிடையாது. இப்பொழுது அதன் மீது நம்பிக்கை வருகிறது. விதி எப்படியோ அப்படியே நடக்கும், ராசு. சிலவேளை என்னிலும் பார்க்க நல்ல மாப்பிள்ளை உன் தங்கச்சிக்குக் கிடைக்கலாம்.''

அவர்கள் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். மத்தியானத்திற்குப் பிறகு இராசலிங்கம் விடைபெற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான். இராசலிங்கம் வீட்டிற்குச் சென்று மதிய உணவு அருந்திவிட்டு மீண்டும் கராச்சிற்கு வந்து திருத்தப்பணிகளை மேற்கொண்டான்.

மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. குருபாதம் நல்ல நண்பன். நல்ல ஒழுக்கமானவன் என்பதில் ஐயமில்லை. கல்வி கற்கின்ற காலத்திலிருந்தே ஒன்றாகப் பழகி வருபவன்.

இராசலிங்கம் மாதிரி அவனின் தங்கைளில்லை. எல்லாரும் அப்பா மாதிரி, நல்ல சிகப்பிகள். இலட்சணமானவர்கள். குருபாதத்திற்கு அவர்களைத் தெரியும். இப்பொழுது கலியாணத்திற்கு காத்திருக்கின்ற தங்கச்சியையும் இரண்டு நாட்களுக்கு முன்னர் வீட்டில் கண்டிருக்கிறான். 'கையில் நெய்யை வைத்துக்கொண்டு அலைந்திருக்கிறேன்.'

அன்று மாலை கராச்சினைப் பூட்டுவதற்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்த போது, ஒரு டிறக்கும் பிக் அப்பொன்றும் வாசலில் வந்து நின்றன. அவற்றில் அமர்ந்திருந்த இராணுவ வீரர்கள் பதட்டமின்றிக் கீழே குதித்தனர். அந்த வீதியில் வழக்கமாக இப்படி நடப்பது சகயம். எவரும் அதிகம் அந்த நிகழ்ச்சியைக் கண்டு பதட்டமடையவில்லை.

மூன்று இராணுவ வீரர்கள் கராச்சிற்குள் வந்தனர்.

''இராசலிங்கம் யாரு?''

''நான் தான்..'' என்று அவன் கலக்கத்துடன் எழுந்து வந்தான்.

''ஒரு விசாரணை இருக்குது..''

அவர்கள் இராசலிங்கத்தின் கரத்தைப்பற்றி அழைத்துச் சென்றனர். அவன் உடல் பதறத் தொடங்கியது. அவனை டிறக்கில் ஏற்றும் போது ஒரு வீரன் இராசலிங்கத்தின் பிடரியில் ஓங்கி அறைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

**வெ**யில் உச்சிக்கு ஏறிக்கொண்டிருந்தது. மணிவண்ணன் மெதுவாக நடந்தான். மண் ஒழுங்கையில் நடந்து திரும்பியபோது எதிரில் வைரவர் கோயில் தெரிந்தது. தெருவோரத்து வயிரவர் அல்லர். அக்கிராமத்திலுள்ள ஏனைய ஆலயங்களுக்கு நிகரான கோயில். வருடாவருடம் திருவிழாக்கள் நடக்கின்ற கோயில். அவன் சிறுவயதில் திருவிழாக்களில் கலந்துகொண்ட நினைவு வருகின்றது.

கோயில் மண்டபம் எவருமில்லாமல் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. கோயில் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. கோயில் மண்டபத்திற்கு முன் வளர்ந்திருந்த புளியமரங்கள் அந்த வெயிலில் அளப்பற்ற நிழலைத் தந்து கொண்டிருந்தன. அவன் கோயில் மண்டபத்தில் அமர்ந்து கொண்டான்.

அவன் இதயம் உடைந்துவிட்டது. இந்த உலகத்தில் நியாயம் என்பது என்ன என்பதை அவன் புரிந்து கொள்ளவில்லை. ஒவ்வொரு செயலிற்கும் நடத்தைக்கும் அவரவர் பக்கத்தில் நியாயம் இருக்கின்றது. ராசாத்தி வேணுமென்றுதான் அங்கு கூட்டிச் சென்றாளோ?

'அப்பா நீங்கள் இப்படி நடந்து கொண்டீர்களா?

கரங்களால் தலையை அழுத்திக்கொண்டான். அவன் வீட்டைவிட்டு வெளியேறி இருக்கக் கூடாது. அம்மாவின் இதயத்தைக் கலங்க வைத்து விட்டான். அங்கிருந்திருந்தால் ஏதாவது நடந்துமிருக்கலாம்.

அப்பாவை வலுக்கட்டாயமாகச் சயிக்கிலில் ஏற்றி அழைத்துச் செல்ல அவன் யார்? அவன் என் குடும்பத்திலேயே என்ன துணிச்சலுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டான்?

தன் அப்பாவைக் கொன்ற அவனை எக்காரணத்திற்காகவும் அவன் மன்னிக்கத் தயாராகவில்லை. அவன் அழிக்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சின்னக்காவிற்கு இவை தெரிந்தால் அவளே அக் காரியத்தினைச் செய்துவிடுவாள்.

பதினொரு வருடங்களாக அந்த முகம் அவன் நினைவில் கனவில் எல்லாம் தோன்றிக்கொண்டிருந்தது. அவனைப் பழிவாங்கிவிடவேண்டுமென்ற துடிப்பும் வளர்ந்து வந்தது. கனடாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது அவனை இப்படி தன் வீட்டிலேயே சந்திப்பேனென அவன் எண்ணி யிருக்கவில்லை.

புளியமரத்தில் காய்த்துப் பழுத்திருந்த பழங்கள் காற்றின் அசைவில் நிலத்தில் விழுந்தன. முன்னர் அவற்றினை விழுந்தடித்துப் பொறுக்கிச் சுவைபார்த்த ஞாபகம் வருகின்றது. எல்லாம் வழமைபோல இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன, மனிதரைத் தவிர என அவன் எண்ணிக்கொண்டான்.

அம்மாவை அவன் வருத்திவிட்டான். அம்மாவிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். அம்மாவிற்கும் சின்னக்காவிற்கும் உண்மையை எடுத்துக் கூறிவிட வேண்டும். அவனைப்பிடித்து வெளியில் விட்டுவிட்டு இருவரையும் தன்னுடன் கனடாவிற்கு எப்பாடுபட்டாவது அழைத்துச் செல்ல வேண்டும்.

அக்கா படித்தவள். ஒரு கொலைகாரனோடு வாழ ஒருக்காலும் சம்மதிக்க மாட்டாள். எவ்வளவு படு பாவி? உடலிலிருந்து தலையைப் பிரித்தெடுக்க எப்படித் தான் மனம் வந்ததோ?

அவன் நிமிர்ந்தபோது நடராஜசுந்தரம் சயிக்கிலில் வந்து எதிரில் இறங்கினான்.

''உன்னை எங்கெல்லாம் தேடுகிறது? உனக்கு விசயம் தெரியாதா? உன் அத்தானை நேற்றுப்பின்னேரம் ஆமி பிடித்துச் சென்றுவிட்டதாம். உன்ர வீடே அல்லோலகல்லோலப்படுகுது. இனியாவது வீட்டிற்கு வா, மணி.''

அவன் எழுந்தியருந்தான். அவனில் எதுவித பதட்டமும் ஏற்படவில்லை. முகம் ஓடி மலர்ச்சியில் சிரித்தது. பாவம் செய்துவிட்டு எவனும் தப்பிவிட முடியாது. சட்டத்திற்கு ஒருவன் தப்பி விடலாம். ஆனால் தெய்வத்திற்கு ஒருவன் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொத்தானைப் பிடிச்சிட்டான்கள் என்கிறன். நீ, பதட்டமில்லாமல் நிக்கிறாய். என்ன மனிசனடா நீ..'' என்றான் நடராஜசுந்தரம் கவலையுடன்.

''அப்படி ஏதாவது அவனுக்கு நடக்குமென்டு எதிர்பார்த்தன்.''

மணிவண்ணனின் வார்த்தைகளில் தொனித்த கடுரத்தை நடராஜசுந்தரம் எதிர்பார்க்கவில்லை. மச்சானை அவனுக்குப் பிடிக்கவில்லையென்பது தெரிந்திருந்தது. காரணம் புலப்பட வில்லை.

''வாடா மணி வீட்டிற்கு இனியாவது போவம். மச்சானுக்காக வரவேண்டாம். உன் கொம்மாவிற்காகவாவது வா. மனிசி நெஞ்சு நோவென்று படுத்ததாம். இன்னமும் எழும்பவில்லை.

மணிவண்ணன் துடித்துப் பதைத்து எழுந்தான். உடல் இப்பொழுது பதறியது.

''என்னவாம் நடா..''

''கடுமையாக யோசித்திருப்பா. ஹார்ட் அற்றாக்காம். ஆஸ்பத்திரிக்கும் போகமாட்டன் என்று பிடிவாதமாக இருக்கிறாவாம்.''

மணிவண்ணன் சயிக்கிலில் ஏறிக் கொண்டான். படலைத் தள்ளித்திறந்து கொண்டு ஓடிவந்தான். சின்னக்கா ஒரு மூலையில் அமர்ந்திருந்து கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறாள். அவனைக் கண்டதும் பெருங்குரலில் ஒப்பாரியிட்டாள்.

அம்மா கட்டிலில் வெட்டியெறிந்த வாழைமர மாகக்கிடந்தாள். அவன் அவள் அருகில் விரைந்து சென்றான்.

''அம்மா.. அம்மா..''

அம்மாவின் விழிகள் திறக்கின்றன. நீர் கண்களில் திரையிடுகிறது. முகத்தில் இருந்தாற் போலப் பிரகாசம் படர்கிறது. அவன் அவள் அருகில் அமர்ந்து விழிகளில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டான்.

''மணி.. என்று குஞ்சு.. வந்திட்டியா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆஸ்பத்திரிக்குப் போவம், அம்மா.''

''எனக்கினி ஒன்டுமில்லை. நீ வந்திட்டாய். கொத்தானை ஆமி பிடிச்சிட்டுதாம், மணி. இப்ப தாங்கள் பிடிக்க வில்லையென்கினமாம்..''

''அதுக்கு அது வேணும், அம்மா..''

அம்மாவின் விழிகள் அவனிடம் யாசிக்கின்றன: ''அப்படிச் சொல்லாதை மணி.''

''எங்க அப்பாவைக் கொன்றவன் அவன்.''

அம்மா அமைதியாகச் சொன்னாள்: ''அது எனக்குத் தெரியும் மணி.'' அவன் அப்படியே உறைந்து போனான்.

''தெரிந்துமா இந்தக் கலியாணத்தைச் செய்து வைச்சியன்? அப்பாவைக் கொன்றவன் அம்மா.''

''கொன்றவன் அல்ல. கூட்டிச்சென்றவன். அவன் செய்தது சரியோ பிழையோ எனக்குத் தெரியாது. அப்பாவைச் திருத்த நான் எவ்வளவோ முயன்றன். ஊரிலுள்ள இளம் பொடியன் பலர் கைதாக அவர் காரணமாகவிருந்தார். இப்படிச் செய்யாதை யுங்கோ என்று கேட்டபோது, பொலிஸ்காரன் என்ன செய்வான் என்றார். நான் என்ர கடமையைச் செய்யிறன் என்பார். லிங்கனைக் கைது செய்ததும் கடமையா என்றன். அவர் என்னைக் கோபத்துடன் பார்த்தார். அந்த வடுவா எனக்குச் செய்தது தெரியுமா? அவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்காமல் விடமாட்டன் என்றார்.'' அம்மாவிற்கு மேல் மூச்சு வாங்கியது.

அவன் திகைத்துப் போய் இருந்தான். அப்பாவின் மரணத்தை அம்மா நியாயப்படுத்துகிறாளா? அல்லது அந்த மரணத்தை விளைவித்தவர்களை மன்னித்து விடுகிறாளா?

''லிங்கன் எங்களுக்குத் தூரத்தில் சொந்தம். அப்பாவின் தகப்பனும் லிங்கனின் தாயும் ஒன்றுவிட்ட சகோதரங்கள். காணி வழக்கொன்றில் ஏற்பட்ட பிரச்சினை. லிங்கனின் தகப்பனும் உன் அப்பாவும் கொளுவிக்கொண்டார்கள். ஒரு கட்டத்தில் லிங்கன் உன் அப்பாவைக் கை நீட்டி அடித்துவிட்டான். அப்பொழுது அவன் சிறு பையன். உன் அப்பா பொலிஸ் வேலையில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கை நீட்டியதை உன் அப்பாவால் மறக்கமுடியவில்லை. சந்தர்ப்பம் பார்த்திருந்திருக்கிறார். சந்தர்ப்பம் கிடைத்தபோது தன் பதவியைத் தப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்.''

''கவிதா இராசலிங்கத்தைக் காதலித்தது தெரிய வந்தபோதும், கலியாணம் பேசி வந்தபோதும் நான் முதலில் பெரிதாகப் பதட்டப்படவில்லை. கந்தையா அண்ணைக்கு இராசலிங்கத்திற்குக் கவிதாவை கொடுப்பதில் ஏனோ விருப்பமிருக்கவில்லை. நீங்கள் எல்லாமும் கவிதா விரும்புகிறவனுக்கே அவளைக் கட்டிவையுங்கள் என்றபோது நானும் ஒப்புக் கொண்டான். அந்த வேளை ஒரு நாள் இராசலிங்கம் வீட்டிற்கு வந்தான். கவிதா அங்கிருக்கவில்லை. அவளில்லாத நேரம் பார்த்துத் தான் வந்திருக்கிறான்.''

இராசலிங்கம் வந்திருந்தான்.

''வாங்கோ தம்பி..''

அவன் கதிரையில் அமர்ந்து கொண்டான். அவன் முகம் வாடிக்கிடந்தது. ஏதோ சொல்லிவிட விரும்புகிறவன் போலத் தெரிந்தது.

''எனக்குக் கவிதா சண்முகமண்ணையின் மகள் என்பது முதலில் தெரியாது..'' என்றபடி ஹோலில் மாட்டியிருந்த சண்முகத்தின் படத்தை உற்றுப் பார்த்தான். அம்மாவிற்கு எதுவும் புரியவில்லை. அவன் தொடர்ந்தான்: ''நான் இயக்கத்தில் இருந்தவன்.''

''தெரியும்..''

''நான் கவிதாவை உசிருக்கு மேலாக விரும்புகிறன். இந்த உலகத்தில் அவள் தான் எனக்கெல்லாம்.''

''அதுதான் கலியாணம் செய்யப் போறியளே?''

அவன் அம்மாவை ஏக்கத்துடன் பரிதாபமாகப் பார்த்தான்.

''கலியாணம் நடக்கிறதும் நடக்காததும் உங்கள் முடிவில் தான் இருக்கிறது. நான் சொல்லப்போவதைக் கேட்டபின் முடிவு எடுங்கள், அம்மா. ஆத்மாவைக் கருணையற்ற தாக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலொன்றை நான் செய்திருக்கிறன். உங்கள் கணவரைச் சயிக்கிலில் ஏற்றிச் சென்ற மூவரில் நானும் ஒருவன்.''

அந்த வீடு முகட்டுடன் தலைமேல் சரிந்ததுபோன்ற உணர்வு. அம்மா அப்படியே கதிரையில் சரிந்துவிட்டாள். உடல் பதறி நடுங்க அவனை எரிச்சலுடன் பார்த்தாள்.

''நான் அவரைக் கொல்லவில்லை. அவருக்கு மரண தண்டனை வழங்குவார்கள் என்றும் நான் எண்ணி யிருக்கவில்லை. நான் என்மனதைத்திறந்து சொல்லிவிட்டன். குற்றங்களுக்கு மரணம் தான் தண்டனை என்றால் இந்த உலகத்தின் ஆத்மா இருக்காது. கடந்த பதினொரு வருடங்களாக நான் அனுபவித்து வரும் வேதனையே போதும். குற்றம் புரிந்துவிட்டு எவனும் நிம்மதியாக இருந்து விடமுடியாது. அம்மா. நான் வருகிறன், நீங்கள் எனக்கு என்ன தண்டனை வழங்கினாலும் ஏற்றுக் கொள்கிறன் இனி முடிவு செய்ய வேண்டியது நீங்கள் தான்..''

அவன் எழுந்திருந்தான். அம்மாவை ஏறிட்டு நோக்கிவிட்டு,'' என்னை மன்னித்து விடுங்கள்'' என்றபடி அம்மாவின் கால்களைப் பற்றிக்கொண்டான்.

அம்மா கால்களை இழுத்துக்கொண்டாள்.

யார் யாருக்குத் தண்டனை வழங்குவது? சட்டத்தையும் நீதியையும் மனிதர்கள் தம் கரங்களில் எடுத்துக்கொண்டால் இந்தப் பூமியில் எஞ்சுவது வெறும் விரக்தியும் வேதனையும் தாம். இப்பொழுது முடிவு எடுக்கவேண்டிய பொறுப்பு அவளிடம் விடப்பட்டுவிட்டது. ஒருபக்கம் தாலி கட்டிய கணவனின் மரணத்திற்குக் காரணமானவர்களில் ஒருவன். மறுபக்கம் கவிதாவின் வாழ்வு. இப்படியொரு சிக்கலை விதி அவர்களின் வாழ்பில் இடுமென அவள் எண்ணியிருக்கவில்லை.

சண்முகத்திற்கு அவள் எவ்வளவு தடவை எடுத்துச் சொன்னாள். அவர் பிடிவாதமாகத் தன் மரணத்தைத் தேடிக்கொண்டார். கடமையென்ற போர்வையில் அவர் தகாத காரியங்கள் பலவற்றினைச் செய்து விட்டார். அவற்றினை நியாயப்படுத்த அவளால் முடியவில்லை. அதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குக்கிடைத்த தண்டனையைச் சரியெனவும் அவளால் ஏற்கமுடியவில்லை.

நான்கு ஐந்து நாட்கள் அவள் சிந்தனை வயப்பட்டாள்.

கவிதாவின் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிப்பதைத் தவிர வேறு மார்க்கமிருக்கவில்லை. இக்கலியாணத்தைக் குழப்புவதன் மூலம் இன்னொரு மாப்பிள்ளைய யாழ்ப்பாணச் சமூகத்தில் தேடிப்பெறுவதும் சாத்தியமில்லை. ஒருவனைக் காதலித்த பெண் என்ற பெயரே பெருந்தடையாகிவிடும்.

அவன் திருந்திவிட்டான். அவர் திருந்தியிருந்தால் அவமாகச் சாக நேர்ந்திருக்காது. பூரணமாக மனிதன் என்று ஒருவரையும் இந்த உலகத்தில் காணமுடியாது போலும். எல்லாரும் தவறுகள் விடத்தான் செய்கிறார்கள்.

-அம்மாவிற்கு மேல் மூச்சு வாங்குகிறது. அவன் தாயின் அருகில் அமர்ந்திருக்கிறான். அம்மா கூறியவை மனதில் ஆழமாகப் பதிந்தன.

''ராசா, மணி, அத்தானை வெறுக்காதை. நடந்தது நடந்துவிட்டது.''

அவன் கவலையுடன் அம்மாவைப் பார்க்கிறான். அவனைப் பொறுத்த வரையில் அப்பா அவன் மீது பாசத்தைச் செலுத்தியவர். அவனுடன் உயிரையே வைத்திருந்தவர். சிறுவயது நினைவுகள். ஒவ்வொன்றிலும் அப்பா பதித்துவிட்ட பாசப்பிணைப்பை இலகுவில் மறந்துவிட முடியாது. எவருக்கும் அவர் குற்றவாளியாக இருக்கலாம். அவனைப் பொறுத்தமட்டில் அப்பா ஒன்றும் தவறிழைக்காத உத்தமர்.

''ஏறடா சயிக்கிலில்..'' என்ற கரூரவார்த்தையுடன் வெளிப்பட்ட குரலிற்குரியவனை அவன் எப்படி மன்னிப்பான்? அந்தக் கடினமான முகத்தை அவன் எப்படி மறப்பான்?

அவன் மௌனமாகவிருந்தான். அம்மாவின் முகம் வாடியது. அவன் மனநிலையைப் புரிந்து கொண்டாள். நீண்ட ஏமாற்றப் பெருமூச்சு வெளிப்படுகின்றன.

''எனக்கொரு சத்தியம் தா, மணி.''

''அம்மா..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன்னை நான் வற்புறுத்தவில்லை. அக்காவின் நிம்மதியான வாழ்க்கையைப் பறித்து விடாதை. என்னைப் போலக் கணவனின்றித் துயரத்துடன் நித்தம் விதவையாக வாழவைத்து விடாதை.'' அம்மாவின் விழிகள் அவனிடம் யாசித்தன.

அவன் தன்னை நிலைப்படுத்திக்கொண்டான்.

''நான் இங்க இருக்க மாட்டன் அம்மா. இங்கிருந்தால் என்ன செய்வேன் என்பது எனக்குத் தெரியாது. என்னுடன் நீங்களும் கனடாவிற்கு வந்திடவேணும்.. இங்கிருந்து போய் விடுவம் அம்மா.''

அம்மா அவனைப் பாசத்தோடு ஏறிட்டாள்.

''என்னை அங்க கூப்பிடாதை. ஆனால் நீ கனடாவிற்குப் போவதற்கு முன் உனக்கு ஒரு கலியாணம் செய்து பார்த்துவிட ஆசைப்படுகிறன். போகேக்க அவளையும் கூட்டிக்கொண்டு போ. நீ ஆரையாவது பார்த்து வைச்சிருக்கிறியா?''

அவன் தாயை வியப்புடன் பார்த்தான்.

''அப்படியொன்றுமில்லை.''

அம்மாவின் விழிகளில் மகிழ்ச்சி பொங்கியது. அவன் கரத்தை அன்புடன் இறுகப்பற்றிக் கொண்டாள்.

''ராசாத்தியை உனக்குப் பிடிச்சிருக்குதா? கந்தையா அண்ணை என்னிடம் கேட்டார்.''

அவன் சற்று மௌனமாகவிருக்கிறான். ராசாத்தி நல்ல பெண். எல்லாவிதத்திலும் குறைகாணமுடியாத புத்திசாலியான பெண். அழகு, அடக்கம், நல்ல குணவியல்பு அனைத்தும் அவளிடமிருக்கின்றன. அவளுடன் பேசுவதில் இனந்தெரியாத சுகம் இருப்பதை அவன் உணர்ந்திருக்கிறான். நொந்த உள்ளத்திற்கு ஔடதம் மாதிரி அவள் செயல்பட்டிருக்கிறாள். எவ்வளவு அற்புதமாக அவன் குமுறலை அவள் தனித்திருக்கிறாள். லிங்கனின் வீட்டிற்குத் திட்டமிட்டுத்தான் அழைத்துச் சென்றாளோ?

''என்ன ராசா, சொல்கிறாய்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

**வா**னம் இருந்தாற்போல இருண்டு பெருந்துளிகளைத் தாரைகளாக மண்ணில் நீட்டியது. பங்குனி வெயிலில் இப்படியொரு திடீர் மழைப்பொழிவை எவரும் எதிர்பார்க்கவில்லை. வானத்தில் எப்படிக் கருமுகில் சேர்ந்தது? பகல் முழுவதும் சுட்டெரித்த வெயிலில் காய்ந்த நிலத்தின் நீர்ப்பற்று மாலையில் ஒடுங்கிப்பொழிகின்றது.

மணிவண்ணனுக்கு வேறு வழியிருக்கவில்லை. படலையைத் தள்ளித்திறந்து கொண்டு கந்தையா அம்மாணின் வீட்டிற்குள் புகுந்தான். சயிக்கிலை முற்றத்தில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள் நுழைந்தபோது கதிரையில் ராசாத்தி எதையோ படித்துக்கொண்டிருந்தாள். அவனை அவள் எதிர்பார்க்கவில்லை.

''வாருங்கோ, மணி..'' என்றபடி வரவேற்றாள். ''மழை அள்ளிக்கொண்டு வந்திருக்குது.'' எனச்சிரிக்கிறாள். அவள் சிரிப்பு அவள் முகத்தின் எழிலுக்குக் கவர்ச்சியைத் தந்தது. சிரிக்கும் போது பளீரெனப் பற்கள் மின்னலிட்டன. தடித்த உதடுகள் சிவந்துகிடந்தது. அவன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். மனதில் ஒரு விதமான குறுகுறுப்பு. அம்மாவின் வார்த்தைகள் அவன் ஆழ்மனதில் உறங்கிக்கிடந்த ஆசையைத் தூண்டிவிட்டன. ராசாத்தி அழகாகத் தான் இருக்கிறாள். இன்று என்றுமில்லாத சோபை அவனுக்குத் தெரிகின்றது.

''என்ன நிலை குத்தி நிக்கிறியள்?''

''ஒன்டுமில்லை..''

''நனைஞ்சிட்டியள்., இந்தா துடையுங்கோ..'' என்று அவள் துவாய் ஒன்றினை அவனிடம் நீட்டினாள். அவன் வாங்கி முகத்தினை இழுத்தியபோது அத்துவாயில் வெளிப்பட்ட வாசம் அவளுக்குரியதாகுமென எண்ணிக்கொண்டான். பலதடவை முகத்தைக் துடைத்துக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தலையில மழைத்தண்ணி வடியுது. தலையைத் துடையுங்கோ..'' என்று ராசாத்தி சிரிக்கிறாள். அவனுக்கு வெட்கமாகிவிட்டது. சமாளித்துக் கொண்டான்.

''அம்மானில்லையா?''

''ஒருத்தருமில்லை.''

''பயமில்லையா?''

அவள் உதடுகளில் மென்னகை படர்ந்தது.

''யாருக்குப் பயப்படவேணும்? ஏன் பயப்படவேணும்? நான் எதற்கும் பயப்படுவதுகிடையாது. நட்டநடுநிசியில் எவருமற்ற காட்டிலும் தனிய நடப்பன், மணி.''

''மரணத்திற்கு உமக்குப் பயமில்லைப் போலும்,''

அவள் கலகலவெனச்சிரிக்கிறாள். அவள் சிரிப்பிற்குக் காரணம் அவனுக்குப் புரியவில்லை.

''மரணத்திற்கு யாழ்ப்பானத்தவர்கள் பயந்த காலம் ஒன்றிருந்தது. இன்று அப்படியில்லை. மரணங்களைச் சந்தித்துச் சந்தித்து மனங்களும் மரத்துவிட்டன. புதைகுழிகளுக்குள் உறங்குகின்றவர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கிலாகி விட்டது. செம்மனி, துரையப்பா ஸ்ரேடியம்.. இன்னும் எத்தனையெத்தனை புதைகுழிகளோ? நிலத்திற்குள் எங்கு எவ்விடத்தில் மிதிவெடிகள் காத்திருக்கின்றவோ?''

வெளியில் பெய்த மழை நின்றிருக்கின்றது. வானம் துடைத்துவிட்ட கண்ணாடியாகிவிட்டது.

அவளைப் பேசவிட்டுவிட்டு அவன் அவளையே கண் கொட்டாமல் உற்று வியப்புடன் பார்த்து நிற்கிறான். அவள் வித்தியாசமான பெண். பேச்சில், பழக்க வழக்கத்தில் அன்றைய யாழ்ப்பாணத்துப் பெண்ணல்லள். கப்பல் பயணத்தின்போதே அவ்வாறான அபிப்பிராயம் அவனுக்கு ஏற்பட்டிருந்தது. தந்தையின் சொல்லிற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத தாயையும் அப்பாவின் வார்த்தைகளுக்கு அடங்கி நடந்த அக்காமாரையும் அவன் கண்டிருக்கிறான். ராசாத்தி வித்தியாசமானவள். அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சில் உயர்ந்த இலட்சியப் பார்வையிருக்கிறது. ஒருவித செருக்கும் இருக்கிறது.

''ராசாத்தி, நீர் யார் பக்கம்?'' என அவன் இருந்தாற்போலக் கேட்டான்.

அவள் சற்றும் தயங்கி நிற்கவில்லை.

''நான் நியாயத்தின் பக்கம்.'' எனச் சிரிக்கிறாள்.

ராசாத்தியின் தாயார் வெளியிலிருந்து வருவது தெரிகின்றது. அவள் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தபடி உள்ளே சென்றாள். செல்லும் போது, ''தம்பி, எப்பப் பயணம்?'' என்று கேட்டாள். யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களிடம் கேட்கின்ற இரண்டு கேள்விகளில் ஒன்று, ''எப்ப வந்தியள்?'' மற்றயது ''எப்பப் பயணம்?'' வெளிநாட்டிலிருந்து வந்தவர்களை இங்கு இருக்கவே விடமாட்டார்கள் போலும்.

''அம்மா ஒரு பேச்சுக்குக் கேட்டா. அவ்வளவு தான். எனக்குத் தெரிந்த ஒரு இடத்தில் இரண்டு வரியங்களுக்குப் பின்னர் கணவன் வெளிநாட்டிலிருந்து மனைவியிடம் வந்திருந்தான். இரண்டாம் நாள் மனைவி கேட்டாளாம், எப்ப போகப்போறியள்? என்று. உழைச்சது காணும் மனைவி பிள்ளைகளுடன் இனி இருப்பம் என்று வந்தனவன் இந்தக் கேள்வியோட எண்ணத்தை மாற்றிக்கொண்டான். அந்தப் பிரச்சினை உங்களுக்கு இல்லை, மணி.. அது சரி நீங்க இங்கயே இருந்துவிடவா போறியள்? எப்ப பயணம்..?'' என்று ராசாத்தி கேட்டுவிட்டுப் புன்னகைத்தாள்.

''இன்னமும் பதினைந்து நாள் இருக்குது.'' என்று சற்றுத் தயங்கியவன், ''நீரும் வருகிறிரா, ராசாத்தி?'' என்று வினவினான். அவள் முகபாவம் திடீரென மாறியது. அந்த மாற்றத்தில் தெறித்த உணர்ச்சி எதுவென அவனால் கணிப்பிடமுடியவில்லை.

''மெய்யாகத் தான் கேட்டியளா?''

''மெய்யாகத் தான்..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வெளியே யன்னலூடாக வெறிக்கப்பார்க்கிறாள். கண்கள் எங்கோ அந்த காரத்தில் நிலைத்து நிற்கின்றன. வெளுத்துவிட்ட வான் பரப்பில் எதையோ தேடுவதாகப்பட்டது.

''ராசாத்தி, உண்மையாகத் தான் கேக்கிறன்.. வாறிரா?''

அவள் திரும்பி அவனைப் பாக்கிறாள். அழுத்தமான அவள் முகத்தில் பெண்மையின் வக்கிரங்கள் கோலமிடுகின்றன. விழிகளில் ஒருவிதமான பிரகாசம் ஒளிர்ந்தது. உதடுகள் எதையோ சொல்லத் துடிக்கின்றன. கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்பவள் போலக் காணப்பட்டாள். வெளியே மீண்டும் வானம் கருக்கட்டுவதால் பகல் ஒளி மங்கத்தொடங்குகிறது.

ராசாத்தி இருந்தாற் போல எழுந்திருந்தாள்.

''தேத்தண்ணி எடுத்து வாறன்..'' விருட்டென எழுந்து அடுக்களைக்குள் நுழைந்துகொண்டாள். அப்படியே சுவரோடு சாய்ந்துகொண்டு விழிகளை மூடிக்கொண்டாள். மார்புகள் ஏறியிறங்கின. அழுதுவிடுவாள் போலப்பட்டது. விம்மியபடி உதடுகளை இறுகக்கடித்துக் கொள்கிறாள். அருகில் நிழலாடியது. விழித்தபோது பக்கத்தில் அம்மா கவலையுடன் நின்றிருக்கிறாள்.

''மணிவண்ணன் நல்ல பையன். விரும்பிக் கேக்கிறான். ஓமென்றுவிடு ராசாத்தி.''

''அம்மா..''

''எல்லாவற்றையும் மறந்துவிடு. அது இது என்று அலைந்தது போதும். இனியாவது உனக்கென ஒரு வாழ்க்கையைத் தேடிக்கொள். வலிய வந்த சம்பந்தம், ராசாத்தி. மறுத்திடாதை. அம்மப்பாவிற்கும் அப்படியொரு எண்ணமிருக்கிறது.''

அவள் துடித்துப்போய் தாயைப் பாத்தாள்.

''அவருக்கு என்னைப்பற்றித் தெரியாதா?''

''உன்னைப் பற்றி என்ன தெரியவேணும் எல்லாவற்றையும் விட்டு விட்டுத் தான் யாழ்ப்பாணத்திற்கு வந்திருக்கிறம். இனியும் அது இதுவென்டு திரியாதை பிள்ளை.''

''நடக்கக்கூடியதைக் கதை அம்மா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா கோபத்துடன் கத்தினாள்: ''மடியில நெருப்பைக்கட்டி கொண்டிருப்பதுபோல நான் தவிக்கிறன். எனக்கு ஏற்பட்ட இழப்புக்கள் போதும். உன்னையும் நான் இழந்துவிடக்கூடாது. இங்க நீ பாதுகாப்பாக இருக்க முடியாது ராசாத்தி. மணிவண்ணன் அழைப்பே ஏற்று கனடாவிற்குப் போய்விடு.''

அம்மாவின் விழிகள் கலங்கி நீரைச்சொந்தன.

ராசாத்தி எதுவும் மேற்கொண்டு பேசவில்லை. தேநீரைத் தயாரித்து எடுத்துக் கொண்டு விழிகளை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். வெளியில் வந்தாள். மணிவண்ணன் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

''என்ன உள்ளுக்க பெரிதாக வாக்குவாதப்பட்டியள்?''

''ஒன்றுமில்லை. அம்மா உங்களுடன் கனடாவிற்குப் போயிவிடட்டாம்.''

''அப்ப மாமி என் பக்கந்தான்..''

அவள் எதுவும் பேசவில்லை. தலை விண்விண்ணெனக் கனத்தது.

''எல்லாரும் இந்த மண்ணைவிட்டு ஓடிவிடப் பார்க்கிறார்கள்.''

''அப்படிச் சொல்ல முடியாது, ராசாத்தி. எனக்கும் இங்கு தங்கிவிடலாமென்று ஆசையில்லாமலில்லை. நான் பிறந்தது இங்குதான். எட்டுவயது வரை வாழ்ந்ததும் இங்கு தான். அப்படியொரு சம்பவம் நடந்திருக்காவிட்டால் நானும் இங்கு தான் படித்திருப்பன். வாழ்ந்திருப்பன்.. எங்க ஊரின் தெருவில் நடக்கும்போது உள்ளத்திலும் உடலிலும் ஏற்படுகின்ற பரவசம் வேறெங்கும் வராது, ராசாத்தி. வறட்சியான புழுதிகலந்த காற்றினைச் சுவாசிக்கும் போது ஏற்படுகின்ற திருப்தி வேறெந்தக் குளிர்காற்றிலும் வந்துவிடாது. வெளிநாட்டில வாழ்ந்து சலித்து விட்டவன் நான். இங்கு அம்மாவுடன் தங்கிவிட வேண்டுமென்று தான் வந்தன். ஆனால், அந்த, எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டன். நான்..'' அவன் தொடர்ந்து பேசவில்லை. இடைநடுவில் நிறுத்திக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் மனதினுள் பெரும் எரிமலையொன்று குமுறிக் கொண்டிருப்பதை அவள் அறிவாள். அவனாகச் சொல்லும் வரை அதனை அறிவதில் அவளுக்கு ஆர்வமில்லை. ஓரளவு ஊகித்துத் தான் இருக்கிறாள்.

''எங்க தேசம் அழிந்துவிட்டது.'' என்றான் அவன்! எப்படியிருந்த ஊர்? அழிந்த கட்டிடங்களும் வீடுகளும் தெருக்களும்..''

அவள் அவசரமாகக் குறுக்கிட்டாள்.

''போராட்டமென்று வந்துவிட்டால் அப்படித் தான். அழிவுகளிலிருந்து முகிழ்தெழுகின்ற புத்துலகம் வலிமையானது மணி. மனிதர்களின் நம்பிக்கை ஆட்டம் காணாதவரை ஒரு தேசத்தை அழித்துவிடமுடியாது.''

''அடிக்கடி வெட்டப்படும் மரம் செழித்து வளராது, ராசாத்தி.''

''இந்த உதாரணம் தேசத்திற்குப் பொருந்தாது, மணி. அழிவிலிருந்து உயிரிந்தெழுந்த நாடுகள் பலவிருக்கின்றன.''

''என்றாலும் யுத்தத்தை நான் வெறுக்கிறன்..''

''யுத்தத்தை எவராவது விரும்புகிறார்களா, மணி? அரசியல் வாதிகளின் அயோக்கியத்தனங்களால் யுத்தம் தேசத்தில் நெருப்பாகப் பற்றிக்கொண்டுள்ளது. அணைப்பதற்குப் பதிலாக எண்ணெய் வார்த்து வருகின்றனர்.''

''உந்தக் கதையை விட்டிட்டு உங்களைப்பற்றிக் கதையுங்கோ.'' என்றபடி ராசாத்தியின் அம்மா வெளியே வருகிறாள். அவள் குரலில் எரிச்சல் படர்ந்திருக்கின்றது.

''அதைவிட்டுவிட்டு வேறெதையும் பேசமுடியாதம்மா. இங்குள்ள பிரச்சினைகளிலிருந்து தப்பிச்செல்ல மணி விரும்புகிறார். இங்குள்ள பிரச்சினைகளுக்கு என்னால ஒரு சிறு துரும்பைத் தூக்கிப்போட்டு தீர்வு காண நான் விரும்புகிறன்.'' என்கிறாள் ராசாத்தி.

மணிவண்ணன் அவள் வார்த்தைகளை நன்கு மனதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவள் வாயிலிருந்து வெளிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகளிலும் பார்க்க அந்த வார்த்தைகளைக் கொட்டி உச்சரித்துக்கொண்டிருந்த உதடுகளிலும் அவதானமாக விருந்தான். நினைக்க வெட்கமாகவும் இருக்கிறது.

''ராசாத்தி, நான் கேட்ட கேள்விக்கு இன்னமும் பதில் சொல்லவில்லையே?''

''இன்னமும் என் பதிலை நீங்கள் புரிந்து கொள்ள வில்லையா?''

''அங்கு என்னுடன் வரவிருப்பமில்லை.''

''வரவியலாது, அவ்வளவு தான்.''

''அப்ப, நான் இங்கயே தங்கிவிடுகிறன். அப்பவாவது சம்மதிப்பீரா?''

''எதற்கு?..''

அவன் அவளை வியப்புடன் பார்க்கிறான்.

''ராசாத்தி..?''

அவள் அமைதியாக அவனைப் பார்க்கிறாள்.

''எனக்கு உங்கள் மனம் புரியாமலில்லை, மணி. நானும் உணர்ச்சியுள்ள பெண் தான். சிலவேளை நான் கனடாவிற்கு உங்களுடன் வந்திருக்கலாம். இல்லாவிட்டால் இந்தமண்ணில் வாழும் ஆசையிருந்திருந்தால் உங்களது இரண்டாவது கேள்விக்குச் சம்மதித்திருக்கலாம். ஆனால் என்னால் முடியவில்லை. இந்த மண்ணில் இவ்வளவு அனர்த்தங்கள் நடக்காதிருந்தால், நித்தம் அவமாக இந்த மண்ணில் உயிர்கள் அழியாதிருந்தால், நான் பார்த்துவிடமெல்லாம் குருதியும் சதைக்குவியலும் காணப்படாதிருக்குமாகில், நான் உங்கள் விருப்பிற்கு வந்திருப்பன். என்னால் இனி அது முடியாது. இந்தத் தேசத்தில் நிகழ்ந்துவிட்ட மாபெரும் இடப்பெயர்வும் அதனால் ஏற்பட்ட வரலாற்று மாற்றமும் அழிவுகளும் என் வாழ்க்கையை மாற்றிவிட்டன. மணி, தயவுசெய்து மன்னியுங்க.. என்னால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. நல்லதொரு பெண்ணைத் தெரிந்தெடுக்கக் கொள்ளுங்க..''

அவள் திடுமென அறைக்குள் புகுந்துகொள்கிறாள்.

அவன் திகைத்து நிற்கிறான். பெண்ணே, நீ யார்?

## 16

தெருவோரத்தில் குண்டுக் காயத்துடன் சடலம் கிடக்கின்ற தென்ற செய்தி விசக்காய்ச்சலாக ஊரெங்கும் பரவிவிட்டது. அதிகாலை படலையைத் திறந்தபோது அவளிடம் ஒருவன் கூறிவிட்டுச் சென்றான். கவிதா துடித்து இடிந்துபோனாள். உடுத்திருந்த உடுப்புடன் சடலம் கிடப்பதாகச் சொல்லப்பட்ட இடத்திற்கு ஓடிவந்தாள்.

மதகு ஒன்றிற்கு அருகில் தெருவோரமாகச் சடலம் ஒன்று வீழ்ந்து கிடந்தது. அதனை ஒரு வெள்ளைத் துணியால் எவரோ மூடிவிட்டிருந்தார்கள். சடலத்தைச் சுற்றி மக்கள் மொய்த் திருந்தார்கள். கவிதா கலங்கிய விழிகளுடன் வேகமாக அவ்விடத்திற்கு ஓடிவந்தாள். இராசலிங்கமோ? இராணுவம் பிடிப்பதும் சடலமாகக் கிடப்பதும் இப்பொழுது அதிசயமான விசயமன்று.

அவள் வந்த வேகத்தினைக் கண்டவர்கள் விலகிநின்றனர். அவள் வேகமாக ஓடிவந்து சடலத்தை மூடியிருந்த துணினைத் தூக்கிப் பார்த்தாள். மார்படியில் இரத்தம் தோய்ந்திருந்தது. துப்பாக்கிச்சன்னம் மார்பினைத் துளைத்திருக்க வேண்டும். முகத்தைப் பார்த்தாள். மனம் ஒரு கனம் அமைதியடைந்தது.

அது இராலிங்கமல்ல. வேறொருவடையது.

''தங்கச்சி, தெரிந்தானே?''

''அவிரில்லை.'' என்றாள் கவிதா: ''இது வேறயாரோ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் வீட்டிற்குத் தளர்ந்துபோய்த் திரும்பி வந்தாள். வீட்டுப் படிக்குந்தில் மணிவண்ணன் அமர்ந்திருந்தான்.

அவன் வீட்டிற்குத் திரும்பி வந்து ஐந்து நாட்களாகிவிட்டன. இராசலிங்கத்தின் மீது அவனுக்கு ஏன் கோபம் என்பது அவளுக்குப் புரியவில்லை. அவனை இராணுவம் கைது செய்து கொண்டு சென்றுவிட்டது என்பதை அறிந்தும் அவன் கவலைப்படவில்லை. அவள் முகாம் முகாமாக இராசலிங்கத்தினைத் தேடி அலைந்து திரிந்து வந்தாள். எல்லாவிடங்களிலும், ''அப்படியொருத்தரை நாங்கள் கைது செய்யவில்லை. கைது செய்திருந்தால் துண்டு தந்திருப்போம்'' என்ற பதிலே சொல்லப்பட்டது.

அவள் இடிந்து போய்விட்டாள்.

''எங்க அக்கா, போய்விட்டு வாறாய் இவ்வளவு வெள்ளென..?''

''றோட்டில ஆரையோ சுட்டுப் போட்டிருக்கினம். பயந்து போய்ப் பார்த்து விட்டு வாறன். அவரில்லை.''

அவன் எதுவும் பேசவில்லை. ஆறுதலாக ஏதாவது வார்த்தைகளைக் கூறியிருக்கலாம். அவன் மனமென்ன கல்லா? கூடப்பிறந்த சகோதரியின் வாழ்வு சம்பந்தப்பட்ட விடயம் இது. கொஞ்சமும் இரங்காமல் அலட்டிக் கொள்ளாமல் கல்லாச் சமைந்திருக்கிறானே?

''சின்னக்காவிற்கு இராசலிங்கம் யாரென்று தெரியுமா, அம்மா?'' என்று அவன் முந்தாநாள் தாயைக் கேட்டான்.

''தெரியாதென்டு நினைக்கிறன். நான் சொல்லவில்லை. நீயும் சொல்லவேண்டாம் மணி. ஆனால் இராசலிங்கம் சொல்லாமல் விட்டிருப்பானா? அவன் அப்படிப்பட்டவன் தம்பி. தன்ர மனிசியயிடம் மறைத்திருக்க மாட்டான்.'' என்றாள் அம்மா. அம்மாவிற்குக் கொஞ்சம் உடல் தேறியிருந்தது. கடுமையாக வேலை செய்ய வேண்டாம். ஓய்வாக இருக்கும்படி டாக்டர் கூறியிருக்கிறார்.

சின்னக்கா அவனுடன் மனம் விட்டுப் பேச முயன்றிருக்கிறாள். அவள் முகத்தினை ஏறிட்டுப் பார்த்துப் பேச அவனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியவில்லை. இருவருக்குமடையில் மெல்லிய திரை தடையாக வீழ்ந்துவிட்டது. இராசலிங்கத்தினைத் தேடி அவன் எதுவித முயற்சிகளையும் எடுக்கவில்லை என்பதில் அவளுக்கு வருத்தமில்லை. வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறான். அவனுக்கு இங்குள்ள காரியங்கள் எப்படிப் புரியும்?

கவிதா அவனைக் கடந்து படியேற முயன்றபோது, ''அவர் வந்திடுவார், சின்னக்கா'' என்றான் வார்த்தைகளில் இரக்கத்தினைச் சேர்த்து. சின்னக்கா தயங்கி நிற்கிறாள்.

''அவர் நல்லவர், தம்பி. எவருக்கும் மனதாலும் தீங்கு நினைக்காதவர். முன்பு இயக்கத்திலிருந்தவர் அவ்வளவு தான். விலகி வந்திட்டார். தானும் தன் கராச்சும் என்றிருக்கிறவர். கெட்ட பழக்க வழக்கம், சகவாசம் என்று எதுவும் கிடையாது. அவருடைய தோற்றத்திற்கும் அவருடைய குழந்தை உள்ளத்திற்கும் எதுவிதமான தொடர்புமில்லை. மணி. எறும்புக்குக் கூடத் தீங்கு நினைக்காத மனிசன்.'' அவள் விழிகளைத் துடைத்துக் கொள்கிறாள். சின்னக்கா அழுவது அவனுக்கு வருத்தத்தைத் தருகிறது.

தன் கணவன் பற்றிய அவளின் கணிப்புகளை ஒருபோதும் அவன் ஏற்கத் தயாராகவில்லை. அவன் அப்படி யல்லன். தன் கண்முன்னால் அப்பாவைச் சயிக்கில் கரியரில் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்றவன். அவனால் ஒருபோதும் மன்னிக்க முடியாது. அவனவன் செய்ததற்கு அவனவன் தான் அனுபவிக்க வேணும்.

''நான் வார்ற சனிக்கிழமை வெளிக்கிடுகிறன் அக்கா.''

''நீ போய்விடு தம்பி. இங்க ஒருத்தரும் நிம்மதியாக வாழமுடியாது. இது ஒரு மரண பூமி!

''நீயும் வந்துவிடு அக்கா. அம்மாவையும் கூட்டிச்செல்லும். கனடாவில் நிம்மதியாக எல்லாரும் ஒன்றாக இருக்கலாம்.''

அவள் அவனைத் துயரத்துடன் பார்த்தாள்.

''அவர் வரட்டும். இனி இங்க இருக்கிற உத்தேசம் எனக்குமில்லை. அவரையும் அழைத்துச் செல்வாயா, தம்பி?'' என்றவள் தொடர்ந்தாள்:'' அவர் வரமாட்டார். அவர் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணை விட்டு ஒருக்காலும் வரமாட்டார். அவர் தாய் சோதரங்கள் எல்லாரையும் விட்டுவிட்டு வரமாட்டார். கலியாணமாகாத தங்கச்சி ஒருத்தி.. வரமாட்டார்.''

''அப்ப நீ வா, அக்கா.''

அவள் மணிவண்ணனை பார்த்த பார்வையில் அருவருப்புத் தெரிந்தது.

''அவரை இங்க விட்டுவிட்டா? தெரிந்தா நீ கேக்கிறாய், மணி. ஒருக்காலும் அது சாத்தியப்படாது. எந்த ஒரு பெண்ணும் தொட்டுத்தாலி கட்டிய கணவனை விட்டுவிட்டு எங்கும் போகமாட்டாள். என் மீது அவர் உசிரையே வைச்சிருக்கிறார், தம்பி. எனக்கும் அவருக்குமுள்ள இனிய பந்தத்தை நான் எங்கும் பெறமுடியாது. அவருடன் தான், அவருடன் வாழ்வதன் மூலந்தான் அடைய முடியும். என் வயிற்றில நான் இப்ப சுமக்கிற கருவுக்கு அவர் தான்.. என் குழந்தைக்கு யாரைக் காட்டுவன்?''

''அக்கா..'' என்றான் அவன். அவனால் வேறெதுவும் பேசமுடியவில்லை.

''உனக்கு அவரை ஏனோ பிடிக்கவில்லை. எனக்குக் காரணம் வேண்டாம். அதை தெரிந்து கொள்ள நான் விரும்பவு மில்லை. இந்த உலகத்தில் அவர் தான் எனக்கு எல்லாம். அம்மாவைவிட அப்பாவைவிட ஏன் உன்னையும் விட அவர் தான் எனக்குப் பெரிசு.''

அவன் திகைத்துப் போய் அமர்ந்திருந்தான்.

படலையைத்திறந்து கொண்டு ராசாத்தி சயிக்கிலுடன் வருகிறாள். சயிக்கிலை மாமரத்துடன் சார்த்தி விட்டு அவர் களிடம் வந்தாள்.

''கவிதாக்கா, ஒரு நல்ல செய்தி.'' என்று கரத்திலிருந்த பத்திரிகையைத் தூக்கிக் காட்டினாள்: ''இராசலிங்கம் அண்ணை காங்கேசன்துறைக் கம்பில தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனிதவுரிமைகள் பொறுப்பாள் தினசரியில பெயர் வெளியிட்டிருக்கிறார்.''

கவிதா ஓடிப்போய்ப் பத்திரிகையை வாங்கிக்கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவல், மகிழ்ச்சி முகத்தில் கொந்தளிக்கப் பேப்பரைப் புரட்டினாள். ராசாத்தி அந்தச் செய்தி வந்துள்ள இடத்தைச் சுட்டிக் காட்டிய போது பரபரப்புடன் பார்க்கிறாள். முகம் மலர்கிறது.

''கடவுளே, எனக்கு இவ்வளவு போதும். அவர் எங்கயாவது உசிரோட இருந்தால் அதுவே போதும்.''

பத்திரிகையுடன் சின்னக்கா உள்ளே விரைந்து செல்கிறாள். அவள் உள்ளம் மகிழ்ச்சியால் மலர்ந்திருக்கிறது. அம்மாவிடம் சொல்லி ஆறுதல் பெற ஓடுகிறாள்.

ராசாத்தி உள்ளே வந்து கதிரையில் அமர்ந்து கொண்டாள். அவள் எதிரில் அவன் இருக்கிறான்.

''சின்னக்கா இனி நிம்மதியாக இருப்பா. எங்க பெண் களுடைய வாழ்க்கையில் ஆணிவேரே எப்பொழுதும் ஓர் ஆணைச் சுற்றியதாகத் தன் இருக்கிறது. வயது மாற மாற அந்த உறவு நிலையில் மாற்றம் அவ்வளவு தான். முதலில் தந்தை, பிறகு கணவன், பிறகு பிள்ளை, பிறகு பேரன் என மாறிக் கொண்டேயிருக்கிறது. எப்பத் தான் இவர்கள் சுயகால்களில் நிற்கப் போகிறார்களோ?'' என அவள் சிரித்தாள்.

''ஒருத்தரும் தனித்து நின்றுவிட முடியாது ராசாத்தி. இரண்டு கைகளும் தட்டினால்தான் சத்தம் வரும். வாழ்க்கையும் அப்படித்தான். ஆண் தனித்தும் பெண் தனித்தும் வாழ்ந்துவிட முடியாது. அது ஒரு சங்கமம். ஒருத்தருக்கொருத்தர் விட்டுக்கொடுத்து ஒருத்தருக்கு ஒருத்தரென வாழ்ந்து முடிப்பது. அங்கு நீங்க சொல்கிற மாதிரி ஏற்றத் தாழ்வு இருப்பதாக நான் நினைக்கவில்லை. சிறு வயதில் அம்மா சொற்படி நடந்தன். கனடாவில அண்ணிமார் சொற்படி நடக்கிறன். நான் நினைக்கிறன் வருங்காலத்தில் என் மனைவி சொற்படி நடப்பனென..'' அவன் ஆழமாக அவளைப் பார்த்தான்.'' நீர் ஓமெண்டால் உம் சொற்படி நடப்பன்.''

ராசாத்தி தலையைக் குனிந்தபடி இருந்தாள். உடனடியாகப் பதில் கூற அவளால் முடியவில்லை. மனதினுள் பலவிதமான கலக்கங்களும் குழப்பங்களும் ஆர்ப்பரிக்கின்றனென்பது அவளது முகத்திலிருந்த மாற்றத்தில் தெரிந்தது. அவள் எதையோ சொல்ல முயன்றாள். முடியவில்லை. உதடுகளைச் சோகத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடித்தபடி எங்கோ வெறிக்கப் பார்த்தாள்.

"ராசாத்தி, நானென்ன குழப்பிவிட்டேனா?"

"அந்தக் கதையை விடுங்கள். வேறு விடயங்களைக் கதைப்போம்."

"எனக்கு அதற்குப் பதில் தேவை."

"ஏற்கனவே சொல்லிவிட்டேன். என்னால் முடியாது. நான் இருக்கப்போவதே இன்னமும் கொஞ்ச நாள் தான்."

"ராசாத்தி.." என்று அவன் வீரிட்டான்.

"நான் சும்மா சொன்னன், மணி. நான் கலியாணம் செய்து கொள்வதாகவில்லை. நான் அந்த வாழ்க்கைக்குக் கொடுத்து வைக்கவில்லை."

"ஆரையாவது காதலிக்கிறீரா?"

ராசாத்தி கலகலவெனச் சிரிக்கிறாள். இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது? கேட்கக்கூடாத ஏதாவது கேள்வியையா அவன் கேட்டுவிட்டான்? இயல்பான ஒரு வினாவைத்தான் எழுப்பினான்.

"எனக்கு அது தெரியாது, மணி."

"அப்ப ஏன் மறுப்பான்? என்னை உமக்குப் பிடிக்க வில்லையா?"

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்துவிட்டு துயரத்துடன் புன்னகைத்தாள். இதற்கு என்ன பதிலை அவள் கூறுவாள்? அவனை அவளுக்குப் பிடித்திருக்கின்றது. எந்த முறையில் என்பது அவளுக்குத் தெரியவில்லை. அண்ணனாகவா, மச்சானாகவா, அல்லது வேறு உறவு நிலையிலா? அவள் ஒருபொழுதும் அவனைத் தன் வாழ்க்கைத் துணையாக எண்ணிப்பார்க்கவில்லை என்பது உண்மை. எண்ணிப்பார்க்க அவள் விரும்பவில்லை. அவள் எல்லாப்பெண்களையும் போல இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்வை முடிக்கப் பிறந்தவளல்லள்.

அவள் விழிகள் சிந்தனையின் ஆழத்தில் அமிழ்ந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன ராசாத்தி..?''

''எனக்குத் தெரியவில்லை.''

''ராசாத்தி உம் நினைவு என்மனதில் ஏற்படுத்துகின்ற சந்தோசம் எவ்வளவென என்னால் விளங்கவைக்க முடியாது. உம் இனிய நினைவு எனக்கு ஏற்படுத்துகின்ற குதூகலம்.. ஒரு பெண்ணின் நினைவு இவ்வளவு இனிமையை ஏற்படுத்துமென எனக்குத் தெரிந்திருக்கவில்லை. கனடாவில் யந்திரமாக இயங்கிவிட்டேன். எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறேன், ஆனால் உம்மைச் சந்தித்தபோது ஏற்பட்ட பரவசம் வேறெங்கும் ஏற்படடதில்லை. ஏன் ராசாத்தி? உமது புத்திசாலித்தனமான பேச்சு எனக்குப்பிடித்திருக்கிறது. உமது அடக்கமான அழகு எனக்குப் பிடித்திருக்கிறது. எனக்கு நீர் வேண்டும் ராசாத்தி. உம்மை விட்டுவிட்டு ஒரு வாழ்வை என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.''

ராசாத்தி அப்படியே நிலைகுலைந்து போய்விட்டாள். மணிவண்ணன் இப்படிப் பேசுவானென அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அமைதியாக வெகு நேரமிருந்தாள்.

முற்றத்து மாமரத்தில் அணில்கள் கீச்சிட்டபடி தாவின. ஒரு அணில் 'அவக் அவக்'கெனக்குரல் தந்தது. முற்றத்தில் மாமரத்தின் கீழ் நீர் நிரம்பியக் காயந்த இளகிய மண்ணைக் கோழிகள் இரண்டு கிளறிக் கொண்டிருந்தன. வீதியில் டிறக்கொன்று விரைந்து செல்கிறது.

டிறக்கின் ஒலியைக் கேட்டதும் ராசாத்தி தன்னைச் சிலிர்த்துக்கொண்டாள்.

''என்னை மறந்திடுங்க. என் வழி வேறு..''

''அதைத் தான் சொல்லுமன்? ஏன் மூடி மறைக்கிறீர்.? என்னைப் பிடிக்கவில்லையென்று ஒரு வார்த்தை சொன்னால் பிறகு பேச்சேயில்லை. ராசாத்தி, உம்மால் அது முடியாது. அப்படிச்சொன்னால் அது வெறும் பாசாங்கு வார்த்தையாகத் தான் இருக்கும்.''

''அப்படியில்லை. என்னுடைய திடமான முடிவு இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கலியாணம் செய்து கொள்ள மாட்டன்.'' அவள் விழிகள் கலங்கித் தவித்தன.

அவன் அவளைக் காதலோடு பார்த்தான். அவள் முகந்தாழ்த்தி அமர்ந்திருக்கிறாள். அவள் கன்னங்களில் நீர் மெதுவாக வடிந்துகொண்டிருக்கிறது. திடீரென எழுந்தாள்.

''என்னை மறந்திடுங்க..''

அவன் திடமாகக் கூறினான்: '' ராசாத்தி, என் முடிவைக் கேளும். நான் வாழ்ந்தாலும் செத்தாலும் அது உம்மோடு தான்.''

அவள் துடித்துப்போய் ஓடி முன்வந்தாள். தனது வலக்கரத்தை அவன் உதடுகளில் வைத்துத் தடுத்தாள்.

''தயது செய்து அப்படிச் சொல்லாதீர்கள். சா என்னோடு இருக்கட்டும்.''

அவள் வேகமாக வெளியேறிச் சயிக்கிலை எடுத்துக் கொண்டு தெருவில் விரைந்தாள்.

## 17

இருந்தாற்போல அதிகாலை மழை பெய்யத் தொடங்கி விட்டது. பருவந்தப்பிய மழை. முற்றத்து மண் மணக்கத் தொடங்கியது. வளவில் மேய்ச்சலிற்குக் கட்டியிருந்த ஆடுகளை சின்னக்கா ஓடிப்போய் அவிழ்த்துக் கட்டிக்கொண்டிருந்தாள்.

''எல்லாம் காலந்தப்பி நடக்குது..'' என்றபடி அம்மா மணிவண்ணனிடம் கோப்பித்தம்ளரை நீட்டினாள். அவன் வாங்கிக்கொண்டான்.

''தம்பி, இன்னுமொரு மாதமாவது இருக்கக்கூடாதா? வந்ததும் வராததுமாகப் போகிறன் என்று நிக்கிறியே?'' தாயின் குரலில் ஏக்கம். அவன் தாயைப் பார்த்துச் சிரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒருவிதமாகக் கொழும்புக்குப் போவதற்கு இராணுவம் அனுமதி தந்திருக்குது. நாளையின்டைக்குப் போகாவிட்டால் பிறகு கஷ்டம் அம்மா. கனடாவிலிருந்து இலங்கைக்கு விசா எடுத்து வந்துவிடலாம். ஆனால் எங்கட யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு பாஸ் எடுப்பது வலு கஷ்டம்.. நான் நினைக்கிறன் யாழ்ப்பாணம் ஒரு தனிநாடாகி விட்டதென.. எங்க நாட்டிற்குள்ளேயே நடமாட எங்களுக்கு விசா தேவைப்படுகுது. தீவுக்குள்ள ஒரு தனித்தீவாக யாழ்ப்பாணக் குடாநாடு வந்திட்டுது.''

''இது இன்று நேற்று வந்ததே தம்பி, பத்து வரியமாக இந்த நிலைதான். பிரயாணம் என்பது பெரும் கஷ்டமாகிவிட்டது. இப்ப இன்னமும் சிரமம். அங்காலை ஆயிரக்கணக்கான பேர் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வர முடியாமல் இருக்கினம். போகட்டும், அதுதான் விதியாகிப் போச்சுது. உன்னை நான் தடுக்கவில்லை. சந்தோசமாகப் போயிட்டு வா அப்பு.'' அம்மா விழிகளைச் சேலைத்தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் தங்க வேண்டுமென்ற ஆவலுடன் தான் அவன் வந்தான். ஆனால் இங்கு நிகழ்ந் தேறிவிட்ட சம்பவங்கள் அவன் மனதை மாற்றிவிட்டன. அவனால் இங்கிருக்க முடியாது. இன்னமும் அவன் இராசலிங்கத்தை நேருக்கு நேர் சந்திக்கவில்லை. சந்திக்கக் கூடாதென்று தான் இப்பொழுது அவன் விரும்புகிறான். சயிக்கிலில் அப்பாவை ஏற்றியபொழுது அவன் சந்தித்த அந்தக் கொடூரம் வாய்ந்த விழிகளை அவன் மீண்டும் சந்திக்க விரும்பவில்லை. நியாயம் யார் பக்கமிருந்தாலும் சரி. கொல்லப் பட்டவர் அவன் தந்தை. விதி எப்படி விளையாடிவிட்டது.

இருந்தாற்போல ராசாத்தியின் நினைவு எழுகிறது. அவள் ஒப்புக் கொண்டிருந்தால் சிலவேளை அவன் தங்கியிருப்பானோ? அவன் காதலை அவள் ஏற்றுக்கொள்ளவிலை. எவ்வளவு பெரும் ஏமாற்றம்?

மழை தூறிக்கொண்டிருக்கின்றது. முற்றத்தில் தேங்கக் கடியளவிற்கு இன்னமும் நிலம் நனையவில்லை.

''சின்னக்கா எங்க?'' என்று மணிவண்ணன் தாயிடம் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவர் ஆமியிடம் பிடிபட்டதிலிருந்து அவள ஆமான சாப்பாடு, நித்திரையில்லை. எப்பவும் அழுதபடிதான். அப்படி அவருக்கு நடந்திருக்கக்கூடாது.''

''தானாகத் தேடிக்கொண்டது தான். அவனை விசாரித்தபின்னர் விட்டுவிடுவார்களென நினைக்கிறன். அப்படித் தான் எல்லாரும் சொல்லுகினம். காங்கேசன்துறையில் வைத்திருப்பதாக அறிவித்துவிட்டார்கள். அதனால் பயமில்லை என்கினம்.

இராசலிங்கத்தை மணிவண்ணன் அழைத்தவிதம் தாயாருக்குச் சற்றுக் கவலையைக் கொடுத்தது. வாழ்க்கையில் அவருக்கு ஏற்பட்ட பேரிழப்பிற்கு இராசலிங்கமும் காரணமாக இருந்துவிட்டான். மரணம் என்பது தடுக்க முடியாதது. நிர்ணயிக்கப்பட்டுவிட்டது போலத்தேடி வரும். அதற்கு ஒரு சாட்டுத்தான் வேண்டுமென அவள் எண்ணிக்கொண்டாள்.

மணிவண்ணனை எவ்விதத்திலும் சமாதானப் படுத்தி விடமுடியாது. இன்னமும் இரண்டு நாட்கள் தான் இங்கிருக்கன் போகின்றான். அவனைக் குழப்பக்கூடாது.

மணிவண்ணன் எழுந்திருந்தான். உள்ளே போய் றவுசரையும் சேர்ட்டையும் அணிந்து கொண்டு வந்தான்.

''வெளியில போய்விட்டு வாறன், அம்மா. ஊரையும் ஒருக்காச் சுற்றிப்பார்த்து விட்டு வாறன். இனி யாழப்பாணத்திற்கு எப்ப வருவேனோ?'' அவன் குரலில் ஏக்கந்தொனித்தது.

''ரவுன் பக்கம் போகாதை, தம்பி. இன்டைக்கு ஆரோ மினிஸ்ரா வாறாராம். சரியான கெடுபிடியாகவிருக்கும். உன்னட்ட அடையாள அட்டையுமில்லை. ஆமி அட்டையுமில்லை.'' என்று அம்மா எச்சரித்தாள். அவன் தலையை ஆட்டிவிட்டு சயிக்கில் தாவி ஏறிக் கொண்டான்.

அம்மன்கோயிலைக் கடந்து கந்தையா அம்மானின் தெருவில் ஏறியபோது எதிரில் ராசாத்தியும் இன்னொரு பெண்ணும் சயிக்கிலில் வந்து கொண்டிருந்தனர். கூட வந்த பெண்ணை அவனுக்குத் தெரியும். ஒரு நாள் ராசாத்தியைச் 'செல்வி' என்று கூப்பிட்டுப் பேசியவள். அவர்களைக் கண்டதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சற்றுத் தயங்கிச் சயிக்கிலை நிற்பாட்டினான். ஆனால் அவர்கள் அவனைப் பார்க்காது மாதிரிக் கடந்து சென்றனர். ராசாத்தி முகத்தைத் திருப்பிக்கொண்டு சென்றதாகப்பட்டது. அவனைச் சந்திக்க அவள் விரும்பவில்லையா? அவளை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. பெரும் புதிராக அவளிருக்கிறாள்?

'அப்படிச் சொல்லாதீர்கள். சா என்னோட இருக்கட்டும்.'

அவள் அவனிடம் கூறிய வார்த்தைகள் காதுகளில் ஒலிக்கின்றன. அதற்கு என்ன அர்த்தம்? அவன் நிலத்தில் ஊன்றிய காலை எடுத்து பெடலில் வைத்து மிதிக்கத் தொடங்கிய போது அவனருகில் ஒரு மோட்டார் சயிக்கில் வந்து நின்றது. அதில குருபாதமும் ஒரு பெண்ணும் இருந்தனர். மோட்டார் சயிக்கில் நின்றதும் பின்னால் அமர்ந்திருந்த பெண் கீழே இறங்கிக் கொண்டாள்.

''வாரும்..'' என்றான் மணிவண்ணன்: ''கலியாணத்திற்கு எனக்குச் சொல்லவில்லை.''

''ஒருத்தருக்கும் சொல்லவில்லை, மணி.''

''இவ தான் நீர் சொன்ன துளசியா?''

குருபாதத்தின் முகம் திடீரென மாற்றங்கண்டது. கவலை யுடன் சிரித்துச் சமாளிக்க முயல்வது தெரிந்தது.

''இல்லை. நான் அவர் மாமி மகள். அந்தக் கலியாணம் குழம்பிவிட்டது.'' என்று அப்பெண் சிரித்தாள். அவள் சிரிப்பில் ஓராயிரம் அர்த்தங்கள் மறைந்திருந்தன. மணிவண்ணன் வியப்புடன் குருபாதத்தைப் பார்த்தான்.

''அது பெரிய கதை. அதை விடு மணி. உன் அத்தானை விட்டுவிட்டார்களா?''

''அவனைத் தெரியுமா?''

''என்ன என்ன?''

''இல்லத் தெரியுமா என்டு கேட்டன்..''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தெரியும். நல்ல பழக்கம். எவ்வளவு திறமைசாலி தெரியுமா? அவன் பெரிய மெக்கானிக் மணி.''

''எவ்வளவு தான் திறமைசாலியென்றாலும் தீமையான மனிதனை அப்படிச் சொல்வது சரியில்லை. இந்த உலகத்தில் அதி உன்னதமானதென நான் கருதுவது மற்றவனுக்குத் தீங்கு செய்யாத ஒழுக்கத்தை தான்.''

குருபாதம் எதுவும் பேசவில்லை. அந்தப்பெண் இருவரையும் வியப்புடன் பார்த்தபடி நின்றிருந்தாள். அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''நான் நாளை மறுநாள் பயணம்..'' என்றான் மணிவண்ணன்.

''நான் இனிக்கனடாவிற்கு வருவதாகவில்லை. என் மனிசி எனக்கு இட்ட நிபந்தனை அது தான். இங்கு இருப்பதாகச் சத்தியம் செய்தால் தான் கலியாணம் செய்வன் என்றா. எனக்கும் அவ கேள்வி நியாயமாகப் பட்டது. கனடாவில் எங்கூட ஆக்கள் படுகிற பாட்டை ஒப்பிட்டுப் பார்த்தன். பச்சைத் தண்ணியைக் குடித்துக்கொண்டாவது யாழ்ப்பாண மண்ணில் இருக்க வேணும். எங்கட நாடு அற்புதமானது, மணி. இதற்கு நிகர் உலகத்தில் எதுவுமில்லை. எங்குமில்லை. எங்கட ஆத்மா இங்க தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புழுதித்தெரு, இந்த வெயில், வியர்வை, மரங்கள், கிணற்று நீர், துலா.. எங்குமே இங்கிருக்கிற நிம்மதி வராது மணி..'' அவன் பேசிக்கொண்டே போகிறான்.

ராசாத்தி ஒப்புக்கொண்டு இப்படியொரு நிபந்தனை இட்டிருந்தால் அவன் கூடத்தான் இங்கு தங்கிவிட்டிருப்பான். வாழ்க்கை பணத்துடன் நிறைவு பெற்றுவிடுமா? அதற்கப்பால் ஆத்மார்த்தமான இதயங்களின் பிணைப்புக்கு உலகத்தில் எதுவும் ஈடாகாது. மனம் விரும்பியவருடன் வறுமையோ பற்றாக் குறையோ எதுவாயினும் வாழ்வதற்கு நிகராக சொர்க்கம் எங்குமில்லை. இந்த மண்ணில் தான் சொர்க்கமிருக்கிறது. அது இல்லறத்தில் தான் இருக்கிறது.

''என்ன உன்னைக் குழப்பிவிட்டேனா மணி. உமக்கு ஒன்று நான் சொல்லுவன். கலியாணம் செய்து கொண்டு இங்கயே தங்கியிருந்துவிடு. கலியாணம் செய்வதானால் பெண்ணுக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரெல்லாம் அலையக்கூடாது. சொந்த மச்சானைத் தெரிந் தெடுத்துக்கொள். எங்கூட குறைநிறைகளை அறிந்திருப்பா.. அனுசரித்துப் போகத் தெரிந்திருப்பா.''

''உம்மட அனுபவம் போலும்..''

''கிட்டிய சொந்தத்திற்காக செய்தால் பிறகிற பிள்ளையன் குறைபாடாக இருக்குமென்கினம்..'' என்று அப்பெண் சிரித்தாள்.

''அதைப் பாரப்பம்'' என்று குருபாதம் சிரிக்க அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அவர்கள் விடைபெற்றுச் சென்றபின்னர் அவன் மனதில் ராசாத்தி நிறைந்து நின்றிருந்தாள். அவனைக் கண்டதும் திரும்பியும் பாராமல் அவள் எங்கே செல்கிறாள்? அவள் நடத்தையில் வித்தியாசம் தெரிகிறது.

எதிரில் தெரிந்த கந்தையா அம்மாணின் வீட்டிற்குள் சயிக்கிலுடன் நுழைந்தாள். அவனைக் கண்டதும் திரும்பியும் பாராமல் அவள் எங்கே செல்கிறாள்? அவள் நடத்தையில் வித்தியாசம் தெரிகிறது.

''ராசாத்தி எங்க போறா..?''

''தெரியவில்லை. ராத்திரி முழுவதும் முழித்திருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். கடும் யோசனை செய்தபடி திரிந்தாள். நான் என்னவென்று கேட்கவில்லை. ஏதோ உம்மட கேள்விக்கு தான் யோசித்திருப்பாள். உம்மில தம்பி, அளவுக்கு வலு விருப்பம் இருக்கிறது எனக்குத் தெரியும். சின்னப்பிள்ளை தானே? முடிவெடுக்க முடியாமல் தவிக்கிறாள். ஐயாவிற்கும் விருப்பம். உம்மடை அம்மாவிற்கும் இதில மறுப்பில்லை. ராராவா யோசித்து ஏதோ எழுதியிருக்கிறாள். உம்மட்ட ஒரு கடிதத்தைக் கொடுக்கச் சொல்லித் தந்துவிட்டுப் போறாள். நீயே அவரிட்ட கொடன் என்றன். இல்லை நீங்களே கொடுங்கோ என்றிட்டுப் போகிறாள். இரும் தம்பி, எடுத்து வாறன்.''

மணிவண்ணன் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. ராசாத்தி அவனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறாள். நேரில சொல்ல அவளால் முடியவில்லை. தன் விருப்பத்தைக் கடிதத்தில் எழுதியிருப்பாள். உண்மையில் அவன் அதிர்ஷ்டசாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் போல நல்ல ஒருத்தி அவன் மனைவியாக வருவதற்கு அவன் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

''இந்தாரும் தம்பி.. வாசியும் தேத்தண்ணி ஊத்திகொண்டு வாறன்.''

அவள் உள்ளே சென்றபின்னர் அவன் கடிதத்தைப் பார்த்தான். சற்றுப் பாரமாகவிருந்தது. மூன்று நான்கு பக்கங்கள் எழுதியிருப்பாள் போலும். தன் மனதைத் திறந்து கக்கியிருப்பாள். 'என்னுடனேயே தங்கிவிடுங்கள்' என்று கேட்டிருப்பாள்.

கடிதத்தை அவன் பிரித்தான்.

''என் இனிய மணி..'' எனக்கடிதம் தொடங்கியது.

இந்த மண்ணின் வரலாற்று நிகழ்வுகளை ஒவ்வொன்றாக அவனுக்கு எடுத்துச் சொல்லுமாப் போல எழுதியிருந்தாள். தமிழர்கள் இரண்டாந்தரப் பிரசைகளாக்கப்பட்ட வரலாற்றை எழுதியிருந்தாள். சாத்வீக உரிமைப் போராட்டங்கள் பயனற்றுப் போனவற்றைச் சுட்டிக்காட்டியிருந்தாள். காலத்திற்குக் காலம் செய்து கொள்ளப்பட்ட அரசியல் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப் பட்ட சங்கதிகளைச் சுட்டிக் காட்டியிருந்தாள். ஐம்பத்தி ஆறுகளிலிருந்து மாறி மாறி வந்து, தமிழ் மக்களையும் அவர்களது உடமைகளையும் காவு கொண்ட இனக் கலவரங்கள் பற்றி விபரித்திருந்தாள். தவிர்க்க முடியாத நிலையில் இளைஞர்கள் ஆயுதங்கள் ஏந்த நேர்ந்த சூழ்நிலையையும் அதன் விளைவாக நடந்துகொண்டிருக்கும் போராட்டங்களையும் அவள் அவனுக்கு விரிவாக எழுதியிருந்தாள். படிப்படியாகத் தாயகநிலம் பறிபோய்க் கொண்டிருப்பதை விபரித்திருந்தாள். நித்தம் அழுத்தங்களுக் கிடையில் மக்கள் வாழ நேர்ந்திருப்பதை உள்ளம் கரைய விபரித்திருந்தாள்.

மணிவண்ணனை வியப்பு ஆட்கொண்டது. இவற்றினை அவள் ஏன் எனக்கு எழுத வேண்டும்? அவன் எதிர்பார்க்கும் முக்கியமான விடயம் எங்கே?

கடிதத்தின் கடைசிப் பத்தியில் விழிகள் ஓடின.

''..உங்கள் இதயத்தை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். என் மீது நீங்கள் வைத்திருக்கும் அளவற்ற காதலைப் புரிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளாமல் இருக்க நான் ஜடமல்ல. ஆனால் உங்கள் காதலை ஏற்று உங்களுடன் வாழும் நிலையில் நானில்லை. என் காதல் என் மண்ணின் மேல் தான் முதலில் உள்ளது. அதற்கு ஒரு கடமையிருப்பதாக எனக்குப் படுகின்றது. என்னை மன்னித்து விடுங்கள். என்னை இனிமேல் நீங்கள் காணமாட்டீர்கள். தற்கொலையாளியாகக் காற்றிலே கலக்கப்போகிறேன். நாளைய பேப்பரைப் பார்த்ததும் எனக்காக நீங்கள் விடும் அந்தச் சொட்டு கண்ணீர் தான் என் வாழ்விற்கான நிறைவுப்பள்ளி. அடுத்த பிறப்பு என்று ஒன்றிருந்தால் அப்பிறப்பிலாவதுஉங்கள் மனம் விரும்பிய மனைவியாக வாழ்வேன்..''

''ஐயோ ராசாத்தி..'' என்று அவன் அலறினான். கடிதத்தை வீசியெறிந்து விட்டு விரைந்து முற்றத்தில் இறங்கினான். ''உன்னைச் சாகவிடமாட்டேன்.''

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்நிகழ்வு

தெருவெங்கும் இராணுவம் காவல் நின்றிருக்கிறது. சந்திக்குச் சந்தி கடுமையான பரிசோதனைக்கு மக்கள் உட்படுத்தப்படுகின்றனர். உயர்ந்த கட்டிடங்கள் சிலவற்றில் இராணுவம் நிலையெடுத்திருந்தது.

-அமைச்சர் வருகின்றார். ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்துவிடக்கூடாது.

குறுக்கும் நெடுக்குமாக இராணுவ வாகனங்கள் விரைந்து செல்கின்றன. அவற்றில் இருந்த இராணுவ அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகள் செவ்வனே இருக்கின்றனவா எனப் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டார்கள்.

ஓரிடத்தில் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நிறப் பேப்பர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. கட்டிடத்தின் வாசலில் நிறைகுடம் குத்துவிளக்குகள் மலர் அலங்காரங்களுடன் காத்திருக்கின்றன. நிறை குட மேசைக்குப் பக்கமாக தவில், நாதஸ்வரத்துடன் கலைஞர்கள் காத்திருக்கின்றனர். அமைச்சர் அவ்விடத்தில் வந்திறங்கியதும் மங்கல வாத்தியங்கள் முழங்கவிருக்கின்றன.

பலத்த பரிசோதனைக்குப் பின்னர் அனுமதிக்கப்பட்ட விருந்தினர்கள் கட்டிடத்தின் உட்புறக் கதிரைகளில் அமர்ந்திருக்கின்றனர். உயர் அதிகாரிகள் பலர் காணப்பட்டனர். கட்டிடத்தின் உள்ளேயும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. வாக்கிகளுடன் இராணுவ அதிகாரிகள் சிவில் உடையிலும் காணப்படுகின்றனர். எல்லாரிடமும் இனந்தெரியாத ஒருவித பதட்டம், அழுத்தம் தெரிகின்றது.

வீதியில் வேடிக்கை பார்க்க விரும்பும் மக்கள் தெரு வோரங்களில் காத்திருக்கின்றனர். அவர்களும் பலத்த பரிசோதனைக்குப் பின்னர் தான் அனுதிக்கப் பட்டிருக்கிறார்கள். உடல் முழுவதும் தடவிப் பரிசோதனை செய்யப் பட்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாற்போல வானத்தில் மிகத்தாழ்வாகக் ஹெலிகாப்டர் ஒன்று வடக்குப் பக்கமாக விரைகின்றது.

இருந்தாற்போலப் பரபரப்பு எழுகிறது. கிழக்குப் பக்கமிருந்து வாகன அணி ஒன்று வருவது தெரிகிறது. இராணுவ டிறக்குகள் இரண்டும் அதனைத தொடர்ந்து பிக்அப் வாகனங்கள் மூன்றும் வர, அவற்றினை அடுத்த கவச வாகனம் ஒன்று வருகிறது. அதனைத் தொடர்ந்து பஜேரோ ஜீப் ஒன்றும் அதனைத் தொடர்ந்து மேலும் பல வாகனங்களும் வருகின்றன.

வீடியோ காமராக்கள் இயங்குகின்றன. கட்டிடத்தின் வாசலில் பஜேரோ ஜீப் வந்து தரிக்கின்றது. ஒரு இராணுவ அதிகாரி ஓடி வந்து ஜீப்பின் கதவைத் திறக்க முயல்கிறார். அந்த நேரத்தில் எதிர்ப்பக்கமிருந்து ஒரு பெண் அந்த ஜீப்பை நோக்கி ஓடி வருகிறாள்.

''ராசாத்தி, வேண்டாம்'' என்று ஒரு இளைஞன் அலறியபடி பாய்ந்து வந்து அவள் கரத்தைப்பிடிக்க, அப்பெண் தன்னுடலில் பொருத்தப்பட்டிருந்த குண்டைச் செயல்பட வைக்கிறாள்.

கண்ணைப் பறிக்கும் பிரகாசமும் காதுகளைச் செவிடாக்கும் வெடிப்புச் சத்தமும் அவ்விடத்தில் எழுந்தது. உடல்கள் சிதறின. துப்பாக்கிகள் இயங்கின. எங்கும் அலறல். தெருவெங்கும் சடலங்கள். குருதிச் சேற்றில் தெரு நனைந்தது.

விண்ணில் எழுந்த துண்டிக்கப்பட்ட தலையொன்று நீண்ட தலைமுடியுடன் தெருவில் வந்து விழுந்தது. மண்ணை முத்தமிட்டது.

-முற்றும்-

(இருந்தோர் இருப்போர் எவரையும் இக்கதை குறிப்பிடவில்லை. அனைத்தும் கற்பனையே.)

■■■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யுத்தபூமி

இலங்கையில் இனமோதல்கள் வெடித்த நிலைமையில் இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்கவும் அங்கு அமைதியை நிலைநாட்டவும் சென்ற இந்தியப்படை அங்குத் தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட்டது என்பது இந்த நாவலின் பின்னணி.

கிட்டத்தட்ட செத்து வாழும் நிலைமையிலும் யாழ்ப்பாணத் தமிழர்கள் எப்படியெல்லாம் தங்கள் மண் மீது பற்றும் பாசமும் கொண்டிருந்தார்கள் என்பதை இந்த நாவல் சித்திரிக்கிறது.

இலங்கையில் பிரபலமான தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரான செங்கை ஆழியான் இந்த நாவலை யாழ்ப்பாண மண் வாசனையுடன் எழுதியுள்ளார். ஏற்கெனவே பல நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதியுள்ள செங்கை ஆழியான், இந்த நாவலையும் தெளிந்த நீரோடை நடையில் எழுதியுள்ளார்.

NCBH

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்
41-B, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை – 600 098.

ISBN: 81-234-0972-9
9 788123 409726
Code No. A 1399 Rs.50.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org